ஸு லை தஃவா நிலையம்
தொ.பே : 0112414488 ஃபெக்ஸ் : 2411733
த.பெ : 1419 ரியாத் :

# நற்குணங்களும் தீயபண்புகளும



தொகுப்பு : வெளிநாட்டவர் அழைப்புப் பிரிவு

# الصفات الحسنة والسيئة

# நற்குணங்களும் தீயபண்புகளும்

إعداد

قسم الترجمة بالمكتب

தொகுப்பு

மொழிபெயர்ப்புப் பிரிவு

ஸுலை இஸ்லாமிய அழைப்பு நிலையம்

بسم الله الرحمن الرحيم

# நற்குணங்கள் - الصفات الحسنة

## الإخلاص

## தூய எண்ணம்

**தூயஎண்ணம்** என்பது : வணக்கவழிபாடுகளை மசுபட்ட எண்ணங்கள், முதஸ்துதி போன்றவைகளை விட்டும் தூய்மைப்படுத்தி அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்வதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَمَا أُمِرُوا إِلاَّ لِيَعْبُدُوا اللهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ) البينة : ٥

கலப்பற்றவர்களாக அவனுக்கே கட்டுப்பட்டு, அல்லாஹ்வை வணங்குமாறு தவிர அவர்கள் ஏவப்படவில்லை. 98 : 5.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( قَالَ اللهُ تَعَالَى : أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيْهِ مَعِي غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ )

رواه مسلم برقم ٢٩٨٥.

இணையாளர்களின் இணையைவிட்டும் நான் மிகத்தேவையற்றவன், எவர் ஒரு வணக்கத்தைச் செய்து அதில் என்னுடன் வேறொருவரை இணைத்தால், அவரையும் அவரது இணையையும் நான் விட்டுவிடுவேன் என அல்லாஹு தஆலா கூறியதாக ரஸூ லுல்லாஹி

ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம் 2985.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( مَنْ سَمَّعَ سَمَّعَ اللهُ بِهِ وَمَنْ يُرَائِي يُرَائِي اللهُ بِهِ )

رواه البخاري برقم 6499 ومسلم برقم 2986 والترمذي برقم ٢٣٨١.

யார் விளம்பரத்திற்காக நற்செயல் புரிகிறாரோ அவர் பற்றி அல்லாஹ் விளம்பரப்படுத்துவான். யார் முகஸ்துதிக்காக நற்செயல் புரிகிறாரோ அவரை அல்லாஹ் அம்பலப்படுத்துவான் என்று ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி 6499, முஸ்லிம் 2986, திர்மிதி 2381.

எனவே, எவர் தன்னைப் பிரபல்யப்படுத்துவதற்கும், மக்கள் தன்னைப் புகழ்ந்து பேசவேண்டும் என்பதற்காகவும் வணக்கவழிபாடுகளைச் செய்கிறாரோ, அவரின் உண்மை நிலையை அல்லாஹ் வெளிப்படுத்தி அவரை கேவலப்படுத்திவிடுவான். மேலும் எவர் மக்களின் புகழை எதிர்பார்த்து அவர்கள் பார்ப்பதற்காக வணக்கவழிபாடுகளைச் செய் கிறாரோ, அவர் அல்லாஹ்வுக்காக வணக்கவழிபாடுகளைச் செய்ய வில்லை என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தி கேவலப்படுத்துவான் அதனால், அவர் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகுவதோடு மனித ர்களின் பழிப்புக்கும் உள்ளாகின்றான்.

எனவே, ஒரு முஸ்லிம் மனிதர்களின் புகழ்ச்சியை எதிர்பாராது அல்லாஹ்வுக்காக மாத்திரம் வணக்கவழிபாடுகளைச் செய்ய வேண் டும். மனிதர்கள் எவ்விதமான தீமையையோ நன்மையையோ செய்ய

ஆற்றலற்றவர்கள். அல்லாஹ் மாத்திரமே நன்மை, தீமையை ஏற்படுத்த ஆற்றல்பெற்றவன். மேலும், நன்மைக்கு நன்மையை கூலியாகவும், தீமைக்கு மன்னிப்பையும் அளிப்பவன் அவன் மாத்திரமே. அவனைத் தவிர வேறு எவருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. எவருடைய எண்ணம் மக்கள் அவரைப் புகழ வேண்டும் என்று இருக்குமோ, அவரை இவ்வுலகிலோ மறுமையிலோ அல்லாஹ் கேவலப்படுத்துவான். அவர் எந்த எண்ணத்தை எண்ணுகிறாரோ அவருக்கு அல்லாஹ் அந்த எண்ணத்திற்கேற்ற ஆடையை அணிவிப்பான்.

ஃபுழைல் இப்னு இயாழ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள் :மனிதர்களுக்காக அமல்செய்வதை விட்டுவிடுவது முகஸ்துதியாகும் மனிதர்களுக்காக அமல்செய்வது இணைவைத்தலாகும். இஹ்லாஸ் என்னும் தூயஎண்ணம் என்பது இவ்விரு நிலைகளையும் விட்டு விடுபட்டு இருப்பதாகும்.

ஒரு வணக்கத்தைச் செய்வதற்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன

1- தூயஎண்ணம். அதாவது அல்லாஹ்வுக்கு மாத்திரமே வணக்கத்தைச் செய்தல்.

2- நபி ﷺ அவர்களைப் பின்பற்றி செய்தல். அதாவது அந்த வணக்கத்தை நபி ﷺ அவர்கள் எப்படி செய்தார்களோ அல்லது செய்யுமாறு ஏவினார்களோ அந்த முறைப்படி செய்தல்.

இவ்விரு நிபந்தனைகளையும் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தில் அல்லாஹு தஆலா ஒன்றிணைத்துக் கூறியுள்ளான் :

( فَمَنْ كَانَ يَرْجُو لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلاً صَالِحًا وَلاَ يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا )

الكهف : ١١٠.

எவர் தனது இரட்சகனின் சந்திப்பை ஆதரவு வைக்கிறாரோ அவர் நல்லறம் செய்யட்டும். மேலும், தனது இரட்சகனின் வணக்கத்தில் எவரையும் இணையாக்காதிருக்கட்டும். 18 : 110.

# الأسوة الحسنة

## அழகிய முன்மாதிரி

அல்லாஹுு தஆலா கூறுகின்றான் :

( لَقَدْ كَانَ لَكُمْ فِي رَسُوْلُ اللهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِمَنْ كَانَ يَرْجُو اللهَ والْيَوْمَ الآخِرَ وَذَكَرَ اللهَ كَثِيْرًا) الأحزاب : ٢١.

உங்களில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் நினைவுகூறுவோருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் நிச்சயமாக அழகிய முன்மாதிரி இருக்கின்றது. 33 : 21.

ஒரு முஸ்லிம் நபி ﷺ அவர்களை சொல், செயல் மற்றும் அனைத்து நிலைமைகளிலும் தனது முன்மாதிரியாகப் பின்பற்றி நடத்தல் அவசியம் என்பதற்கு இந்த அல்குர்ஆன் வசனம் ஒரு பெரும் அடிப்படையாக விளங்குகிறது.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ ) رواه مسلم

எமது கட்டளை இல்லாத ஒரு செயலை ஒருவர் செய்தால், அது மறுக்கப்படக்கூடியதாகும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

நபி ﷺ அவர்கள் தனது மனஇச்சைப்படி மார்க்க விஷயங்கள் எதையும் கூறமாட்டார். அவைகள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வஹீ என்னும் இறைச்செய்தி மூலமாகவே அவர்களுக்கு அறிவிக்கப் படுகின்றன. எனவே, ஒரு முஸ்லிம் தனது எல்லாக் காரியங்களிலும் நபி ﷺ அவர்களைப் பின்பற்றி நடப்பதில் மிக கவனம் செலுத் தல் அவசியமாகும். நபி ﷺ அவர்கள் வழியில் மாத்திரமே மார்க க விடயங்களை எடுக்கவேண்டும். அவர்கள்தான் மிகச்சிறந்த முன் மாதிரியாகும். எனவே, ஒருவர் தனது நண்பனை தெரிவு செய்வதிலும் அவர் நபி ﷺ அவர்களது நல்வழி நடக்கக்கூடியவராக இருக் கின்றாரா என்பதைக் கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( الْمَرْءُ عَلَى دِيْنِ خَلِيْلِه فَلْيَنْظُرْ أَحَدُكُمْ مَنْ يُخَالِلْ )

رواه أبوداود والترمذي

ஒரு மனிதன் தனது நண்பனின் வழியிலேயே இருப்பான். எனவே, உங்களில் ஒருவர் தான் எவருடன் நட்புவைத்துள்ளார் என்பதை பார்த்துக் கொள்ளட்டும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் : அபூதாவூத், திர்மிதி

எனவே, நாம் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களையும், அவர்கள் வழிநடந்தவர்களையும் பின்பற்றி நடக்கவேண்டும்.

# إفشاء السلام

## ஸலாமைப் பரப்புதல்

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَأُدْخِلَ الَّذِيْنَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الأَنْهَارُ خَالِدِيْنَ فِيْهَا بِإِذْنِ رَبِّهِمْ تَحِيَّتُهُمْ فِيْهَا سَلاَمٌ ) إبراهيم : ٢٣.

நம்பிக்கை கொண்டு நல்லறங்களும் புரிந்தோர் சுவனச்சோலைகளில் நுழைவிக்கப்படுவர். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். தமது இரட்சகனின் அனுமதிகொண்டு அவர்கள் அதிலே நிரந்தரமாக இருப்பார்கள். ஸலாம் (சாந்தி உண்டாகட்டும்) என்பதே அதில் அவர்களின் காணிக்கையாகும். 14 : 23.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَنَادَوا أَصْحَابَ الْجَنَّةِ أَنْ سَلاَمٌ عَلَيْكُمْ لَمْ يَدْخُلُوهَا وَهُمْ يَطْمَعُوْنَ ) الأعراف : ٤٦

(சிகரங்களில் இருக்கும்) இவர்கள் சுவர்க்கவாசிகளை அழைத்து ‘ உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும் என்று கூறுவார்கள். (சிகரங்களில் இருக்கும்) இவர்கள் இன்னும் சுவர்க்கத்தில் நுழையவில்லை எனினும் (அதில் நுழைய) அவர்கள் ஆசைப்படுகின்றனர். 7 : 46.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( لاَ تَدْخُلُوا الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا وَلاَ تُؤْمِنُوا حَتَّى تَحَابُّوا أَوَلاَ أَدُلُّكُمْ عَلَى شَيْءٍ إِذَا فَعَلْتُمُوهُ تَحَابَبْتُمْ ؟ أَفْشُوا السَّلاَمَ بَيْنَكُمْ ) رواه مسلم برقم 54.

நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவனத்தில் நுழைய மாட்டீர்கள், நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாதவரை ஈமான் கொண்டவர்களாக ஆக மாட்டீர்கள். உங்களுக்கு நான் ஒரு விஷயத்தை

அறிவித்துத் தரட்டுமா ? அதனை நீங்கள் கடைபிடித்தால் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துபவர்களாக ஆவீர்கள்! (அவ்விஷயமாகிறது) ஸலாமை உங்களுக்கு மத்தியில் பரப்புங்கள் (உங்களுக்கிடையே அதிகமாக ஸலாம் கூறிக்கொள்ளுங்கள்) ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம் 54.

முஃமினைத் தவிர வேறு எவரும் சுவர்க்கம் நுழைய மாட்டார், அன்பு, நேசம், வேற்றுமை இன்றி ஒற்றுமையாக இருத்தல், முஃமின்களுக்கு மத்தியில் பொறாமை, குரோதம் போன்ற தீயதன்மைகளை விட்டும் உள்ளம் சுத்தமாக இருத்தல் மற்றும் முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்பு, நேசம் ஏற்படுவதற்கு பயன்மிக்க வழியானது அவர்களுக்கு மத்தியில் ஸலாமை பரப்புதலாகும் போன்ற பல படிப்பினைகளை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது. மேலும், ஸலாம் என்பது பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, அச்சமற்ற அமைதி நிலை, நிம்மதி, மிருதுத்தன்மை, பிறருக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற அழகிய அர்தங்களை அதனுள் உள்ளடக்கியிருப்பதோடு, அது அமைதி, நேசம் மற்றும் சகோதரத்துவ உயிரோட்டத்தை பரப்பும் முகவரியாகவும் விளங்குகிறது. எனவே, ஒரு முஸ்லிம் தான் செல்லும் இடமெல்லாம் ஸலாமை பரப்பும் பண்புடையவராக இருக்க வேண்டும். அதனால் மற்றவர்கள் இவரால் தங்களுக்கு எந்த தீமையும் ஏற்படாது என்று நம்பிக்கை கொள்வதோடு, இவரது நல் எண்ணத்தையும் அறிந்துகொள்வார்கள்.

## ஸலாமுடன் தொடர்புடைய சில ஒழுக்கங்கள் :

1. முதலில் யார் ஸலாம் கூற வேண்டும் ?

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ : ( يُسَلِّمُ الرَّاكِبُ عَلَى الْمَاشِي وَالْمَاشِي عَلَى الْقَاعِدِ وَالْقَلِيلُ عَلَى الْكَثِيرِ ) متفق عليه. وفي رواية للبخاري : (وَالصَّغِيرُ عَلَى الْكَبِيرِ ).

வாகனத்தில் சவாரி செய்பவர் நடந்து செல்பவருக்கு ஸலாம் கூறுவார், நடந்து செல்பவர் அமர்ந்து இருப்பவருக்கு ஸலாம் கூறுவார், சிறுகூட்டத்தினர் அதிகமானவர்களுக்கு பெரும் கூட்டத்தினருக்கு ஸலாம் கூறுவர் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி முஸ்லிம் .

புகாரியின் மற்றுமோர் அறிவிப்பில் : சிறுவர் பெரியவருக்கு ஸலாம் கூறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. அடிக்கடி சந்திப்பவருக்கு மீண்டும் ஸலாம் கூறுதல்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ : ( إِذَا لَقِيَ أَحَدُكُمْ أَخَاهُ فَلْيُسَلِّمْ عَلَيْهِ فَإِنْ حَالَتْ بَيْنَهُمَا شَجَرَةٌ أَوْ جِدَارٌ أَوْ حَجَرٌ ثُمَّ لَقِيَهُ فَلْيُسَلِّمْ عَلَيْهِ ) رواه أبو داود

உங்களில் ஒருவர் தம் சகோதரரைச் சந்தித்தால் அவருக்கு ஸலாம் கூறட்டும். அவ்விருவருக்கும் மத்தியில் ஒரு மரமோ ஒரு சுவரோ அல்லது ஒரு கல்லோ குறுக்கிட்டு, பின்னர் அவர் அவரை மீண்டும் சந்திப்பாரானால், அப்பொழுது அவர் அவருக்கு (மீண்டும்) ஸலாம் கூறட்டும் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அபூதாவூத்.

### 3. ஸலாம் கூறும் போது தவிர்க்க வேண்டிய வார்த்தை.

عَنْ أَبِي جُرَيٍّ الْهُجَيْمِيِّ ﷺ قَالَ : أَتَيْتُ رَسُولَ اللهِ ﷺ فَقُلْتُ : عَلَيْكَ السَّلَامُ يَا رَسُولَ اللهِ. قَالَ : ( لاَ تَقُلْ عَلَيْكَ السَّلَامُ، فَإِنَّ عَلَيْكَ السَّلَامُ تَحِيَّةُ الْمَوْتَى) رواه أبوداود والترمذي وقال : حديث حسن صحيح.

அபூ ஜுரைய்யி அல் ஹுஜைமீ ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

நான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்து, ' அலைகஸ் ஸலாம் யாரஸூலல்லாஹ் 'என்று கூறினேன். அதற்கு அவர்கள் ' அலைகஸ் ஸலாம்' என்று கூறாதீர். ஏனெனில் அவ்வாறு கூறுவது மரணித்தவர்களுக்கு கூறப்படும் ஸலாமாகும் எனக் கூறினார்கள்.
நூல்கள் : அபூதாவூத், திர்மிதி

### 4. வீட்டில் நுழையும் போது ஸலாம் கூறுதல்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( فَإِذَا دَخَلْتُمْ بُيُوتًا فَسَلِّمُوا عَلَى أَنْفُسِكُمْ تَحِيَّةً مِنْ عِنْدِ اللهِ مُبَارَكَةً طَيِّبَةً ) سورة النور : ٦١

நீங்கள் வீடுகளில் நுழையும் போது, அல்லாஹ்விடமிருந்துள்ள தூய்மையான பாக்கியம் பொருந்திய காணிக்கையாக உங்களின் மீது ஸலாம் கூறிக் கொள்ளுங்கள். 24 : 61.

عَنْ أَنَسٍ ﷺ قَالَ : قَالَ لِي رَسُولُ اللهِ ﷺ : ( يَا بُنَيَّ إِذَا دَخَلْتَ عَلَى أَهْلِكَ فَسَلِّمْ، يَكُنْ بَرَكَةً عَلَيْكَ وَعَلَى أَهْلِ بَيْتِكَ )

رواه الترمذي وقال : حديث حسن صحيح.

அனஸ் ﷺ அவர்கள் கூறுகிறார்கள் : ரஸூ லுல்லாஹ்

ﷺ அவர்கள் எனக்குக் கூறினார்கள் : என் அன்பு மகனே! நீ உன் குடும்பத்தாரிடம் சென்றால், அவர்களுக்கு ஸலாம் கூறுவா யாக. அது உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் பரகத்தாக (அபிவி ருத்தியாக) இருக்கும்.

நூல் : திர்மிதி.

5. சிறுவர்களுக்கு ஸலாம் கூறுதல்.

عَنْ أَنَسٍ رضي الله عنه أَنَّهُ مَرَّ عَلَى صِبْيَانٍ فَسَلَّمَ عَلَيْهِمْ وَقَالَ : كَانَ رَسُوْلُ اللهِ ﷺ يَفْعَلُهُ

رواه البخاري ومسلم.

அனஸ் ﷺ அவர்கள் ஒரு முறை சிறுவர்களுக்கு அருகில் சென்றார்கள், அப்பொழுது அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள்.

மேலும் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் இவ்வாறு செய்பவர்களா க இருந்தார்கள் எனக் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

## الأمر بالمعروف والنهي عن المنكر

## நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல்

நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் அல்லாஹு தஆலாவால் தனது வேதமாகிய அல்குர்ஆனில் கடமையாக்கப்பட்ட கடமைகளில் ஒன்றாகும். நேர்வழியை விட்டும் தடம் பிரண்டவன் அதைக்கொண்டே நேர்வழியில் நடப்பான், பாவங்கள் மற்றும் குற்றசெயல்களில் ஈடுபாடு கொண்டு பாவியானவன் அச்சமுற்று அவற்றை விட்டும் விலகி

நடப்பதும் அதைக் கொண்டே. மேலும், தந்திர உபாயங்களில் ஈடு படுபவனும் அதைக் கொண்டே அச்சம் பெற்று அத்தீய பண்பை விட்டு விடுவான். நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனால், சில இஸ்லாமிய அறிஞ ர்கள் இதனை இஸ்லாத்தின் ஆறாவது கடமையாக கருதுகின்றனர்

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَلْتَكُنْ مِنْكُمْ أُمَّةٌ يَدْعُوْنَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ) سورة آل عمران : ١٠٤.

நலவின் பால் (மக்களை) அழைத்து, நன்மையை ஏவி, தீமையை விட்டும் தடுக்கும் ஒரு கூட்டம் உங்களில் இருக்கட்டும். அவர்கள் தாம் வெற்றியாளர்கள். 3 : 104.

மேலும் அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللهِ ) سورة آل عمران : ١١٠.

மனிதர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்க ள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்)நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள் தீமையை விட்டும் தடுக்கின்றீர்கள். மேலும், நீங்கள் அல்லாஹ்வை யும் நம்பிக்கை கொள்கின்றீர்கள். 3 : 110.

மேலும் அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( الَّذِيْنَ إِنْ مَكَّنَّاهُمْ فِي الأَرْضِ أَقَامُوا الصَّلاَةَ وَآتَوُا الزَّكَاةَ وَأَمَرُوا بِالْمَعْرُوْفِ وَنَهَوا عَنِ الْمُنْكَرِ وَلِلَّهِ عَاقِبَةُ الأُمُوْرِ ) سورة الحج : ٤١.

இவர்களுக்கு நாம் பூமியில் வசதியை ஏற்படுத்தினால் அவர்கள் தொழுகையை நிலைநாட்டி, ஸகாதையும் கொடுத்து, நன்மையை

ஏவி, தீமையை விட்டும் தடுப்பார்கள். காரியங்களின் முடிவு அல்லாஹ்விடமே இருக்கும். 22 : 41.

இந்த சமுதாயத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் ஒரு கூட்டத்தினர் இருந்தாக வேண்டும் என்பதை மேற்கூறப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்கள் வலியுறுத்துகிறது. அதே வேளை இந்த சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனது சக்திக்கு உட்பட்ட விதத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது அவர்மீது கட்டாயக் கடமையாகும். இதனை பின்வரும் நபிமொழி வலியுறுத்துகிறது

عَنْ أَبي سَعِيْدٍ الْخُدْرِي ؓ قَالَ سَمِعْتُ رَسُوْلَ الله ﷺ يَقُوْلُ :- ( مَنْ رَأى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذَلِكَ أَضْعَفُ الإِيْمَانِ ) رواه مسلم.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறத் தாம் செவிமடுத்ததாக

அபூஸயீத் அல்குத்ரீ ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள் : உங்களில் ஒருவர் தீமையைப் பார்த்தால் அதனை அவர் தம் கரத்தால் தடுக்கட்டும், அவர் அதற்குச் சக்தி பெறாவிட்டால் தம் நாவால் தடுக்கட்டும், அதற்கும் அவர் சக்தி பெறாவிட்டால் தம் உள்ளத்தால் அதனை வெறுக்கட்டும். இதுவே ஈமானின் மிகப் பலவீனமான நிலையாகும்.

நூல் : முஸ்லிம்.

وفي رواية ابْنِ مَسْعُوْدٍ ؓ ( وَلَيْسَ وَرَاءَ ذَلِكَ مِنَ الإِيمَانِ حَبَّةُ خَرْدَلٍ )

رواه مسلم.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ﷺ அவர்களின் அறிவிப்பில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது : (இவைகளுக்குப் பின் ஈமானில் நின்றும் கடுகளவும் இருப்பதில்லை).

நூல் : முஸ்லிம்

عَنْ حُذَيْفَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ : ( وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَتَأْمُرُنَّ بِالْمَعْرُوْفِ وَلَتَنْهَوُنَّ عَنِ الْمُنْكَرِ أَوْ لَيُوْشِكَنَّ اللهُ أَنْ يَبْعَثَ عَلَيْكُمْ عِقَابًا مِنْهُ ثُمَّ تَدْعُوْنَ فَلاَ يُسْتَجَابُ لَكُمْ ) رواه الترمذي وقال : حديث حسن.

என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக நிச்சயமாக நீங்கள் நன்மையை ஏவி வர வேண்டும், நிச்சயமாக நீங்கள் தீமையைத் தடுத்து வர வேண்டும். இல்லையெனில் அல்லாஹ் உங்கள் மீது தன் வேதனையை இறக்கி வைக்கக் கூடும். பின்னர் நீங்கள் அவனை (துஆவின் மூலம்) அழைப்பீர்கள் (ஆனால்) உங்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

நூல் : திர்மிதி.

**நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதை விட்டுவிடுவது அல்லாஹ்வின் சாபத்தை ஏற்படுத்தும் காரியமாகும்.**

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( لُعِنَ الَّذِيْنَ كَفَرُوا مِنْ بَنِي إِسْرَائِيْلَ عَلَى لِسَانِ دَاودَ وَعِيْسَى ابْنِ مَرْيَمَ ذَلِكَ بِمَا عَصَوا وَكَانُوا يَعْتَدُوْنَ ۞ وَكَانُوا لاَ يَتَنَاهَوْنَ عَنْ مُنْكَرٍ فَعَلُوهُ لَبِئْسَ مَا كَانُوا يَفْعَلُوْنَ )

سورة المائدة : ٧٨، ٧٩.

இஸ்ராஈலின் சந்ததிகளில் நிராகரித்தோர், தாவூத், மற்றும் மர்யமின் மகன் ஈஸா ஆகியோரின் நாவால் சபிக்கப்பட்டனர். ஏனெனில், அவர்கள் மாறு

செய்து, வரம்பு மீறிக்கொண்டிருந்ததே இதற்குக் காரணமாகும் ۞ அவர்கள் செய்து கொண்டிருந்த தீமையை விட்டும் அவர்கள் ஒருவரை யொருவர் தடுக்காதிருந்தனர். அவர்கள் செய்து கொண்டிருந்தது மிகக் கெட்டதாகும். 5 : 78, 79.

**நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது எவர்கள் மீது கடமையாகும் ?**

வீட்டில் தந்தை தனது கையாலும், நாவாலும், ஒரு நண்பன் தனது சகநண்பனுக்கு தனது நாவாலும், மனதாலும் மற்றும் ஒரு நாட்டுத் தலைவர் தனது கையாலும், நாவாலும் என ஒவ்வொருவரும் தனது தகுதிக்கும், நிலைக்கும் ஏற்றவாறு நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது கட்டாயக் கடமையாகும்.

**நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்வது கட்டாயமாகும்.**

- நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதற்கு முன், அதுபற்றிய மார்க்க அறிவை பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில், நன்மையை ஏவுவதனால் அல்லது தீமையைத் தடுப்பதனால் அதைவிடவும் ஒரு பெரும் தீமை உருவாகி குழப்பங்கள் உண்டாகும் நிலை உருவாகுவதற்கு வாய்ப்பக்கள் அதிகம்

- நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதில் மிருதுவான முறையை கடைபிடித்தல்.

இதில் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எமக்கு மிகப் பெரும் முன்மாதிரியானவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் சில சொல்,செயல்களை கீழே பார்க்கலாம்.

1- எந்த விடயத்தில் மிருதுத்தன்மை கையாளப்படுகிறதோ, அது அழகானதாக இருக்கும். எந்த விடயத்தில் மிருது த்தன்மை நீக்கப்படுகிறதோ, அது அலங்கோலமாக இருக்கும் என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினீர்கள்.

2- ஒருவர் தொழுகையை முறைதவறித் தொழுதார். அவரை ப் பார்த்து ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார் கள் : திரும்பிச் சென்று உமது தொழுகையை மீண்டும் தொழுவீராக. ஏனெனில், நீர் முறையாகத் தொழவில் லை. இது தவிர அவரை ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் அதட்டவோ அல்லது கண்டிக்கவோ வில்லை.

3- ஒரு முறை ஓர் கிராமப்பிரதேச அரபியொருவர் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களின் முன்நிலையிலேயே மஸ்ஜிதுக்குள் சிறுநீர் கழித்த போது, ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் தனது ஸஹாபாக்க ளுக்கு கூறினார்கள் : அந்த சிறுநீரின் மீது ஒரு வாளி தண்ணீரை ஊற்றிவிடுங்கள். இது தவிர அவரை கண்டி க்கவோ அல்லது அதட்டவோவில்லை.

இதுவே உலகத்தாருக்கு அருளாக அனுப்பப்பட்ட ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களின் அழகிய வழியாகும்.

## الأَمَانَةُ

## நம்பிக்கை

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّا عَرَضْنَا الأَمَانَةَ عَلَى السَّموَاتِ وَالأَرْضِ وَالْجِبَالِ فَأَبَيْنَ أَنْ يَحْمِلْنَهَا وَأَشْفَقْنَ مِنْهَا وَحَمَلَهَا الإِنْسَانُ إِنَّهُ كَانَ ظَلُوْمًا جَهُوْلاً ) سورة الأحزاب : ٧٢.

நிச்சயமாக நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் இந்த அமானிதத்தை எடுத்துக்காட்டினோம். அதைச் சுமப்பதற்கு அவை மறுத்து, அது பற்றிப் பயந்தன. மனிதனோ அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் பெரும் அநியாயக்காரனாகவும் அறிவீனனாகவும் இருக்கின்றான். 33 : 72.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ اللهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الأَمَانَاتِ إِلَى أَهْلِهَا ) سورة النساء : ٥٨.

அமானிதங்களை அதற்குரியோரிடம் ஒப்படைத்து விடுமாறு உங்களுக்கு அல்லாஹ் கட்டளையிடுகின்றான். 4 : 58.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( إِذَا ضُيِّعَتِ الأَمَانَةُ فَانْتَظِرِ السَّاعَةَ) قَالَ : كَيْفَ إِضَاعَتُهَا ؟ قَالَ : ( إِذَا وُسِدَ الأَمْرُ إِلَى غَيْرِ أَهْلِهِ فَانْتَظِرِ السَّاعَةَ)

رواه البخاري

அபூஹுரைரா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள் : (ஒருவர் ரஸூலுல்லாஹி ﷺ அவர்களிடம் வந்து, மறுமைநாளைப் பற்றி கேட்டார். அதற்கு) ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் : நம்பகத் தன்மை பாழ்படுத்தப்பட்டால் மறுமை நாளை நீர் எதிர்பார்க்கலாம் எனக் கூறினார்கள். அது எவ்வாறு பாழ்படுத்தப்படும் என்று அவர் கேட்டார். அதற்கு ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் தகுதியற்றவனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படும் போது, நீர் மறுமை நாளை எதிர்பாரும் என்று பதிலளித்தார்கள்.

நூல் : புகாரி.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( أَدِّ الأَمَانَةَ إِلَى مَنِ ائْتَمَنَكَ وَلاَ تَخُنْ مَنْ خَانَكَ ) رواه أبو داود والترمذي

உன்னை நம்பியவருக்கு நம்பகத் தன்மையை நிறைவேற்றுவாயாக, உனக்கு மோசம் செய்தவருக்கு நீர் மோசம் செய்யாதீர் என

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : அபூதாவூத், திர்மிதி

عَنْ أَبِي هُرَيْرَةَ ؓ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ : ( آيَةُ الْمُنَافِقِ ثَلَاثٌ : إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ ) رواه البخاري ومسلم

நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும் : அவன் பேசினால் பொய்யுரைப்பான். அவன் வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். அவனை நம்பினால் மோசம் செய்வான் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

மனிதனின் இயல்நிலை மாசுபடாதும், அவன் தனது மனோ ஆசையை பின்பற்றாதும் இருக்கும் வரை அவனிடம் அமானிதத்தை ப் பேணும் பண்பு காணப்படும்.

( إِنَّا عَرَضْنَا الأَمَانَةَ عَلَى السَّمٰوَاتِ وَالأَرْضِ وَالْجِبَالِ فَأَبَيْنَ أَنْ يَحْمِلْنَهَا وَأَشْفَقْنَ مِنْهَا وَحَمَلَهَا الإِنْسَانُ إِنَّهُ كَانَ ظَلُوْمًا جَهُوْلاً ) سورة الأحزاب : ٧٢.

நிச்சயமாக நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் இந்த அமானிதத்தை எடுத்துக்காட்டினோம். அதைச் சுமப்பதற்கு அவை மறுத்து, அது பற்றிப் பயந்தன. மனிதனோ அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் பெரும் அநியாயக்காரனாகவும் அறிவீனனாகவும் இருக்கின்றான். 33 : 72.

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் இமாம் குர்துபீ அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :

அமானிதம் என்பது மார்க்கத்தின் எல்லாக் கடமைகளையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகும் என்பதே மார்க்க அறிஞர்களின் கூற்றுகளில் சரியான கூற்றாகும். இதனையே பின்வரும் குர்ஆன் வசனம் எடுத்துக் கூறுகிறது.

( وَالَّذِيْنَ هُمْ لأَمَانَاتِهِمْ وَعَهْدِهِمْ رَاعُوْنَ ) سورة المؤمنون : ٨.

மேலும், அவர்கள் தமது அமானிதங்களையும், தமது வாக்குறுதிக ளையும் பேணுவார்கள். 23 : 8.

அமானிதம் மற்றும் வாக்குறுதி என்பன ஒரு மனிதன் மீது கடமையாகும் தனது மார்க்க மற்றும் உலக ரீதியான சொல், செயல் சார்ந்த எல்லாக் கடமைகளையும் உள்ளடக்கிக் கொண்ட வார்த்தைகளாகும். எனவே, மனிதர்களுடன் உறவு கொள்ளுதல், வாக்குகளைப் பேணுதல் மற்றும் இவையல்லாதவைகளும் இதனுள் அடங்கும். இதன் அடிப்படை நோக்கம் உரிமைகளை ப் பேணி அவற்றை நிறைவேற்றுவதாகும்.

ஒருவர் அமானிதத்தைப் பேணி நடந்துகொள்ளும் போது, மற்றவர்க ள் தன்னிடம் அமானிதமாக ஒப்படைத்த பொருள்கள் எவ்வளவு சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருந்தாலும் அவற்றை நம்பகமாக நிறைவேற்றுவார். ஏனெனில், அல்லாஹ் அமானிதங்களை அதனுடையவர்களுக்கு ஒப்படைக்குமாறு ஏவியிருப்பதுடன், அல்லாஹ் வுக்கும், அவனது தூதருக்கும் மற்றும் அமானிதங்களுக்கும் மோசம் செய்வதை விட்டும் தடுத்துள்ளான். மேலும், இந்த உயர் பண்பை அமானிதங்களையும், வாக்குறுதிகளையும் பேணிநடக்கும் வெற்றியாள ர்களின் பண்புகளில் ஒன்றாக ஆக்கியுள்ளான்.

மனித உள்ளங்கள் இயல்பிலேயே நம்கமானவரை விரும்பி அவரில் பெரும் நம்பிக்கை வைக்கிறது. முஸ்லிம்கள் அல்லாத வேற்று மத த்தவர்கள்கூட நம்பகமானவருக்கே முன்னிடம் அளிக்கின்றனர்.

நஜ்ரான் தேசத்தவர்கள் ஜிஸ்யா கொடுப்பதற்கு உடன்பட்ட போது ரஸூலுல்லாஹி ﷺ அவர்களுக்கு பின்வருமாறு கூறினார்கள் :

إِنَّا نُعْطِيكَ مَا سَأَلْتَنَا وَابْعَثْ مَعَنَا رَجُلاً أَمِينًا وَلاَ تَبْعَثْ مَعَنَا إِلاَّ أَمِينًا

நீங்கள் எங்களிடம் கேட்கின்றவற்றை நாங்கள் உங்களுக்குக் கொடுக்கிறோம். நம்பிக்கைக்குரிய ஒரு மனிதரை எங்களுடன் அனுப்புங்கள். நம்பிக்கைக்குரிய ஒரு மனிதரைத் தவிர வேறெவரையும் எங்களுடன் அனுப்ப வேண்டாம்.

அதற்கு, ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்

لأَبْعَثَنَّ مَعَكُمْ رَجُلاً أَمِينًا حَقَّ أَمِينٍ

நம்பகத் தன்மையில் முறையோடு நடந்துகொள்ளும் நம்பிக்கையாளர் ஒருவரை நிச்சயமாக நான் உங்களுடன் அனுப்புவேன்.

பின்னர் அபூஉபைதா ؓ அவர்களை அனுப்பினார்கள்.

நூல் : புகாரி

மேலும், நம்பிக்கையைப் பேணுதல் என்பது ஒரு மனிதரிடம் இருக்க வேண்டிய மிக உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும். அது இருந்தால் வேறு எந்த உலகப் பொருட்களும் தன்னிடம் இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை.

( أَرْبَعٌ إِذَا كُنَّ فِيكَ فَلاَ عَلَيْكَ مَا فَاتَكَ مِنَ الدُّنْيَا : صِدْقُ الْحَدِيثِ وَحِفْظُ الأَمَانَةِ وَحُسْنُ الْخُلُقِ وَعِفَّةُ مَطْعَمٍ )

நான்கு விடயங்கள் உன்னிடம் இருப்பின், உலகப்பொருட்களில் உனக்கு கிடைக்காதவற்றைப் பற்றி கவலைப்படாதே : உண்மை

உரைத்தல், அமானிதத்தைப் பாதுகாத்தல், நற்குணம், உணவில் பேணுதல் ).

மேலும், அமானிதம் நபிமார்களின் மிக முக்கியப் பண்பாகும். எனவேதான் ஒவ்வொரு நபியும் தனது சமூகத்தாரிடம் தான் நம்பிக்கையாளர் என தன்னைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளதை அல்குர்ஆன் பின் வருமாறு கூறுகிறது :

( إِنِّي لَكُمْ رَسُوْلٌ أَمِيْنٌ ) الشعراء : 106، ١٢٥، ١٤٣، ١٦٢، ١٧٨

நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதராவேன்.

26 : 106, 125, 143, 162, 178.

இவை தவிர இன்னும் பல அல்குர்ஆன் வசனங்களில் நபிமார்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

நபி ﷺ அவர்கள் நம்பிக்கையானவர்கள் என்பதற்கு அவர்களின் எதிரிகளே சாட்சியளித்துள்ளனர். ஹிரக்ல் மன்னருக்கும் அபூஸுஃப்யானுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் இதற்கு பெரும் எடுத்துக்காட்டாகும். அதில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது

(قَالَ هِرَقْلُ : وَسَأَلْتُكَ هَلْ يَغْدُرُ ؟ فَذَكَرْتَ أَنْ لاَ وَكَذَلِكَ الرُّسُلُ لاَ تَغْدُرُ).رواه البخاري

நான் உம்மிடம் அந்த மனிதர் உடன்படிக்கையை மீறுகின்றாரா ? என்று கேட்டேன். அதற்கு நீர் இல்லை என்று பதிலளித்தீர். இறைத்தூதர்கள் இத்தகையோரே அவர்கள் உடன்படிக்கையை மீறமாட்டார்கள் என்று ஹிரக்ல் மன்னர் அபூஸுஃபயானைப் பார்த்துக் கூறினார்.

நூல் : புகாரி.

புகாரியின் மற்றோர் அறிவிப்பில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது :

(سَأَلْتُكَ مَاذَا يَأْمُرُكُمْ ؟ فَزَعَمْتَ أَنَّهُ يَأْمُرُ بِالصَّلاَةِ وَالصِّدْقِ وَالْعَفَافِ وَالْوَفَاءِ بِالْعَهْدِ وَأَدَاءِ الأَمَانَةِ. قَالَ : هَذِهِ صِفَةُ نَبِيٍّ ). رواه البخاري

ஹிரக்ல் மன்னர் அபூஸு∴பயானைப் பார்த்துக் கூறினார் : அவர் (முஹம்மத் ﷺ அவர்கள்) எதையெல்லாம் கட்டளையிடுகின்றார் ? என்று உம்மிடம் நான் கேட்டேன். அவர் தொழுகை, வாய்மை, சுயக்கட்டுப்பாடு, வாக்குறுதியை நிறைவேற்றல், நம்பி ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருளைச் சரிவரப் பாதுகாத்துத் திரும்ப ஒப்படைத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்குமாறு கட்டளையிடுகிறார் என்று சொன்னீர். இதுதான் ஓர் இறைத்தூதரின் பண்பாகும்.

நூல் : புகாரி.

அமானிதம் என்னும் பண்பு நபிமார்களின் முக்கியமான பண்பாக இருப்பதனால், நபி ﷺ அவர்களைப் பின்பற்றிநடப்பவர்களிடமும் இவ்வுயர் பண்பு இருக்க வேண்டும் என்பதை நபி ﷺ அவர்கள் பல ஹதீஸ்களில் ஆர்வமூட்டியும், வலியுறுத்தியும் இருப்பதோடு, அதனைப் பேணாதவர்களை எச்சரித்தும் உள்ளனர். அவற்றில் சில ஹதீஸ்கள் கீழே கொடுக்கப்படுகின்றன :

عَنْ أَبِي هُرَيْرَةَ ؓ قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( الْمُؤْمِنُ مَنْ أَمِنَهُ النَّاسُ عَلَى دِمَائِهِمْ وَأَمْوَالِهِمْ ) رواه الترمذي

மு∴மின் என்பவர், மனிதர்கள் அவர்களின் உயிர்கள் மற்றும் பொருள்களின் மீது எவரது தீமைகளை விட்டும் அச்சமற்று இருக்கின்றாரோ அவரேயாகும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : திர்மிதி

எனவே, ஒருவரிடம் உண்மையாகவே அமானிதத்தைப் பேணும் பண்பு இருந்தால், அவர் தனக்கு நெருக்கமானவர்கள், நெருக்கமற்ற வர்கள், முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவ ர்களுடனும் நம்பிக்கையாகவே நடந்துகொள்வார்.

இமாம் இப்னு ஹஜர் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :

நம்பிக்கைக்கு மோசம் செய்வது ஹராம் என்பது ஏகோபித்த முடி வாகும். அது ஒரு முஸ்லிமுக்கு செய்தாலும் அல்லது இஸ்லாமிய ஆட்சியின் கீழ் பாதுகாப்புடன் வாழும் முஸ்லிமற்ற திம்மியாக இருந் தாலும் சட்டம் ஒன்றேயாகும்.

தனக்கு மோசடி செய்பவனுடனும் கூட ஒரு முஃமின் நம்பகமாகவே நடக்க வேண்டும் என்பதை நபி ﷺ அவர்கள் வலியுறுத்தி பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

( أَدِّ الأَمَانَةَ إِلَى مَنِ ائْتَمَنَكَ وَلاَ تَخُنْ مَنْ خَانَكَ ) رواه أبو دود والترمذي

உன்னை நம்பியவருக்கு நம்பகத் தன்மையை நிறைவேற்றுவாயாக, உனக்கு மோசம் செய்தவருக்கு நீர் மோசம் செய்யாதீர்.

நூல்கள் : அபூதாவூத், திர்மிதி

நம்பகத்தன்மையுடன் நடந்துகொள்ளும் ஒருவர் தனக்கு மோசடி செய்தவருக்கு மோசடி செய்ய முற்படுவது, வெறுமனே மோசடி செய் வதை விடவும் கடுமையான காரியமாகும். ஏனெனில், இவரது இந்த செயலின் காரணமாக இவர் மோசடி செய்வதில் விழுந்து விடுவதோ டு, உடன்படிக்கைக்கு மாறுசெய்வதினால் இவரது அடிப்படை இயல் நிலை மாசுபடுகிறது. அதனால், சிலவேளை காலவோட்டத்தில் இத னை தனது வழமையாக எடுத்துக் கொள்ளவும் வாய்புண்டு. எனவே தான மேற்கூறப்பட்ட ஹதீஸில் இவ்வாறு வலியுறுத் தப்பட்டுள்ளது.

**நம்பகத்தன்மைக்கு செயல் ரீதியான சில எடுத்துக்காட்டுகள் :**

1- தன்னிடம் ஆலோசனை கேட்பவருக்கு, நம்பகமான முறையில் ஆலோசனை வழங்குதல் மேலும் தனது அபிப்பிராயத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு உண்மையாகவே நடந்து கொள்ளல்.

عَنْ أُمِّ سَلَمَةَ وَأَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( الْمُسْتَشَارُ مُؤْتَمَنٌ ) رواه الترمذي

ஆலோசனை கேட்கப்படுபவன் நம்பிக்கை வைக்கப்படுபவனாவான்

என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக உம்மு ஸலமா மற்றும் அபூஹுரைரா رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்

நூல் : திர்மிதி.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( مَنْ اسْتَشَارَهُ أَخُوهُ الْمُسْلِمُ فَأَشَارَ عَلَيْهِ بِغَيْرِ رُشْدِهِ فَقَدْ خَانَهُ ) رواه أحمد والحاكم وصححه ووافقه الذهبي.

ஒருவரிடம் தனது முஸ்லிமான சகோதரர் ஆலோசனை கேட்டபின் அதற்கு அவர் அந்த காரியத்தின் நேர்மையானதற்கு மாற்றமான ஆலோசனையை அவருக்கு வழங்கினால், அவர் தனது முஸ்லிமான சகோதரருக்கு மோசம் செய்துவிட்டார் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : அஹ்மத், ஹாகிம்

2- இரகசியங்களைப் பாதுகாத்தல்.

( الْمَجَالِسُ بِالأَمَانَةِ )

சபைகள் நம்பிக்கை பேணப்பட வேண்டியவையாகும்.

3- பிற்காலத்தில் நிலைகுழைந்த நிலை ஏற்படுதல்.

( سَيَأْتِي عَلَى النَّاسِ سَنَوَاتٌ خَدَّاعَاتٌ، يُصَدَّقُ فِيْهَا الْكَاذِبُ وَيُكَذَّبُ فِيْهَا الصَّادِقُ وَيُؤْتَمَنُ فِيْهَا الْخَائِنُ وَيُخَوَّنُ فِيْهَا الأَمِيْنُ وَيَنْطِقُ فِيْهَا الرُّوَيْبِضَةُ فِي أَمْرِ الْعَامَّةِ قِيْلَ : وَمَا الرُّوَيْبِضَةُ ؟ قَالَ : الرَّجُلُ التَّافِهُ )

மனிதர்களுக்கு மோசங்கள் நிறைந்த பல வருடங்கள் வரும்,அவைகளில் பொய்யன் உண்மைப்படுத்தப்படுவான்,உண்மையாளன் பொய்ப்படுத்தப்படுவான்,மோசம் செய்பவன் நம்பப்படுவான்,நம்பிக்கையாளன் மோசம் செய்யப்படுவான், பொதுமக்களின் விடயத்தில் ருவைளா கதைப்பான் என ஸு லுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது ருவைளா என்றால் யார் எனக் கேட்கப்பட்டது. அதற்கு (ருவைளா என்பது) அற்பமான மனிதன் எனக் கூறினார்கள்.

4- அமானிதத்தை நிறைவேற்றுதல் முஃமின்களின் பண்பாகும், அதில் சிறிதளவுகூட முறைகேடாக நடப்பது நயவஞ்சர்களின் பண்பாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : ( آيَةُ الْمُنَافِقِ ثَلاَثٌ : إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ ) رواه البخاري ومسلم

நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும் : அவன் பேசினால் பொய்யுரைப்பான். அவன் வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். அவனை நம்பினால் மோசம் செய்வான் என ரஸு லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

( لاَ إِيْمَانَ لِمَنْ لاَ أَمَانَةَ لَهُ وَلاَ دِيْنَ لِمَنْ لاَ عَهْدَ لَهُ )

நம்பகத்தன்மை இல்லாதவனுக்கு ஈமான் இல்லை, உடன்படிக்கையை நிறைவேற்றும் பண்பற்றவனுக்கு மார்க்கம் இல்லை.

எனவே, நம்பகத்தன்மை என்னும் பண்புடையவன் தனது கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில் அதிக ஆர்வமுடையவனாக இருப்பான், மோசம் செய்தல், தந்திர உபாயங்களை கையாளுதல் போன்றவற்றை விட்டும் மிகத் தூரமானவனாக இருப்பான் மேலும் உடன்படிக்கைகளை பேணுபவனாகவும், வாக்குறுதிகளை நிறைவேற்றுபவனாகவும் இருப்பான். இஸ்லாத்தைப் போன்ற ஒரு மகத்தான தூதை சுமந்து, முன்னெடுத்துச் செல்வதற்கு நம்பகத்தன்மை படைத்தவர்களுக்கு மாத்திரமே முடியும்.

## الْبَشَاشَةُ

## புன்முறுவல்

புன்முறுவல் சிறந்த மனிதர்களின் உயர் பண்புகளில் ஒன்றாகும்.

நபி ﷺ அவர்கள் புன்முறுவலுடனும் சிரித்த முகத்துடனுமே காணப்பட்டார்கள். சிலவேளை தனது கடைவாய்ப் பற்கள் தெரியும் அளவுக்கு சிரித்துள்ளார்கள்.

ஸுஃப்யான் இப்னு உயைனா அவர்கள் கூறுகிறார்கள் : நன்மை என்பது இலகுவான காரியமாகும். அதாவது, மலர்ந்த முகமும், மென்மையான பேச்சுமாகும்.

எப்போதும் புன்முறுவலுடன் இரு, பற்கள் உடலில் மறைக்கப்பட வேண்டிய பகுதியல்ல. முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொள் வதே பெரும் குறையாகும் என ஒரு பழமொழி கூறுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

( وَأَنَّهُ هُوَ أَضْحَكَ وَأَبْكَى ) سورة النجم : ٤٣.

நிச்சயமாக அவனே சிரிக்க வைக்கின்றான், அழவும் வைக்கின்றான்

53 : 43.

**புன்முறுவல் பற்றி அறிவிக்கப்பட்டுள்ள ஹதீகளில் சில :**

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ : ( مَا تَوَطَّنَ رَجُلٌ مُسْلِمٌ الْمَسَاجِدَ لِلصَّلَاةِ وَالذِّكْرِ إِلاَّ تَبَشْبَشَ اللهُ لَهُ كَمَا يَتَبَشْبَشُ أَهْلُ الْغَائِبِ بِغَائِبِهِمْ إِذَا قَدِمَ عَلَيْهِمْ ) رواه ابن ماجه وصححه الألباني

ஒரு முஸ்லிமான மனிதர் தொழுகைக்காகவும் அல்லாஹ்வை திக்ரு செய்வதற்காகவும் மஸ்ஜித்களை இருப்பிடமாக ஆக்கிக் கொண்டா ல், வீட்டாரை விட்டும் பிரிந்து பயணத்தில் இருந்தவர் தனது வீடு திரும்பும் போது அவர்கள் மகிழ்ச்சியடைவதைப் போன்று அல்லாஹ் இவரைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறான் என நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : இப்னு மாஜா.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رضي الله عنه عَنْ رَسُولِ اللهِ صلى الله عليه وسلم قَالَ : ( تَكُونُ الأَرْضُ يَوْمَ الْقِيَامَةِ خُبْزَةً وَاحِدَةً يَكْفَؤُهَا الْجَبَّارُ كَمَا يَكْفَأُ أَحَدُكُمْ خُبْزَتَهُ فِي السَّفَرِ نُزُلاً لأَهْلِ

الْجَنَّةِ ) قَالَ : فَأَتَى رَجُلٌ مِنَ الْيَهُوْدِ فَقَالَ : بَارَكَ الرَّحْمٰنُ عَلَيْكَ أَبَا الْقَاسِمِ أَلاَ
أُخْبِرُكَ بِنُزُلِ أَهْلِ الْجَنَّةِ يَوْمَ الْقِيَامَةِ ؟ قَالَ : ( بَلَى ) قَالَ : تَكُوْنُ الأَرْضُ خُبْزَةً
وَاحِدَةً – كَمَا قَالَ رَسُوْلُ اللهِ ﷺ – قَالَ : فَنَظَرَ إِلَيْنَا رَسُوْلُ اللهِ ﷺ ثُمَّ ضَحِكَ
حَتَّى بَدَتْ نَوَاجِذُهُ) رواه مسلم

அபூஸயீத் அல்குத்ரீ (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்:அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மறுமை நாளில் இந்தப் பூமி ஒரு ரொட்டியைப் போன்று மாறிவிடும். பயணத்தில் உள்ள உங்களில் ஒருவர் தமது ரொட்டியை தட்டிப்போடுவது போன்று,சர்வ வல்லமை படைத்தவன் பூமியைத் தனது கரத்தால் புரட்டிப்போடுவான். அதையே சொர்க்கவாசிகளுக்கு விருந்தாக்குவான் என்று கூறினார் கள். அப்போது யூதர்களில் ஒருவர் வந்து, அபுல்காஸிமே! அளவற்ற அருளாளன் தங்களுக்கு வளம் வழங்கட்டும் ! மறுமை நாளில் சொர்க்கவாசிகளின் விருந்துணவு என்னவென்று உங்களுக்கு நான் தெரிவிக்கட்டுமா ? என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் சரி என்றார்கள். அவர் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியது போன்றே மறுமை நாளில் இந்தப் பூமி ஒரேயொரு ரொட்டியைப் போன்று (சமதளமாக) இருக்கும் என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களைக் கூர்ந்து பார்த்துவிட்டு தம் கடைவாய்ப் பற்கள் தெரியச் சிரித்தார்கள்.

நூல் : முஸ்லிம்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ الصَّامِتِ عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ : ( لاَ تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوفِ شَيْئًا فَإِنْ لَمْ تَجِدْ فَالْقَ أَخَاكَ بِوَجْهٍ طَلْقٍ ) رواه مسلم

நன்மையில் எதனையும் அற்பமாக கருதாதீர், நன்மை செய்வதற்கு ஏதும் நீர் பெற்றுக் கொள்ளாவிட்டால், உனது சகோதரனை மலர்ந்த முகத்துடன் சந்திக்கவும் என நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூதர் رضي الله عنه அவர்களின் வாயிலாக அப்துல்லாஹ் இப்னுஸ்ஸாமித் رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம்.

عَنْ أَبِي ذَرٍّ رضي الله عنه قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( تَبَسُّمُكَ فِي وَجْهِ أَخِيكَ لَكَ صَدَقَةٌ وَأَمْرُكَ بِالْمَعْرُوفِ صَدَقَةٌ وَنَهْيُكَ عَنِ الْمُنْكَرِ صَدَقَةٌ وَإِرْشَادُكَ الرَّجُلَ فِي أَرْضِ الضَّلاَلِ لَكَ صَدَقَةٌ وَبَصَرُكَ لِلرَّجُلِ الرَّدِيْءِ الْبَصَرِ لَكَ صَدَقَةٌ وَإِمَاطَتُكَ الْحَجَرَ وَالشَّوْكَةَ وَالْعَظْمَ عَنِ الطَّرِيقِ لَكَ صَدَقَةٌ وَإِفْرَاغُكَ مِنْ دَلْوِكَ فِي دَلْوِ أَخِيكَ لَكَ صَدَقَةٌ ) صححه الألباني

உனது சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்முறுவல் பூப்பதும் உனக்கு ஸதகாவாகும், நீர் நன்மையை ஏவுவதும் ஸதகாவாகும், நீர் தீமையைத் தடுப்பதும் ஸதகாவாகும், வழிதவறிய ஒருவருக்கு பாதையைக் காண்பித்துக் கொடுப்பதும் உனக்கு ஸதகாவாகும், பார்வை குறைந்த ஒருவரை நீர் பார்ப்பதும் உனக்கு ஸதகாவாகும், கல், முள் மற்றும் எழும்பு போன்றவற்றை பாதையை விட்டும் அகற்றுவதும் உனக்கு ஸதகாவாகும் மேலும் உனது வாளியிலிருந்து தண்ணீரை எடுத்து உனது சகோதரனின் வாளியில் தண்ணீரை ஊற்றுவதும் உனக்கு ஸதகாவாகும் என ரஸூ லுல்லாஹி

ﷺ அவர்கள் கூறியதாக அபூதர் رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அன்பின் சகோதரனே ! உனது சகோதரனை சந்திக்கும் போது அவரின் முகத்தைப் பார்த்து புன்முறுவலுடன் சிரித்து அவரை மகிழ வைப்பது, நீயே உன்மீது செய்து கொள்ளும் ஒரு ஸதகாவாகும். மேலும் ஸதாகா செய்தால் நன்மை கிடைப்பது போன்றே இதற்கும் நன்மை கிடைக்கிறது.

**புன்முறுவல் பற்றி சில அறிஞர்களின் கருத்துக்கள் :**

- இமாம் ஸு∴ப்யான் இப்னு உயைனா அவர்கள் பின்வருமாறு கூறு கிறார்கள் :

  புன்முறுவல் என்பது மற்றவர்களின் அன்பை வேட்டையாடும் ஒரு கருவியாகும். நன்மை என்பது மலர்ந்த முகமும் மிருதுவான பேச்சுமாகும். எனவே, ஒருவர் மார்க்கத்திலோ அல்லது உலக பதவிகளில் எவ்வளவு உயர் படித்தரங்களை அடைந்தாலும், அவர் புன்முறுவலுடனும் மக்கள் உறவாடுவதற்கு இலகுவானவராகவும் இருப்பது மிக அவசியமாகும். நபி ﷺ அவர்கள் அவ்வாறே இருந்துள்ளார்கள்.

- இமாம் கஸாலி அவர்கள் உலமாக்களிலும், வணக்கசாலிகளிலும் பிறருடன் சிரிக்காது நெற்றியை சுருக்கி வைத்திருப்பவர்களைப் பற்றி குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறுகிறார்கள் :

  பேணுதல் என்பது உள்ளத்தில் இருப்பதாகும். எனவே பேணுதலின் பெயரில் நெற்றியைச் சுருக்கி வைத்துக்கொள்ளவோ, முகத்தை மண்ணில் புரட்டிக்கொள்ளவோ, கன்னத்தை ஒரு புறம் திருப்பி வைத்துக்கொள்ளவோ,முதுகை குனித்து வைத்துக் கொள்ளவோ மேலும் ஆடையின் நுனிப் பகுதியை உடலோடு சேர்த்து சுருட்டி வைத்துக் கொள்ள

வோ அவசியம் கிடையாது. இவைகள் போனுதல் அல்ல. ஆனால் இந்த அப்பாவியோ இதனை அறியாது இருக்கின்றான்.

- மற்றும் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார் :

  புன்முறுவல் மற்றும் முகமலர்ச்சி என்பன உள்ளத்தின் ஒளி மயத்தின் வெளிப்பாடுகளில் உள்ளவையாகும்.

## التَّفَاؤُلُ

## நற்சகுனம்

நற்சகுனம் என்பது நற்காரியத்தினால் மகிழ்வடைவதும், நற்காரியம் ஏற்பட வேண்டுமென ஆதரவுவைப்பதுமாகும். இதன் எதிர்ச்சொல்லான கெட்டசகுனம் என்பது தீயஎண்ணமும், தீமை ஏற்படும் என எதிர்பார்ப்பதுமாகும்.

عَنْ أَنَسٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ : ( لاَ عَدْوَى وَلاَ طِيَرَةَ وَيُعْجِبُنِي الْفَالُ الصَّالِحُ : الْكَلِمَةُ الْحَسَنَةُ ) رواه البخاري

தொற்றுநோய் கிடையாது. பறவை சகுனம் ஏதும் கிடையாது. நற்குறி எனக்கு விருப்பமானதாகும். நல்ல அழகிய சொல்தான் அது என நபி ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : புகாரி.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا عَنِ النَّبِيِّ ﷺ قَالَ : ( لاَ يَقُولَنَّ أَحَدُكُمْ : خَبُثَتْ نَفْسِي

وَلَكِنْ لِيَقُلْ : لَقِسَتْ نَفْسِي ) رواه البخاري ومسلم

உங்களில் ஒருவர் கபுஸத் நஃப்ஸீ (என் மனம் கெட்டுவிட்டது) என்று கூறவேண்டாம். என்றாலும் லகிஸத் நஃப்ஸீ ( என் மனம் கெட்டுவிட்டது ) என்று கூறவும் நபி ﷺ அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

**குறிப்பு :**

உலமாக்கள் கூறுகிறார்கள் : கபுஸத் நஃப்ஸீ என்பதின் பொருளும் லகிஸத் நஃப்ஸீ என்பதின் பொருளும் ஒன்றுதான். எனினும் கபுஸத் என்ற வார்த்தையை அச்சொல்லின் அருவருப்புத் தன்மையைக் கருதி நபி ﷺ அவர்கள் வெறுத்தார்கள். (ரியாலுஸ்ஸாலிஹீன்).

நபி ﷺ அவர்கள் நற்சகுனத்தை விரும்புபவர்களாக இருந்தார்கள். அதன் அடிப்படையில் பலரது அவலட்சணமான பெயர்களை நல் லருத்தமுடைய பெயர்களாக மாற்றினார்கள். அவற்றிற்கு சில எடுத் துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.

عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ أَنَّ جَدَّهُ حَزْنًا قَدِمَ عَلَى النَّبِيِّ ﷺ فَقَالَ : مَا اسْمُكَ ؟ قَالَ :

اسْمِي حَزْنٌ. قَالَ : بَلْ أَنْتَ سَهْلٌ. رواه البخاري

ஸயீத் பின் அல்முஸய்யப் அவர்கள் கூறுகிறார்கள் என் பாட்டனார் ஹஸ்ன் அவர்கள் நபி ﷺ அவர்களிடம் வந்தார்கள். அப்போது நபி ﷺ அவர்கள் உங்கள் பெயரென்ன ? என்று கேட்டார்கள்.

அவர் ஹஸ்ன் (முரடு) என்று கூறினார். நபி ﷺ அவர்கள் இல்லை நீங்கள் (இனிமேல்) ஸஹ்ல்(மென்மை)என்று சொன்னார்கள்.

நூல் : புகாரி.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ زَيْنَبَ كَانَ اسْمُهَا بَرَّةً فَقِيلَ : تُزَكِّي نَفْسَهَا فَسَمَّاهَا رَسُولُ اللهِ ﷺ زَيْنَبَ. رواه البخاري.

அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் : ஸைனப் (ரளியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு(முதலில்) பர்ரா (நல்லவள்) என்ற பெயர் இருந்தது. அப்போது அவர் தம்மைத் தாமே பரிசுத்தப்படுத்திக்கொள்கிறார் என்று (மக்களால்)சொல்லப்பட்டது. ஆகவே அவருக்கு ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் ஸைனப் என்று பெயர் சூட்டினார்கள்.

நூல் : புகாரி.

அம்ர் இப்னுல் ஆஸ் رضي الله عنه அவர்களின் மகனின் பெயர் முதலில் அல்ஆஸ் என்பதாக இருந்தது. பின்னர் அதனை மாற்றி அவருக்கு அப்துல்லாஹ் என ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் பெயர் சூட்டினார்கள். அல்ஆஸ் என்பது மாறுசெய்யக்கூடியவன் எனப் பொருள். அது ஒரு முஃமினுக்கு பொருத்தமற்றதாகும். எனவே அதனை மாற்றி அப்துல்லாஹ் என அல்லாஹ்வின் அடிமை என்னும் அல்லாஹ்வுக்கு வழிப்படும் பொருளை உடைய பெயரைச் சூட்டினார்கள்.

இமாம் தபரீ (رحمه الله) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :

لاَ تَنْبَغِي التَّسْمِيَةُ بِاسْمٍ قَبِيحِ الْمَعْنَى وَلاَ بِاسْمٍ يَقْتَضِي التَّزْكِيَةَ لَهُ وَلاَ بِاسْمٍ مَعْنَاهُ السَّبُّ

மோசமான அர்த்தமுடைய பெயர் கொண்டோ,தன்னைப் பரிசுத்த ப்படுத்தும் பெயர் கொண்டோ மேலும் ஏசுதல், திட்டுதல் போன்ற அர்த்தங் கொண்ட பெயர் கொண்டோ பெயர் சூட்டுவது கூடாது.

பார்க்க : ஃபத்ஹுல் பாரீ

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ : كَانَ النَّبِيُّ ﷺ يُعْجِبُهُ الْفَأْلُ الْحَسَنُ وَيَكْرَهُ الطِّيَرَةَ

رواه ابن ماجه وصححه الألباني.

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் நற்சகுனத்தை விரும்புவர்களாக வும், துற்சகுனத்தை வெறுப்பவர்களாகவும் இருந்தார்கள் என அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : இப்னு மாஜா.

எனவே, நாமும் நமது வாழ்வில் நற்சகுனத்தை கடைபிடித்து நடக்க வேண்டும்.

## التَّوَاضُعُ

## பணிவுத்தன்மை

பணிவு என்பது பிறருடன் மென்மையாக நடந்துகொள்வதும், தன் ஆத்மாவின் பெருமைத் தன்மையை நீக்கிவிட்டு சதாரண மக்களின் நிலையில் தன்னை வைத்து நடந்துகொள்வதுமாகும்.

அல்லாஹு தஆலா தனது நபியவர்களுக்கு முஃமின்களுடன் பணிவுடன் நடந்துகொள்ளுமாறு பின்வருமாறு கட்டளையிடுகின்றான் :

( وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِيْنَ ) سورة الشعراء : ٢١٥

நபியே ! முஃமின்களில் நின்றும் உங்களைப் பின்பற்றுபவர்களுக்கு உமது இறக்கையைத் தாழ்த்துவீராக (பணிவை மேற்கொள்வீராக ) 26 : 215.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : ( مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ وَمَا زَادَ اللهُ عَبْدًا بِعَفْوٍ إِلاَّ عِزًّا وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلهِ إِلاَّ رَفَعَهُ اللهُ ) رواه مسلم

தர்மம் செய்வது செல்வத்தைக் குறைத்து விடாது, பிறரை மன்னிப்பதின் காரணமாக அடியானின் கண்ணியத்தை அல்லாஹ் அதிகப்படுத்தவே செய்வான். அல்லாஹ்வுக்காக பணிபவரை அல்லாஹ் உயர்த்தவே செய்வான் என ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம்.

(அல்லாஹ்வுக்காக பணிபவரை அல்லாஹ் உயர்த்தவே செய்வான்) என்பதற்கு இருவிதமான விளக்கங்கள் உள்ளன :

1- இவ்வுலகில் அல்லாஹ் அவருக்கு உயர்வை வழங்குவான். அதனால் மக்களின் உள்ளத்தில் இவரைப் பற்றிய மதிப்பு உண்டாகுவதுடன், இவரின் அந்தஸ்தும் அதிகரிக்கும்.

2- இவர் உலகில் இவர் பணிவுடன் நடந்துகொண்டதனால், இவருக்கு மறுமையில் சிறந்த கூலியும், உயர் அந்தஸ்தும் கிடைக்கும்.

உமர் அவர்கள் மிம்பரின் மீதிருந்து பின்வருமாறு கூறுவதை தாம் செவியுற்றதாக உபைதுல்லாஹ் பின் அதீ இப்னுல் கியார் அவர்கள் கூறுகிறார்கள் :

ஒரு அடியான் அல்லாஹ்வுக்காக பணிவுடன் நடந்துகொண்டால், அல்லாஹ் அவனை உயர்த்துவான். அவன் தனக்குள் அற்பமானவனாக இருப்பான்,அதேவேளை மக்களின் பார்வையில் உயர்ந்தவனாக இருப்பான். அடியான் தனது அளவை மீறி பெருமையோடு நடந்துகொண்டால்,அல்லாஹ் அவனை பூமியில் எடுத்தெரிந்து விடுவான் அவன் தனக்குள் உயர்ந்தவனாக இருப்பான், அதேவேளை மக்களின் பார்வையில் பன்றியை விடவும் அற்பமானவனாக இருப்பான்.

பின்பு உமர் அவர்கள் கூறினார்கள் : அடியார்களிடம் அல்லாஹ்வை வெறுப்புக்குரியவனாக ஆக்காதீர்கள். அதற்கு அங்கே இருந்தவர்கள் : அது எவ்வாறு என வினவினர். அதற்கு : உங்களில் ஒருவர் மக்களுக்கு இமாமாக இருக்கும் போது மக்கள் செய்து கொண்டிருக்கும் மார்க்க விடயங்களை அவர்களுக்கு வெறுப்புக்குரியவையாக ஆக்குவதாகும் எனக் கூறினார்கள்.

ஹபீப் இப்னு அபீமர்ஸூக் என்பர் கூறுகிறார் : உத்மான் அவர்கள் ஒரு முறை தனது அடிமையொருவரிடம் வந்தார். அப்போது அந்த அடிமை ஒரு ஒட்டகத்திற்கு தீண் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த தீணியில் ஏதோ தனக்குப் பிடிக்காத ஒன்றை உத்மான் அவர்கள் கண்டார்கள்.அப்போது அந்த அடிமையின் காதைப்பிடித்து காயப்படுத்தினார்கள். பின்னர் தாம் செய்தது தவறு என்று உணர்ந்து கைசேதப்பட்டவராக அந்த அடிமையிடம் வந்து தாம் செய்தது போன்றே தமக்கும் செய்யுமாறு கூறினார்கள். அவ்வாறு செய்வதற்கு அந்த அடிமை மறுத்துவிட்டார். ஆனால் உத்மான் அவர்கள் தமக்கும் அவ்வாறு செய்யு

ம் வரை விட்டுக்கொடுக்கவில்லை. பின்னர் அந்த அடிமை உத்மான ﵁ அவர்களின் காதைப்பிடித்ததும் இன்னும் நன்றாகப் பிடிக்கும் படி கூறி தாமும் அந்த வேதனையை உணர்ந்ததும், மறுமையில் பழிக்குப் பழி பெறுவதற்கு முன் பழிக்குப் பழி பெற்றுக் கொள்வது எவ்வளவு நன்றாக இருக்கிறது எனக் கூறினார்கள்.

எனவே இதிலிருந்து நாம் பெறும் படிப்பனையாவது : உத்மான் ﵁ அவர்கள் முஸ்லிம்களின் கலீபாக மற்றும் சுவனத்திற்கு

நன்மாராயம் கூறப்பட்டவராக இருந்தும் தனது உயர் அந்தஸ்துகளைப் பாராது தனது அடிமையிடமும் தம்மைப் பழிவாங்குவதற்கு இடமளித்து பெருமை, ஆணவம் கொள்ளாது, பணிவாக நடந்து கொண்டதாகும். எனவே, நாமும் எமது வாழ்வில் பிறருடன் பணிவுடன் நடந்து கொள்வதை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

## كَظْمُ الْغَيْظِ

## கோபத்தை அடக்குதல்

மனிதர்களுக்கு இடையிலுள்ள சமூக உறவுகளில் சிலர் சிலருக்கு தமது நாவினாலோ அல்லது கைகளினாலோ அல்லது வேறு உறுப்பகளினாலோ அல்லது பணப்பரிமாற்றத்தின் மூலமாகவோ பலவிதமான தீமைகளை செய்கின்றனர். இவ்வாறு செய்யப்படும் தீமைகள் சில வேளை மற்றவர்களின் உயிர், மானம் மற்றும் சமூககௌரவம் போன்றவைகளை தாக்கக்கூடியதாகவும் இருக்கும். எனவே, இவ்வாறான பெரும் விளைவுகளையுடைய தீமைகளால் தாக்கப்படும் ஒருவர், தனக்கு தீமை செய்தவரை பழிவாங்கும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டால் அதனால் பெரும் தீய விளைவுகளும், குழப்பங்

களும் உருவாகுவதுடன், சமூகத்தில் விரோதக் குணங்கள் பரவுவத ற்கும் காரணமாக அமைந்துவிடும். எனவே, இவ்வாறான தீமைகள் உருவாகாது இருக்க வேண்டுமாயின், பிறரால் தீமைக்கு உள்ளாக் கப் படுபவர், கோபத்தை அடக்குதல், பொறுமையைக் கையாளல் போன்ற உயர் பண்புகளைக் கடைபிடிக்க வேணடும். அதனால் உள்ளங்களுக்கு இடையில் அன்பும் நேசமும் உருவாகும். எனவே, ஒருவர் கோபத்தை அடக்கும் பண்பு கொண்டிருப்பது மிக முக்கிய மும் சிறப்புமாகும். கீழே கோபத்தை அடக்குதல் குறித்து சில விடய ங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :

- கோபத்தை அடக்குதல் என்பது : கோபம் வரும் போது அதனை தனது சொல்லினாலோ அல்லது செயலினாலோ வெளிப்படுத்தாது, கட்டுப்படுத்தி மௌனித்து அமைதியாக இருப்பதாகும் என இமாம் நைஸாபூரி அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.

- கோபத்தை அடக்குவதின் சிறப்பு :

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَسَارِعُوا إِلَى مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّموَاتُ وَالأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ
۞ الَّذِيْنَ يُنْفِقُوْنَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ وَاللهُ
يُحِبُّ الْمُحْسِنِيْنَ ) آل عمران : 134,133.

உங்கள் இரட்சகனிடமிருந்துள்ள மன்னிப்பின் பக்கமும், வானங்கள் மற்றும் பூமியின் அளவு விசாலமான சுவர்க்கத்தின் பக்கமும் நீங்க ள் விரைந்து செல்லுங்கள். அது பயபக்தியாளர்களுக்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது ۞ அவர்கள் செல்வ நிலையிலும், வறிய நிலை யிலும் (நல்லறங்களில்) செலவு செய்வார்கள். இன்னும் கோபத்தை

மென்று, மனிதர்களை மன்னிப்பவர்களாகவும் இருப்பார்கள். நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கின்றான். 3 : 133,134.

மேற்கூறப்பட்டுள்ள இறைவசனத்தில் அல்லாஹ் பயபக்தியாளர்களை புகழ்ந்து பல பண்புகளைக் கூறியுள்ளான். அவற்றில் கோபத்தை அடக்குதலும் ஒன்றாகும்.

கோபத்தை அடக்குவதின் சிறப்பு குறித்து பல ஹதீஸ்கள் வந்துள் ளன. அவற்றில் சில பின்வருமாறு :

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( مَنْ كَفَّ غَضَبَهُ سَتَرَ اللهُ عَوْرَتَهُ، وَمَنْ كَظَمَ غَيْظَهُ وَلَوْ شَاءَ أَنْ يُمْضِيَهُ أَمْضَاهُ مَلأَ اللهُ قَلْبَهُ رَجَاءً يَوْمَ الْقِيَامَةِ، وَمَنْ مَشَى مَعَ أَخِيْهِ فِي حَاجَةٍ حَتَّى يَتَهَيَّأَ لَهُ أَثْبَتَ اللهُ قَدَمَهُ يَوْمَ تَزِلُّ الأَقْدَامُ) رواه الطبراني في الكبير وصححه الألباني

எவர் தனது கோபத்தை அடக்கிக் கொள்கிறாரோ, அவரின் குறை யை அல்லாஹ் மறைத்துவிடுவான். எவர் தனது கோபத்தை செயல் படுத்துவதற்கு நாடினால், அதற்கு ஆற்றல் இருந்தும் அதனை கட் டுப்படுத்திக் கொள்கிறாரோ, அவரது உள்ளத்தை அல்லாஹ் மறுமை நாளன்று ஆதரவால் நிரப்பிவைப்பான். எவர் தனது (முஸ்லிமான) சகோதரனின் ஒரு தேவை அவருக்கு நிறைவாகும் வரை அதனை செய்து கொடுப்பதற்காக அவருடன் செல்கின்றாரோ, அவரது பாதத்தை பாதங்கள் சருகும் நாளில் அல்லாஹ் உறுதிப்படுத்தி வைப்பான் என ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அப்துல்லாஹி இப்னு உப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : தபரானீ

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( مَا مِنْ جُرْعَةٍ أَعْظَمُ أَجْرًا عِنْدَ اللهِ مِنْ جُرْعَةِ غَيْظٍ كَظَمَهَا عَبْدٌ ابْتِغَاءَ وَجْهِ اللهِ )

رواه ابن ماجه وصححه أحمد شاكر

ஒரு அடியான் அல்லாஹ்வின் திரு முகத்திற்காக மெனடுக் கொள்ளும் கோபத்தின் மிடக்கை விட அல்லாஹ்விடம் கூலியால் மகத்தான வேறு எந்த மிடக்கும் கிடையாது என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : இப்னு மாஜா.

عَنْ مُعَاذِ بْنِ أَنَسٍ عَنْ أَبِيْهِ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : ( مَنْ كَظَمَ غَيْظَهُ وَهُوَ قَادِرٌ عَلَى أَنْ يُنَفِّذَهُ دَعَاهُ اللهُ عَزَّ وَجَلَّ عَلَى رُؤُوْسِ الْخَلَائِقِ حَتَّى يُخَيِّرَهُ مِنَ الْحُوْرِ الْعِيْنِ مَا شَاءَ ) رواه أبو داود وحسنه الألباني.

எவர் தனது கோபத்தை நிறைவேற்றுவதற்கு ஆற்றல் பெற்றிருந்தும் அதனை அடக்கிக் கொள்கின்றாரோ, அவரை அல்லாஹ் எல்லாப் படைப்பினங்களுக்கு முன்னிலும் அழைத்து, அவர் விரும்பியளவு ஹூ ருல்ஈன் பெண்களை எடுத்துக் கொள்ள அவருக்கு விருப்பம் கொடுக்கின்றான் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் மகனாகிய முஆத் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அபூதாவூத்.

கோபத்தை அடக்குவதில் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அதற்கு பின்வரும் அறிவிப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّهُ قَالَ : كُنْتُ أَمْشِي مَعَ رَسُوْلِ اللهِ ﷺ وَعَلَيْهِ رِدَاءٌ نَجْرَانِيٌّ غَلِيْظُ الْحَاشِيَةِ فَأَدْرَكَهُ أَعْرَابِيٌّ فَجَبَذَهُ بِرِدَائِهِ جَبْذَةً شَدِيْدَةً نَظَرْتُ إِلَى صَفْحَةِ عُنُقِ رَسُوْلِ اللهِ ﷺ وَقَدْ أَثَّرَتْ بِهَا حَاشِيَةُ الرِّدَاءِ مِنْ شِدَّةِ جَبْذَتِهِ ثُمَّ قَالَ : يَا مُحَمَّدُ ! مُرْ لِي مِنْ مَالِ اللهِ الَّذِي عِنْدَكَ فَالْتَفَتَ إِلَيْهِ رَسُوْلُ اللهِ ﷺ فَضَحِكَ ثُمَّ أَمَرَ لَهُ بِعَطَاءٍ ) رواه البخاري

அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் கூறுகிறார்கள் : நான் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களுடன் சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஓரம் தடித்த நஜ்ரான் தேசத்தின் போர்வையொன்று அவர்கள் மீது இருந்தது. அப்போது ஒரு கிராமப்புற அரபியொருவர் அவரிடம் வந்து, அவரின் போர்வையை மிகப்பலமாக இழுத்தார். அவ்வேளை ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களின் கழுத்தின் ஓரத்தை நான் பார்த்தேன், அந்த கிரமம்புற மனிதர் இலுத்த வேகத்தினால் போர் வையின் ஓரம் அவர்களின் களுத்தில் அடையாளத்தை ஏற்படுத்தியிருந்தது. பின்னர் முஹம்மதே! அல்லாஹ்வின் சொத்துகளிலிருந்து உன்னிடம் இருக்கின்றவற்றில் எனக்கு அளிக்குமாறு நீர் கட்டளையிடுவீராக எனக் கூறினார். அப்போது ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் அம்மனிதரைப் பார்த்து சிரித்துவிட்டு, அவருக்கு நன்கொடை வழங்குமாறு கட்டளையிட்டார்கள்.

நூல் : புகாரி

அந்த கிராமப்புற மனிதர் ரஸூ லுல்லாஹி ﷺ அவர்களுடன் நடந்துகொண்ட விதமும் மேலும் அதற்கு அவருக்கு கடின வார்த் தைகள் ஏதும் கூறாமலும், கடின முறையில் நடந்துகொள்ளாதும், அவரை அடிக்காமலும், அவரை மன்னித்து தனது கோபத்தை அடக்கியது மாத்திரம் இன்றி அவருக்கு நன்கொடை அளிக்குமாறு ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்களே இந்த உயர் பண்பு களை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்களின் உயர் பண்பைப் பற்றி அல்குர்ஆனில் அல்லாஹ் பின்வருமாறு புகழ்ந்து கூறுகின்றான் :

( وَإِنَّكَ لَعَلَى خُلُقٍ عَظِيمٍ ) القلم : 4.

நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கின்றீர்.

67 : 4.

மேலும் எமது முன்னோர்களும் கோபத்தை அடக்குவதில் சிறந்த உதாரணபுருசர்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களில் ஒருவரின் எடுத்துக்காட்டு பின்வருமாறு.

மைமூன் பின் மஹ்ரான் என்னும் ஒருவர் இருந்தார். ஒரு நாள் இவரிடம் ஒரு விருந்தாளி வந்தார். அப்போது மிக அவசரமாக இரவுணவை கொண்டுவருமாறு தனது அடிமைப் பெண்ணை அவச ரப் படுத்தினார். பாத்திரம் நிறைய உணவுடன் அப்பெண் அவசர மாக வரும் போது கால் சருகி தனது கையிலிருந்த உணவை தனது எஜமானின் தலையில் கொட்டிவிடுகின்றாள். அப்போது எஜ மானாகிய மைமூன் பின் மஹ்ரான் அவர்கள், அடிமைப்பெண்ணே ! நீ என்னை எரித்து விட்டாய் எனக்கூறினார். அப்போது நன்மை யை கற்றுக்கொடுத்து மனிதர்களுக்கு ஒழுக்கத்தைப்புகட்டும் ஆசிரி யர் அவர்களே ! அல்லாஹ் என்ன சொல்லி இருக்கின்றான் என சற்றுப் பாருங்கள் எனக் கூறினாள். அதற்கு அல்லாஹ் என்ன

சொல்லியிருக்கிறான் எனக் கேட்டார். அல்லாஹ் (மு∴மின்களின் பண்புகளைப் பற்றி குறிப்பிடுகையில் அவர்கள்) கோபத்தை மென்று கொள்பவர்கள் எனக்கூறுகின்றான். அதற்கவர்கள் நான் எனது கோபத்தை மென்று கொண்டுவிட்டேன் என்றார்கள். பின்னர், அந்த மு∴மின்கள் தங்களுக்கு குற்றமிழைத்த மனிதர்களை மன்னிப்பவர்கள் அல்லாஹ் கூறுகின்றான் எனக் கூறினாள். அதற்கவர்கள் நான் உன்னை மன்னித்து விட்டேன் என்றார்கள். பின்னர், நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கின்றான் என அல்லாஹ் கூறுகின்றான் என அப்பெண் கூறினாள். அதற்கவர்கள் அல்லாஹ்வின் திரு முகத்துக்காக நான் உன்னை உரிமையிட்டுவிட்டேன் நீ இப்போது சுதந்திரமானவள் எனக் கூறினார்கள்.

பார்க்க : இஹ்யாஉ உலூமித்தீன்.

மைமூன் அவர்கள் தனது அடிமைப் பெண்ணை அடிக்க நாடியபோது மு∴மின்கள் தங்களது கோபத்தை மென்று கொள்பவர்கள் மற்றும் தங்களுக்கு குற்றமிழைத்தவர்களை மன்னிப்பவர்கள் என அல்லாஹ் அவர்களைப் புகழும் திரு வசனங்களை செவியுற்றதும் அப்பெண்ணை மன்னித்து, உரிமையிட்டு அவளுக்கு உபகாரம் புரிந்தார். இவ்வாறுதான் எமது முன்னோர் அல்லாஹ்வின் வார்த்தைகளை கண்ணியப்படுத்தி நடந்துள்ளனர். நாமும் இவற்றைச் சிந்தித்து செயல்பட அல்லாஹ் எமக்கு நல்லருள் புரிவானாக !

عِيَادَةُ الْمَرِيْضِ

## நோயாளியை நலம் விசாரித்தல்

இஸ்லாம் மார்க்கம் கருணை நிறைந்த மார்க்கமாகும். மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் அதன் கருணையை பரவச்செய்துள்ளது அதனடிப்படையில் இஸ்லாம் பலவீனர்கள் மற்றும் நோயாளிகள் மீது கருணை செய்யுமாறு வலியுறுத்துகிறது. நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் நோயாளி பிறமனிதர்களின் உதவி, மனஆறுதல்

கூறுதல், உள்ளத்தில் உறுதியை ஏற்படுத்தல் மற்றும் நல்லெதிர்பார்ப்பை தூண்டிவிடல் போன்ற மனிதாபிமான உதவிகளின் மீது மிக மிகத் தேவையுள்ளவராக இருக்கின்றார். எனவேதான் இஸ்லாம், நோயாளியை நலம் விசாரித்தலை மார்க்கத்தில் ஒரு முஸ்லிம் தனது மற்ற முஸ்லிமின் மீது செய்ய வேண்டிய அடிப்படை கடமைகளில் ஒன்றாக ஆக்கியுள்ளது. மேலும், நோயாளியை நலம் விசாரிப்பதின் மீது ஆர்வமூட்டி அதிகமான ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளது அவற்றில் சில பின்வருமாறு :

عَنْ أَبِي مُوْسَى الأَشْعَرِيِّ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( أَطْعِمُوا الْجَائِعَ وَعُودُوا الْمَرِيْضَ وَفُكُّوا الْعَانِي ) رواه البخاري

பசித்தவருக்கு உணவளியுங்கள், நோயுற்றவரை நலம் விசாரியுங்கள் கைதியை விடுவியுங்கள் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அபூமூஸா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : புகாரி

عَنْ أَبِي سَعِيْدٍ الْخُدْرِيِّ ؓ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( عُوْدُوا الْمَرْضَى وَاتَّبِعُوا الْجَنَائِزَ تُذَكِّرُكُمُ الآخِرَةَ ) رواه أحمد وصححه أحمد شاكر.

நோயாளிகளை நலம் விசாரியுங்கள், ஜனாஸாக்களை பின்பற்றிச் செல்லுங்கள். அவை உங்களுக்கு மறுமையை நினைவூட்டும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அபூஸஈத் அல்குத்ரீ ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அஹ்மத்

عَنِ الْبَرَاءِ رضي الله عنه قَالَ : أَمَرَنَا النَّبِيُّ ﷺ بِسَبْعٍ وَنَهَانَا عَنْ سَبْعٍ : أَمَرَنَا بِعِيَادَةِ الْمَرِيْضِ، وَاتِّبَاعِ الْجَنَائِزِ، وَتَشْمِيْتِ الْعَاطِسِ، وَإِجَابَةِ الدَّاعِي، وَرَدِّ السَّلَامِ، وَنَصْرِ الْمَظْلُوْمِ، وَإِبْرَارِ الْمُقْسِمِ. وَنَهَانَا عَنْ سَبْعٍ : عَنْ خَاتَمِ الذَّهَبِ – أَوْ قَالَ حَلْقَةِ الذَّهَبِ– وَعَنْ لُبْسِ الْحَرِيْرِ، وَالدِّيْبَاجِ، وَالسُّنْدُسِ، وَالْمَيَاثِرِ) رواه البخاري

பராஉ பின் ஆஸிப் رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபி ﷺ அவர்கள் ஏழு விஷயங்களைக் கடைபிடிக்கும்படி எங்களுக்கு கட்டளையிட்டார்கள் மேலும் ஏழு விஷயங்களை செய்ய வேண்டாமென எங்களுக்குத் தடைவிதித்தார்கள் :எங்களுக்கு கட்டளை

யிட்ட ஏழு விஷயங்கள் இவைதான் : 1- நோயாளியை நலம் விசாரிப்பது. 2- ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வது. 3- தும்மிய(வர் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால் அ)வருக்கு யர்ஹமுகல்லாஹ் - அல்லாஹ் உங்களுக்கு கருணை புரிவானாக என்று மறுமொழி கூறுவது. 4- விருந்து அழைப்பை ஏற்றுக்கொள்வது. 5- ஸலாமுக்கு பதில் உரைப்பது. 6- அநீதியிழைக்கப்பட்டவருக்கு உதவுவது. 7- சத்தியம் செய்தவர் அதை நிறைவேற்ற உதவுவது.

அவர் தடைசெய்த ஏழு விஷயங்கள் இவைதான் : 1- தங்கத்திலாலான மோதிரம் அணிவது அல்லது தங்கத்திலாலான வளையம் அணிவது. 2- சாதாரணப் பட்டு அணிவது. 3- அலங்காரப்பட்டு அணிவது. 4- மென்பட்டு அணிவது. 5- (குதிரை,ஒட்டகைச் சேனங்களில் வைத்து தைக்கப்படும் துணிகளில் பட்டுக் கலந்த துணிகளைப் பயன்படுத்துவது.

நூல் : புகாரி.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( خَمْسٌ تَجِبُ لِلْمُسْلِمِ عَلَى أَخِيْهِ : رَدُّ السَّلَامِ، وَتَشْمِيْتُ الْعَاطِسِ، وَإِجَابَةُ الدَّعْوَةِ، وَعِيَادَةُ الْمَرِيْضِ، وَاتِّبَاعُ

الْجَنَائِزِ ) وَفِي رِوَايَةٍ أُخْرَى ذكر الحقوق ستا، وفيها : ( وَاسْتَنْصَحَكَ فَانْصَحْ لَهُ )

رواه مسلم

ஒரு முஸ்லிம் தனது முஸ்லிமான சகோதரனுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து உள்ளன : 1- ஸலாமுக்கு பதில் உரைப்பது. 2- தும்மிய(வர் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால் அ)வருக்கு யர்ஹமுகல்லாஹ் - அல்லாஹ் உங்களுக்கு கருணை புரிவானாக என்று மறு மொழி கூறுவது. 3- விருந்து அழைப்பை ஏற்றுக் கொள்வது. 4- நோயாளியை நலம் விசாரிப்பது. 5- ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வது.

மற்றோர் அறிவிப்பில் ஆறு விஷயங்களைக் கூறினார்கள் : அதில் : உன்னிடம் அவன் நல்லுபதேசம் செய்யுமாறு வேண்டிக்கொண்டால், அவருக்கு நீர் நல்லுபதேசம் செய்வீராக என ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம்

عَنْ أَبِي هُرَيْرَةَ ؓ قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( إِنَّ اللهَ عَزَّوَجَلَّ يَقُولُ يَوْمَ الْقِيَامَةِ : يَا ابْنَ آدَمَ مَرِضْتُ فَلَمْ تَعُدْنِي ! قَالَ : يَا رَبِّ كَيْفَ أَعُودُكَ وَأَنْتَ رَبُّ الْعَالَمِيْنَ ؟! قَالَ : أَمَا عَلِمْتَ أَنَّ عَبْدِي فُلاَنًا مَرِضَ فَلَمْ تَعُدْهُ ؟ أَمَا عَلِمْتَ أَنَّكَ لَوْ عُدْتَهُ لَوَجَدْتَنِي عِنْدَهُ ...) رواه مسلم.

ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள் : நிச்சயமாக கியாமத்துடைய நாளில் அல்லாஹ் : ஆதமின் மகனே ! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். நீ ஏன் என்னை நலம் விசாரிக்கவில்லை என்று கேட்பான்

அப்பொழுது அடியான், என் இரட்சகனே ! நான் உன்னை எவ்வாறு நலம் விசாரிக்க முடியும் ? நீயோ அகிலத்தாரின் இரட்சகனாக இருக்கிறாய் !என்று பதில் அளிப்பான். அப்பொழுது அல்லாஹ்,என் இன்ன அடியான் நோய்வாய்ப்பட்டிருந்தான்,அவனை நீ நலம் விசாரிக்கவில்லை என்பதை நீ அறிவாயா ? நீ அவனை நலம் விசாரித்திருந்தால், அவனிடம் என்னை நீ பெற்றுக் கொண்டிருப்பாய் என்பதை நீ அறிவாயா ? என்று கூறுவான்.)

நூல் : முஸ்லிம்.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களில் நோயாளியை நலம் விசாரிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை தெரிந்துகொண்டோம். எனவே, ஒரு முஸ்லிம் இந்த உயர் பண்பை கற்று, அதனை செயல்படுத்துவ து மிக அவசியமானதாகும். நோயாளியை நலம் விசாரிப்பது பற்றி

ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் தனது சொல்லால் மாத்திரம் வலியுறுத்தவில்லை, மாறாக தனது செயலினாலும் அதனை செய்து காடடி எமக்கு ஒரு பெரும் முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். அவர்கள் நோயாளிகளை நலம் விசாரிப்பதுடன் அவர்களின் வாழ்க்கைச் சிரமங்களை இலகுபடுத்துபவர்களாகவும்,அவர்களை ஆறுதல் படுத்துபவர்களாகவும் இருந்தார்கள்.

عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رضي الله عنه قَالَ : إِنَّا وَاللهِ قَدْ صَحِبْنَا رَسُولَ اللهِ ﷺ فِي السَّفَرِ وَالْحَضَرِ وَكَانَ يَعُودُ مَرْضَانَا وَيَتَّبِعُ جَنَائِزَنَا وَيَغْزُو مَعَنَا وَيُوَاسِينَا بِالْقَلِيلِ وَالْكَثِيرِ.

رواه أحمد وصححه أحمد شاكر.

உத்மான் இப்னு அஃப்பான் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் : அல்லாஹ்வின் மீது ஆணையாக நாம் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களுடன் பயணத்திலும் ஊரிலும் ஒன்றாக இருந்துள்ளோம். அவர்கள் எங்களில் நோயுற்றவர்களை நலம் விசாரிப்பவர்க

ளாகவும், எங்களில் மரணித்தவரின் ஜனாஸாவை பின்தொடர்ந்து செல்பவர்களாகவும், எங்களுடன் இணைந்து யுத்தம் செய்பவர்களா கவும் மற்றும் எமக்கு கொஞ்சம் மற்றும் அதிகப் பொருட்களைக் கொண்டு ஒத்தாசை புரிபவர்களாகவும் இருந்தார்கள்.

நூல் : அஹ்மத்

மேலும், ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் தனது தோழர்களில் பலர் நோயுற்றிருந்த போது அவர்களை நலம் விசாரித்ததாகவும், மேலும், அவர்களிடம் அடிக்கடி வந்து செல்லும் யூதப் பையன் ஒரு வன் நோயுற்றபோது அவனை நலம் விசாரித்து அவன் மரணப் படுக்கையில் இருக்கிறான் என அறிந்ததும் அவனை இஸ்லாத்தின் பக்கம் அழைத்ததும் அவன் இஸ்லாத்தை தழுவினான் என இப்படி யான பல நிகழ்வுகள் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் அறிவிக்கப் பட்டுள்ளன.

**நோயாளியின் நலன் விசாரிப்பவர் கடைபிடிக்க வேண்டிய சில ஒழுக்கங்கள் :**

1- சந்திக்கச் செல்லும் போது கடைபிடிக்க வேண்டிய பொது வான ஒழுக்கங்களை கடைபிடித்தல்.

(கதவை மெதுவாகத் தட்டுதல், தன்னை அறிமுகப்படுத்தல், பார்வையைத் தாழ்த்திக்கொள்ளல், அனுமதிகோரும் போது கதவுக்கு நேராக நிற்காதிருத்தல் போன்றவை).

2- நோயாளியின் நிலைக்கேற்ப பொருத்தமான நேரத்தில் நலம் விசாரிக்கச் செல்லல்.

3- நலம் விசாரிக்கச் செல்பவர் நோயாளிக்கு நெருக்கமாக அமர்ந்து, அவரின் நெற்றியில் கையை வைத்து, அவரின் நலத்தை விசாரித்தல்.

4- தொடர்ச்சியாக இன்றி விட்டுவிட்டு நலம் விசாரிக்கச் செல் லல். ஆனால், தினமும் நோயாளியை சந்திப்பது அவருக்கு

மனஆறுதலை அளிக்குமானால்,அப்போது அவரின் ஆர்வத்தி ற்கேற்ப சந்திப்பை அமைத்துக் கொள்வதில் தவறேதும் கிடையாது.

5- நோயாளிக்கு சடைவு ஏற்படும் அளவுக்கோ அல்லது நோ யாளியின் குடும்பத்தினருக்கு சிரமம் ஏற்படும் அளவுக்கோ நீண்ட நேரம் அவரிடம் அமர்ந்திருப்பதை தவிர்க்க வேண்டு ம். அவ்வாறு இருப்பதற்கு தேவை இருப்பின், அதில் தவறு கிடையாது.

6- நலம் விசாரிக்கச் செல்பவர் நோயாளியிடம் கேள்விகளை அதிகமாகக் கேட்காதிருத்தல். ஏனெனில் அது அவருக்கு சிரமத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும்.

7- நலம் விசாரிக்கச் செல்பவர் நோயாளியின் ஆரோக்கியத்திற் கும், அவரது சீர்திருத்தலுக்கும் துஆச் செய்தல்.

நோயாளியிடம் சென்றால் அவருக்கா கேட்பதற்காக பல துஆக்கள் ஹதீஸ்களில் வந்துள்ளன. அவற்றில் சில :

1- ஸூரதுல் ஃபாதிஹா ஓதுதல்.

2- குல் அஊது பிரப்பில் ஃபலக், குல் அஊது பிரப்பின்னா ஸ் ஆகிய இரு ஸூராக்களையும் ஓதுதல்.

3- குல் ஹுவலலாஹு அஹத் ஸூராவை ஓதுதல்.

4- அஸ்அலுல்லாஹல் அளீம், ரப்பல் அர்ஷில் அளீம் அய்ய ஷ்ஃபியக.

என்று ஏழு முறை ஓதுதல்.

أَسْأَلُ اللهَ الْعَظِيْمَ، رَبَّ الْعَرْشِ الْعَظِيْمِ، أَنْ يَشْفِيَكَ

பொருள் :

மிகப்பெரியவனான, மாபெரும் அர்ஷின் அதிபதியான அல்லாஹ்விடம் உம்மைக் குணப்படுத்தும்படி கேட்கிறேன்.

## الْوَفَاءُ

## வாக்குறுதியை நிறைவேற்றுதல்

வாக்குறுதியை நிறைவேற்றுதல் மிக உயர்ந்த மற்றும் கண்ணியமான பண்புகளில் ஒன்றாகும்.

வாக்களிப்பது முகம் என்றால், அதனை நிறைவேற்றுவது அதன் அழகாகும். வாக்களிப்பது மேகம் என்றால், அதனை நிறைவேற்றுவது மழையாகும் என ஒரு அரேபிய கூற்று கூறுகிறது.

ஒரு முஸ்லிம் ஈமான் என்னும் இறைவிசுவாசத்தின் படித்தரங்களில் முன்னேறிச் செல்லவேண்டுமாயின், முதலில் அவன் தனது வாக்குகளை பூரணமாக நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا أَوْفُوا بِالْعُقُوْدِ ) المائدة : ١.

நம்பிக்கை கொண்டோரே ! உடன்படிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள். 5 : 1.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

(يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا لِمَ تَقُوْلُوْنَ مَا لاَ تَفْعَلُوْنَ ۞ كَبُرَ مَقْتًا عِنْدَ اللهِ أَنْ تَقُوْلُوا مَا لاَ تَفْعَلُوْنَ ) سورة الصف : ٢، ٣.

நம்பிக்கை கொண்டோரே ! நீங்கள் செய்யாதவற்றை ஏன் கூறுகிறீர்கள் ? ۞ நீங்கள் செய்யாதவற்றைக் கூறுவது அல்லாஹ்விடம் கோபத்தால் பெரிதாகி விட்டது. 61 : 2, 3.

வாக்குறுதியை நிறைவேற்றுதல் மனிதநேயத்தின் மிகப்பெரும் பண்புகளில் ஒன்றாகும். எவனிடம் வாக்குறுதியை நிறைவேற்றும் பன்பில்லையோ அவனிடம் மனிதநேயமே இல்லை. மனிதர்கள் தங்களது வாழ்வில் ஒருவருக்கொருவர் உதவி, ஒத்தாசையுடன் வாழ்வது இன்றியமையாததாகும். அவர்களுக்கு மத்தியில் வாழ்க்கை உதவி, ஒத்தாசையுடன் இருக்க வேண்டுமாயின், அவர்கள் தங்களுக்கு மத்தியில் வாக்குறுதிகளை நிறைவேற்றி நடப்பது மிகக் கடமையாகும். இல்லாவிட்டால், உள்ளங்களுக்கிடையில் பிளவும், பிரச்சினையும் உருவாகி , கூட்டுவாழ்வு இல்லாது போய்விடும்.

வாக்குறுதியை நிறைவேற்றுதல் என்னும் போது, அல்லாஹ்வுக்குரிய வாக்குகளை நிறைவேற்றுதல், அல்லாஹ்வின் தூதருக்குரிய வாக்குகளை நிறைவேற்றுதல், மனிதர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுதல் என பல்வகையாக உள்ளன. வாக்களிப்பின் வகைகளையும் மற்றும் எவருக்கு வாக்களிக்கப்படுகிறதோ அவரை பொருத்தும் வாக்கை நிறைவேற்றுவதின் வகைகளும் நீண்டுகொண்டே செல்கிறது.

ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள்தான் வாக்கைநிறைவேற்றுபவர்களுக்கெல்லாம் முன்மாதிரியான தலைவர். அவர்கள் முஸ்லிம் அல்லாத காஃபிர்களுடன் கூட வாக்குறுதியை பேணி நடந்துள்ளார்கள்.

அதற்கு எடுத்துக்காட்டாக அவர்களின் வரலாற்றில் நடைபெற்ற பின்வரும் நிகழ்வைக் குறிப்பிடலாம்.

ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் தாயிஃப் நகரத்தினரை அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் அழைப்பதற்காகச் சென்றார்கள். ஆனால் அந்த மக்கள் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களை ஏற்றுக்கொள்ளாதது மாத்திரமின்றி, அவர்களுக்கு பல இன்னல்களையும் செய்தனர். அதனால் அவர்கள் தாயிஃபிலிருந்து மக்காவை நோக்கி திரும்பி வரும் போது மிகக் கவலையுடன் திரும்பி வந்தார்கள். அத்தோடு அவர்கள் மக்காவை விட்டும் எப்படி வந்தார்களோ, அவ்வாறே அங்கு

திரும்பிச்செல்ல விரும்பவில்லை. மாறாக மக்காவின் முக்கியமானவர்களில் ஒருவரின் பாதுகாப்பிலேயே செல்வது நல்லது எனக்கருதி, அல்முத்இம் பின் அதீ என்பவரின் பாதுகாப்பில் மக்காவில் நுழைந்தார்கள். அப்பொழுது அல்முத்இம் பின் அதீ தனது கோத்திரத்தை ஒன்றுசேர்த்து, எல்லோரும் கவசஆடைகளை அணிந்து, ஆயுதங்களை கைகளில் எடுத்துக் கொண்டனர். பின்னர் அல்முத் இம் பின் அதீ முஹம்மத் தனது பாதுகப்பிலேயே மக்காவிற்குள் நுழைந்துள்ளார் என பகிரங்கமாக அறிவித்தார். பிறகு ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமிற்குள் நுழைந்து, க∴பாவை தவா∴ப் செய்து முடித்தபின் இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள். இதற்கு பல வருடங்கள் கழிந்த பிறகு மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கு ஒரு பெரும் நாட்டையே உருவாக்கினார்கள். மேலும் பத்ர் யுத்தத்தில் மக்கா கா∴பிர்களை தோற்கடித்தார்கள். அதனால், அவர்களில் சுமாரான ஒரு தொகையினர் கைதிகளாக பிடிபட்டனர். அப்போழுது ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் : அல்முத்இம் பின் அதீ இப்போது உயிருடன் இருந்து, இத்துர்நாற்றமுடையவர்களுக்காக என்னிடம் பரிந்து பேசுவாராயின், அவருக்காக இவர்களை நான் விட்டிருப்பேன் எனக் கூறினார்கள். நூல் : புகாரி

இவ்வாறுதான் ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் முஷ்ரிகீன்களுடன் கூட வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

வாக்குறுதியை நிறைவேற்றுவது குறித்து பல ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவை :

عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ : ( اضْمَنُوا لِي سِتًّا مِنْ أَنْفُسِكُمْ أَضْمَنْ لَكُمُ الْجَنَّةَ : اصْدُقُوا إِذَا حَدَّثْتُمْ، وَأَوْفُوا إِذَا وَعَدْتُمْ، وَأَدُّوا إِذَا ائْتُمِنْتُمْ،

وَاحْفَظُوا فُرُوْجَكُمْ وَغُضُّوا أَبْصَارَكُمْ وَكُفُّوا أَيْدِيَكُمْ ) رواه أحمد وصححه الألباني في صحيح الترغيب والترهيب ( صحيح لغيره )

நீங்கள் ஆறு விடயங்களை எனக்கு உறுதி அளித்தால், நான் உங்களுக்கு சுவனம் கிடைக்கும் என உறுதி அளிக்கிறேன். அவையாவன : பேசினால் உண்மை பேசுங்கள், வாக்களித்தால் நிறைவேற்றுங்கள், உங்களை நம்பி ஏதும் அடமான பொருள்கள் கொடுக்கப்பட்டால்,அதனை நிறைவேற்றுங்கள், உங்களது மர்ம உறுப்புக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வைக ளைத் தாழ்த்திக் கொள்ளுங்கள், உங்கள் கைக ளை (தீமைகள் செய்வதை விட்டும்) தடுத்துக் கொள்ளுங்கள் என நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அஹ்மத்

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : فِي خُطْبَتِهِ : (أَوْفُوا بِحِلْفِ الْجَاهِلِيَّةِ فَإِنَّ الإِسْلاَمَ لَمْ يَزِدْهُ إِلاَّ شِدَّةً وَلاَ تُحْدِثُوا حِلْفًا فِي الإِسْلاَمِ )

رواه أحمد

ஜாஹிலிய்யாக் காலத்தின் உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள், ஏனெனில் இஸ்லாம் அதனை இன்னும் அதிகம் வலியுறுத்துகிறது இஸ்லாத்தில் உடன்படிக்கைகளை உருவாக்காதீர்கள் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தங்களது குத்பாவில் கூறியதாக உபாதத் இப்னுஸ் ஸாமித் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அஹ்மத்

ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் வாக்குறுதியை நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும். ஏனெனில்,வாக்குறுதியை நிறைவேற்றாதிருப்பது மோசடியும் உடன்படிக்கையை முறிப்பதுமாகும். இவ்விரு பண்புகளும் வெறுக்கத்தக்க மற்றும் நயவஞ்சகத்தின் பண்புகளில் உள்ளவையாகும்.

ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும் : அவன் பேசினால் பொய்யுரைப்பான். அவன் வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். அவனை நம்பினால் மோசம் செய்வான்

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

بِرُّ الْوَالِدَيْنِ

## பெற்றோர் நலன் பேணுதல்

பெற்றோர் நலன் பேணுதல் என்பது : அவர்களுக்கு உபகாரம் செய்தல், அவர்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல் மற்றும் அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் மரணித்த பின்பு அவர்களுக்காக நலவுகளைச் செய்தல். அல்லாஹு தஆலா பெற்றோருக்கு மிகப் பெரும் மதிப்பையும் அந்தஸ்தையும் அளித்திருப்பதோடு,அவர்களின் நலன் பேணுதல், அவர்களுக்கு உபகாரம் செய்தல், மற்றும் அவர்களின் திருப்தியைப் பெற்றுக்கொள்ள செயல்படுதல் போன்ற விடயங்களை மிகப்பெரும் கடமையாக ஆக்கியுள்ளான்.

பெற்றோர் நலன் பேணுதல் மற்றும் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல் கடமை என்பதை எடுத்துக் காட்டும் சில அல்குர்ஆன் வசனங்கள் :

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وقَضَى رَبُّكَ أَلاَّ تَعْبُدُوا إِلاَّ إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ) بني إسرائيل : ٢٣.

உமது இரட்சகன் தன்னையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். 17 : 23.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ) النساء : ٣٦.

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். 4 : 36.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَوَصَّيْنَا الإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَى وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيْرُ ) لقمان : ١٤.

மனிதனுக்கு, அவனது பெற்றோர் பற்றி நாம் உபதேசித்தோம். அவனது தாய் அவனைப் பலவீனத்திற்கு மேல் பலவீனமாகச் சுமந்தாள். மேலும், அவனது பால்குடி மறத்தல் இரண்டு ஆண்டுகளிலாகும் நீ எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக ! என்னிடமே மீளுதல் உள்ளது. 31 : 14.

**பெற்றோர் நலன் பேணுதலின் சிறப்பு :**

- அது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமல்களில் ஒன்றாகும்.

  பெற்றோர் நலன் பேணுதலுக்கு மிகப் பெரும் சிறப்புகள் இருப்பதோடு, அல்லாஹ்விடத்தில் பெரும் கூலியும் இருக்கிறது

மேலும், அதனை அல்லாஹ் மிகப் பெரும் மற்றும் தனக்கு மிக விருப்பமான அமல்களில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான்.

عَنْ ابْنِ مَسْعُوْدٍ رضي الله عنه قَالَ : سَأَلْتُ النَّبِيَّ ﷺ : أَيُّ الْعَمَلِ أَحَبُّ إِلَى اللهِ تَعَالَى ؟ قَالَ : (الصَّلَاةُ عَلَى وَقْتِهَا) قُلْتُ : ثُمَّ ايٌّ ؟ قَالَ : (بِرُّ الْوَالِدَيْنِ ) قُلْتُ : ثُمَّ ايٌّ ؟ قَالَ : ( الْجِهَادُ فِي سَبِيْلِ اللهِ) متفق عليه.

இப்னு மஸ்ஊத் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் : நபி ﷺ அவர்களிடம், செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானது எது ? எனக் கேட்டேன். அதற்கவர்கள், தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும் எனக் கூறினார்கள். பின்னர் எது ? எனக் கேட்டேன். அதற்கவர்கள், பெற்றோருக்கு நன்மை செய்வதாகும் எனக் கூறினார்கள். பின்னர் எது ? எனக் கேட்டேன். அதற்கவர்கள், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவதாகும் எனக் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

- அல்லாஹ்வின் திருப்தி பெற்றோரின் திருப்தியில் இருக்கிறது

ஒரு முஸ்லிம் எப்போதும் தனது பெற்றோரை திருப்த்திபடுத்தவும், அவர்களை கோபத்திற்கு உள்ளாக்குவதை விட்டும் தூரமாகவும் இருக்க முயற்சிக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் திருப்தியில் அல்லாஹ்வின் திருப்தியும், அவர்களின் கோபத்தில் அல்லாஹ்வின் கோபமும் இருக்கிறது.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( رِضَا الرَّبِّ فِي رِضَا الْوَالِدِ وَسَخَطُ الرَّبِّ فِي سَخَطِ الْوَالِدِ) رواه الترمذي وصححه الألباني.

இறைவனின் திருப்தி தந்தையின் திருப்தியில் இருக்கிறது, இறைவனின் கோபம் தந்தையின் கோபத்தில் இருக்கிறது என ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( مَنْ أَرْضَى وَالِدَيْهِ فَقَدْ أَرْضَى اللهَ وَمَنْ أَسْخَطَ وَالِدَيْهِ فَقَدْ أَسْخَطَ اللهَ ) رواه البخاري.

எவர் தனது பெற்றோரை திருப்திப்படுத்தினாரோ அவர் அல்லாஹ்வை திருப்திப்படுத்திவிட்டார். எவர் தனது பெற்றோரை கோபப்படுத்துகிறாரோ, அவர் அல்லாஹ்வை கோபப்படுத்திவிட்டார் என ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : புகாரி.

- சுவர்க்கம் தாயின் பாதத்தின் கீழ் இருக்கிறது.

ஒருவர் ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்து தான் ஜிஹாத் செய்ய விரும்புவதாகக் கூறினார். அதற்கவர்கள் வீடுசென்று தனது தாய்க்கு நலன் செய்யுமாறு கூறினார். வந்தவர் இரண்டாவது முறையும் முதல் முறை கூறியவாறே கூறினார் அதற்கு ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களும் முதல் முறை பதில் சொன்னதைப் போன்று இரண்டாவது முறையும் பதில் சொன்னார்கள். வந்தவர் மூன்றாவது முறையும் அவ்வாறே கூறினார். அதற்கு நீ உனது தாயின் பாதத்தை பற்றிக்கொள் அங்கோதான் சுவர்க்கம் இருக்கிறது என ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : இப்னு மாஜா.

- பெற்றோருக்கு நன்மை செய்வது ஜிஹாத் செய்வதை விடவும் சிறந்ததாகும்.

ஒருவர் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்து ஜிஹாத் செய்வதற்கு அனுமதி கேட்டார். அப்போது, உனது பெற்றோர் உயிருடன் இருக்கின்றார்களா ? என அவரிடம் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கேட்டார்கள். அதற்கவர் ஆம் எனக் கூறினார். அவ்வாறாயின் அவர்கள் இருவரிலும் (அவர்களுக்கு நன்மை செய்வது கொண்டு) நீர் ஜிஹாத் செய்துகொள் என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

ஒருவர் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்து, ஹிஜ்ரத் மற்றும் ஜிஹாத் செய்வதற்கும் அல்லாஹ்விடம் நற்கூலியை எதிர்பார்த்து உங்களுக்கு பைஅத் செய்கிறேன் என்றார் ? அதற்கு உமது பெற்றோரில் ஒருவரேனும் உயிருடன் இருக்கின்றாரா ? என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கேட்டார்கள். அவர், ஆம் இருவருமே உயிருடன்தான் இருக்கின்றார்கள் எனக் கூறினார். அதற்கு நீ அல்லாஹவிடம் நற்கூலியை எதிர்பார்க்கின்றீரா ? என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கேட்டார்கள். அதற்கவர் ஆம் என்றார். அப்படியாயின் நீர் உனது பெற்றோரிடம் சென்று,அவர்களுட

ன் நல்ல முறையில் நடந்துகொள்வாயாக என ரஸூ லு ல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

**முஸ்லிம் அல்லாத பெற்றோருக்கு நலன் செய்தல் :**

ஸஃத் இப்னு அபீவக்காஸ் رضي الله عنه அவர்கள் தனது தாயா ரின் நலன் பேணிநடப்பவர். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது, அவரது தாயார், ஸஃதே ! நீ என்ன செய்து கொண்டாய் ? நீ உனது இந்த மார்க்கத்தை விட் டுவிடாவிட்டால்,நான் மரணிக்கும் வரை உண்ணவோ பருக வோ மாட்டேன்.நான் அந்த நிலையில் மரணமடைந்தால், தனது தாயை கொலை செய்தவன் என்று மக்கள் உன் னைக் குறைகூறி அழைப்பார்கள் எனக் கூறினார்கள். அதற்கு எனது தாயே ! நீங்கள் அவ்வாறு செய்யாதீர்கள். நான் எனது இந்த மார்க்கத்தை எக்காரணத்திற்காகவும் விடமாட்டேன் என ஸஃத் இப்னு அபீவக்காஸ் رضي الله عنه அவர்கள் கூறினார்கள். பின்னர் அந்தத் தாய் ஒரு நாள் முழுவதும் உண்ணாமலும் பருகாமலும் இருந்தார். அதனால் அவரது பசியின் கொடூரம் அதிகரித்தது.

அப்போது ஸஃத் இப்னு அபீவக்காஸ் رضي الله عنه அவர்கள் தனது தாயைப் பார்த்து : தாயே ! உங்களுக்கு நூறு உயிர்கள் இருந்து, அவைகளை ஒன்றன் பின் ஒன்றாக நீங்கள் விட்டாலும் கூட அல்லாஹ்வின் மீது ஆணையாக எதற்காகவும் எனது இந்த மார்க்கத்தை நான் விடமாட்டே ன் என்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்.

எனவே,நீங்கள் விரும்பினால்,உண்ணுங்கள்,இல்லாவிட்டால் உண்ணாது இருங்கள் எனக் கூறினார்கள். ஸஃத் இப்னு அபீவக்காஸ் ﵁ அவர்களின் இஸ்லாத்தின் மீதுள்ள விடாப்பிடியைக் கண்டதும் அந்தத் தாய் உண்ராா்கள். இந்த விடயத்தில் அல்லாஹு தஆலா பின்வரும் வசனத்தை இறக்கிவைத்தான் :

( وَإِنْ جَاهَدَاكَ عَلَى أَنْ تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلاَ تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوْفًا ) لقمان : ١٥.

உனக்கு அறிவில்லாத ஒன்றை எனக்கு நீ இணைவைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால், அவ்விருவருக்கும் நீ கட்டுப்பட வேண்டாம். இவ்வுலகில் அவ்விருவருடனும் நல்லமுறையில் சேர்ந்து நடப்பாயாக. 31 : 15.

அபூபக்ர் ﵁ அவர்களின் மகளான அஸ்மா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் கூறுகிறார்கள் : என்னுடைய தாயார் இஸ்லாத்தை ஏற்றிருக்காத நிலையில் நபி ﷺ அவர்களின் காலத்தில் என்னை சந்திப்பதற்காக வந்தார். இது குறித்த மார்க்க சட்டத்தினை தெரிந்து கொள்வதற்காக நான் ரஸூலுல்லாஹி ﷺ அவர்களிடம் சென்று, எனது தாயார் எனது நல்லுறவில் ஆர்வமுள்ளவராக என்னை சந்திக்க வந்துள்ளார். எனவே, நான் அவர்களுடன் உறவைப் பேணி நடப்பதற்கு எனக்கு அனுமதியுண்டா ? எனக் கேட்டேன். அதற்கு ஆம் நீ உனது தாயின் உறவை சேர்ந்து நடந்து கொள் என ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

**பெற்றோரின் மரணத்திற்கு பின் அவர்களுக்கு நன்மை செய்தல் :**

ஒரு முஸ்லிம் தனது பெற்றோர் உயிருடன் இருக்கும் போது எவ்வாறு நலன் பேணி நடக்க வேண்டுமோ, அவ்வாறே அவர்களின் மரணத்திற்குப் பிறகும் அவர்களின் நலன் பேணி நடக்க வேண்டும். மேலும் அவர்களின் ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டும், அவர்களின் நண்பர்களை கௌரவப்படுத்த வேண்டும். மேலும் அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளும் பாவமன்னிப்பும் கிடைக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ்விடம் அதிகஅதிகம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

( رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ ) سورة إبراهيم : ٤١.

எங்கள் இரட்சகனே ! எனக்கும், என் பெற்றோருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் விசாரணை நடைபெறும் நாளில் மன்னிப்பளிப்பாயாக! 14 : 41.

( رَبِّ اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِي مُؤْمِنًا وَلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ )

سورة نوح : ٢٨.

எனது இரட்சகனே ! என்னையும் எனது பெற்றோரையும், நம்பிக்கையாளராக எனது வீட்டில் நுழைந்தவரையும், மேலும், நம்பிக்கையாளர்களான ஆண்களையும், பெண்களையும் மன்னிப்பாயாக !

72 : 28.

பெற்றோருக்கு நாம் மிகக்கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் எமது மகிழ்ச்சிக்காக சிரமப்பட்டார்கள், துன்பங்களை சுமந்தார்கள். மனிதர்களுக்கு மனிதர்கள் செய்யும் மிகப்பெரும் நம்பிக்கை நிறைவேற்றல், குழந்தைகள் தங்களது பெற்றோருக்கு செய்யும் நம்பிக்கை நிறை

வேற்றலாகும். குழந்தைகளின் ஈருலக சுபீட்சமும் பெற்றோரை திருப்திப்படுத்துவதில் இருக்கிறது.

## حَقُّ الْجَارِ

## அண்டை வீட்டாரின் உரிமைகள்

அண்டை வீட்டான் என்பவன் ஒருவருக்கு பக்கத்தில் குடியிருப்பவனாவான். அவன் முஸ்லிமாகவோ, கா∴பிராகவோ, நல்லவனாகவோ, கெட்வனாகவோ, நண்பனாகவோ, எதிரியாகவோ, உபகாரம் செய்பவனாகவோ, உபாயம் செய்பவனாகவோ, நன்மை செய்பவனாகவோ, தீமை செய்பவனாகவோ, சொந்தக்காரனாகவோ, சொந்தம் இல்லாதவனாகவோ, ஊர்க்காரனாகவோ அல்லது வேற்றூர்க்காரனாகவோ இருக்கலாம்.

அண்டை வீட்டாரின் நெருக்கம், சொந்தம், மார்க்கம் மற்றும் இறையச்சம் போன்ற நிலைகளுக்கேற்ப அவரின் படித்தரமும் கூடவும், குறையவும் செய்கின்றது. எனவே, எல்லா அண்டை வீட்டாரும் ஒரே அந்தஸ்தில் பார்க்கப்பட மாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலைக்கேற்ப உரிமைகள் வழங்கப்படும். எனவே, அண்டை வீட்டார்கள் பல படித்தரம் கொண்டவர்கள்.

அண்டை வீட்டார், எத்தனை வீடுகளைக் கொண்டது என்பதில் இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் பல கருத்துகள் உள்ளன :

1- எல்லாத் திசைகளிலும் நாற்பது வீடுகள்.

2- எல்லாத் திசைகளிலும் பத்து வீடுகள்.

3- வீட்டோடு ஒட்டியிருக்கும் வீடுமாத்திரம்.

4- ஊர் வழமைக்கேற்ப கணிக்கப்படும். அதாவது,ஊர் வழமையில் எவர்கள் அண்டை வீட்டுக்காரர்கள் என கணிக்கப்படுகின்றனரோ, அவர்களாவர்.

இந்த நான்காவது கருத்தே ஏற்றமானதாகும்.

அண்டை வீட்டார் என்னும் போது அடுத்த வீட்டில் குடியிருப்பவர் என்ற கருத்தோடு நின்றுவிடாது. மாறாக, வியாபார நிலையம், கடைத்தெரு,விவசாயநிலம்,காரியாலயம், வகுப்பறை மற்றும் பயணம் போன்றவற்றிலும் ஒருவரோடு கூட்டாக இருப்பவர்கள் இந்தக் கருத்தில் உள்ளடங்குவர்.

அண்டை வீட்டாருக்கு இஸ்லாத்தில் மிக உயர் அந்தஸ்து இருக்கிறது, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது மேலும் மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ள உரிமைகளில் அறிந்துகூட இல்லாத அதிகமான உரிமைகள் அவர்கள் விடயத்தில் உள்ளன. எனவே இஸ்லாம் அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுமாறு பணித்துள்ளது.

அண்டை வீட்டாரின் உரிமை இஸ்லாத்தில் மிக உயர்ந்தது என்பதை எடுத்துக்காட்டும் விதத்திலேயே, அல்லாஹ்வை வணங்குதல், பெற்றோருக்கு,அனாதைகளுக்கு மற்றும் உறவினர்களுக்கு நன்மை செய்தல் ஆகியவற்றுடன் இணைத்து அண்டை வீட்டாரின் உரிமையையும் கூறியுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَبِذِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِيْنِ وَالْجَارِ ذِي الْقُرْبَى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْبِ وَابْنِ السَّبِيْلِ وَمَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ) النساء : ٣٦.

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். இன்னும் பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், அனாதைகள், வறியவர்கள், உறவினர்களான அயலவர்கள், அந்நிய

அயலவர்கள், அருகிலுள்ள நண்பர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் அடிமைகள் ஆகியோர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங் கள். 4 : 36.

அண்டை வீட்டாரின் உரிமைகளைப் பேணுதல், அவர்களின் மானத் தைக் காத்தல், அவர்களின் கண்ணியத்தை பாதுகாத்தல், அவர்க ளின் குறைகளை மறைத்தல்,அவர்களின் பெண்களைப் பார்க்காது பார்வையைத் தாழ்த்திக்கொள்ளல் மற்றும் அவர்களுக்கு சந்தேக த்தை உண்டுபண்ணக் கூடிய அல்லது தீமையை ஏற்படுத்தக் கூடிய அனைத்துக் காரணங்களையும் விட்டும் தூரமாக இருத்தல் போன்ற தெளிவுரைகளும், வலியுறுத்தல்களும் அடங்கிய ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களின் ஹதீஸ்கள் அதிகம் உள்ளன. அவற்றில் ஒன்று :

عَنِ ابْنِ عُمَرَ وَعَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالاَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( مَا زَالَ جِبْرِيْلُ يُوْصِيْنِي بِالْجَارِ حَتَّى ظَنَنْتُ أَنَّهُ سَيُوَرِّثُنِي ) متفق عليه.

அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக ஆக்கி விடுவாரோ என்று நான் நினைக்குமளவு அண்டை வீட்டாரின் நலன்களைப் பேணுவதைப் பற்றி ஜிப்ரீல் عَلَيْهِ السَّلَامُ அவர்கள் எனக்கு உபதேசம் செய்து கொண்டேயிருந்தார்கள் என ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக இப்னு உமர் மற்றும் ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهُمَا ஆகியோர் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸ் இரத்தினச் சுருக்கமாகவும், உருக்கமானதாகவும் இருக்கிறது. அண்டை வீட்டாரின் நலன்களை பேணுவது என்பது அவர்களுக்கு நன்மை செய்வதும்,தீங்கு இழைப்பதைத் தவிர்த்தலு மாகும்.

(அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக ஆக்கி விடுவாரோ என்று நான் நினைக்குமளவு ) என்ற ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களின் இக்கூற்று அண்டை வீட்டாரின் நலன் பேணுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுவதோடு, அவர்களின் உரிமைகளைப் பேணவும் தூண்டுகிறது.

**அண்டை வீட்டாரின் உரிமைகள் :**

அண்டை வீட்டாரின் உரிமைகள் அதிகம் உள்ளன. ஆனால், அவையனைத்தும் அடிப்படையான நான்கு உரிமைகளில் அடங்குகின்றன. அவை :

1- அவர்களுக்கு இடையூறு செய்வதை தடுத்துக்கொள்ளல்.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( لاَ يَدْخُلُ الْجَنَّةَ مَنْ لاَ يَأْمَنُ جَارُهُ بَوَائِقَهُ ) رواه مسلم.

எவனின் தீங்குகளை விட்டும் அண்டை வீட்டுக்காரர்களுக்கு அச்சம் தீரவில்லையோ அவன் சுவர்க்கம் நுழையமாட்டான் என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

2- அவர்களைப் பாதுகாத்தல்.

அண்டை வீட்டாரின் மானம், உடல், பொருள் மற்றும் இவை போன்றவைகளில் அவர்களுக்கு ஏற்படும் சோதனைகளில் அவர்களைப் பாதுகாத்தல். இது ஒரு மனிதனின் உயர் மனநிலையை எடுத்துக் காட்டுகிறது.

3- அவர்களுக்கு உபகாரம் மற்றும் நன்மை செய்தல்.

அதாவது, அவர்களுக்கு என்ன வகைகளிலெல்லாம் நன்மை, உபகாரம் செய்ய முடியுமோ, அந்த எல்லா வகைகளிலும் நன்மை

செய்தல். இது ஒரு மனிதனின் சிறப்புக்கும், ஈமானுக்கும் எடுத்துக்காட்டாகும், உண்மையின் முகவரியுமாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ، وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيُكْرِمْ جَارَهُ، وَ مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ ) متفق عليه

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர், நல்லதைப் பேசட்டும் அல்லது வாய்மூடி இருக்கட்டும். அல்லாஹ்வையும் மறுமை நளையும் நம்பிக்கை கொண்டவர், தம் அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர், தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

4- அவர்களின் இடையூறுகளைச் சகித்துக்கொள்ளல்.

அதாவது, அவர்களின் தவறுகளை கண்டுகொள்ளாதிருத்தல், அவர்களின் குற்றங்களை மன்னித்தல், குறிப்பாக, வேண்டுமென்றனறு அவர்களால் நடந்த குற்றங்கள் அல்லது அவர்கள் செய்த குற்றத்திற்காக வருந்திய குற்றங்கள் அல்லது அவர்கள் செய்த குற்றத்திற்காக மன்னிப்பு வேண்டிய குற்றங்கள் போன்றவற்றை மன்னித்து நடத்தல்.

இஸ்லாமிய அறிஞர்கள் அண்டை வீட்டாரை மூன்று வகைப்படுத்தியிருக்கின்றனர் :

1- ஒரு உரிமைக்குத் தகுதியான அண்டை வீட்டார்.

இவர் முஸ்லிம் அல்லாத அண்டை வீட்டார். இவருக்கு அண்டை வீடு என்ற உரிமை மாத்திரமே உண்டு.

2- இரண்டு உரிமைகளுக்குத் தகுதியான அண்டை வீட்டார்.

இவர் முஸ்லிமான அண்டை வீட்டார். இவருக்கு அண்டை வீடு என்ற உரிமையுடன் இஸ்லாத்தின் உரிமையும் உண்டு

3- மூன்று உரிமைகளுக்குத் தகுதியான அண்டை வீட்டார்.

இவர் உறவினரான முஸ்லிம் அண்டை வீட்டார். இவருக்கு அண்டை வீடு, இஸ்லாம் என்பவற்றின் உரிமைகளுடன், இனபந்து என்ற உரிமையும் உண்டு.

## الْحِلْمُ

## சகிப்புத்தன்மை

சகிப்புத்தன்மை என்பது : கடுமையான கோபத்தின் போது பழி வாங்குவதற்குச் சக்தியிருந்தும் பழிவாங்காதிருப்பதாகும்.

அல்லாஹு தஆலாவின் அழகிய திருநாமங்களில் ஒன்று الْحَلِيْمُ – அல்ஹலீம் - சகிப்புத்தன்மை உடையவன்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( لاَ يُؤَاخِذُكُمُ اللهُ بِاللَّغْوِ فِي أَيْمَانِكُمْ وَلَكِنْ يُؤَاخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ وَاللهُ غَفُوْرٌ حَلِيْمٌ ) البقرة : ٢٢٥.

உங்கள் சத்தியங்களில் வீணானவற்றுக்கு அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்கமாட்டான். எனினும், உங்கள் உள்ளங்கள் (சத்தியம் செய்யும் நோக்கத்துடன்) செய்பவற்றுக்காக அவன் உங்களைக் குற்றம் பிடிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், சகிப்புத்தன்மை உடையவன். 2 : 225.

இமாம் கஸாலீ رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

اَلْحَلِيْمُ – அல்ஹலீம் - சகிப்புத்தன்மை உடையவன் என்பவன் : மாறுசெய்பவர்களின் மாறுபாட்டையும், கட்டளைக்கு முரண்பாட்டையும் கண்டும், கோபம் ஏற்படாமலும், சினம் ஆட்கொள்ளாமலும் பழிவாங்குவதற்கு மிக ஆற்றல் இருந்தும், அவனது கோபம் மிக விரைவாக பழிவாங்குவதற்கு அவனைத் தூண்டாது இருக்குமே அவன்தான் சகிப்புத்தன்மை உடையவனாவான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَلَوْ يُؤَاخِذُ اللهُ النَّاسَ بِظُلْمِهِمْ مَا تَرَكَ عَلَيْهَا مِنْ دَابَّةٍ ) النحل : ٦١.

மனிதர்களை, அவர்களது அநியாயத்தின் காரணத்தால் (உடனுக்குடன்) அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால், (பூமியாகிய) அதில் எந்த உயிரினங்களையும் விட்டு வைத்திருக்க மாட்டான். 16 : 61.

சகிப்புத்தன்மை என்பது நபிமார்கள் மற்றும் முஃமின்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ إِبْرَاهِيْمَ لَأَوَّاهٌ حَلِيْمٌ ) التوبة : ١١٤.

நிச்சயமாக இப்றாஹீம் இளகிய மனம் படைத்தவரும், சகிப்புத்தன்மையுடையவருமாவார். 9 : 114.

அஷஜ் இப்னு அப்துல் கைஸ் என்றவரிடம் சகிப்புத்தன்மை இருப்ப தைக் கண்ட ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள், அவரைப் புகழ்ந்து பின்வருமாறு கூறினார்கள் :

( إِنَّ فِيْكَ لَخَصْلَتَيْنِ يُحِبُّهُمَا اللهُ : الْحِلْمُ وَالأَنَاةُ ) رواه مسلم

நிச்சயமாக உம்மிடம் அல்லாஹ் விரும்பும் இரண்டு நற்குணங்கள் உள்ளன 1- சகிப்புத்தன்மை 2- அவசரமின்றி (சிந்தித்து) செயலாற் றுவது.

நூல் : முஸ்லிம்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( التَّأَنِّي مِنَ اللهِ وَالْعَجَلَةُ مِنَ الشَّيْطَانِ وَمَا أَكْثَرَ مَعَاذِيْرَ مِنَ اللهِ وَمَا مِنْ شَيْءٍ أَحَبَّ إِلَى اللهِ مِنَ الْحِلْمِ )
أخرجه المنذري في الترغيب والترهيب.

அவசரமின்றி செயலாற்றுவது அல்லாஹ்வின் புறத்தினாலாகும். அவசரம் ஷைத்தானின் புறத்தினாலாகும். அல்லாஹ்வின் புறத்தினா லான மன்னிப்புகள் எவ்வளவு அதிமாக உள்ளன !. சகிப்புத்தன்மை யை விடவும் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான வேறு எதுவும் இல்லை என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : அத்தர்கீபு வத்தர்ஹீப்.

சகிப்புத்தன்மை புகழுக்குத் தகுதியான ஒரு பண்பாகும். அது தலை வர்கள் மற்றும் அரசர்களிடம் இருக்குமாயின் அது மிக மிக சிறப்பா னதாகும். ஏனெனில், அவர்களின் கோபத்திற்குள்ளானவர்களை பழிவாங்குவதற்கு அவர்களுக்கு பூரண சக்தியிருக்கிறது. அதேவே ளை பெரியவர் ஒருவரின் விடயத்தில் சிறியவர் ஒருவர் பொறுமையா

க இருப்பதை சகிப்புத்தன்மையாகவோ அல்லது சிறப்புப்பண்பாக வோ கணிக்கப்படமாட்டாது. ஏனெனில், சகிப்புத்தன்மை என்பது பழிவாங்குவதற்கு சக்தியிருந்தும் அதனை செய்யாதிருத்தலாகும். எனவே, சிறுவனின் விடயத்தில் அது பயமாக கணிக்கப்படுமே தவிர சகிப்புத்தன்மையாகக் கணிக்கப்பட மாட்டாது.

சகிப்புத்தன்மையில் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அதற்கு பின்வரும் அறிவிப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ أَنَّهُ قَالَ : كُنْتُ أَمْشِي مَعَ رَسُولِ اللهِ ﷺ وَعَلَيْهِ رِدَاءٌ نَجْرَانِيٌّ غَلِيظُ الْحَاشِيَةِ فَأَدْرَكَهُ أَعْرَابِيٌّ فَجَبَذَهُ بِرِدَائِهِ جَبْذَةً شَدِيدَةً نَظَرْتُ إِلَى صَفْحَةِ عُنُقِ رَسُولِ اللهِ ﷺ وَقَدْ أَثَّرَتْ بِهَا حَاشِيَةُ الرِّدَاءِ مِنْ شِدَّةِ جَبْذَتِهِ ثُمَّ قَالَ : يَا مُحَمَّدُ ! مُرْ لِي مِنْ مَالِ اللهِ الَّذِي عِنْدَكَ فَالْتَفَتَ إِلَيْهِ رَسُولُ اللهِ ﷺ فَضَحِكَ ثُمَّ أَمَرَ لَهُ بِعَطَاءٍ ) رواه البخاري

அனஸ் ரழி அவர்கள் கூறுகிறார்கள் : நான் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களுடன் சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஓரம் தடித்த நஜ்ரான் தேசத்தின் போர்வையொன்று அவர்கள் மீது இருந்தது. அப்போது ஒரு கிராமப்புற அரபியோருவர் அவரிடம் வந்து, அவரின் போர்வையை மிகப்பலமாக இழுத்தார். அவ்வேளை ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களின் கழுத்தின் ஓரத்தை நான் பார்த்தேன், அக்கிராமம்புற மனிதர் இழுத்த வேகத்தினால் போர் வையின் ஓரம் அவர்களின் கழுத்தில் அடையாளத்தை ஏற்படுத்தியி ருந்தது. பின்னர் முஹம்மதே! அல்லாஹ்வின் சொத்துகளிலிருந்து உன்னிடம் இருக்கின்றவற்றில் எனக்கு அளிக்குமாறு நீர் கட்டளை

யிடுவீராக எனக் கூறினார். அப்போது ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் அம்மனிதரைப் பார்த்துச் சிரித்துவிட்டு, அவருக்கு நன்கொடை வழங்குமாறு கட்டளையிட்டார்கள்

நூல் : புகாரி

பழிவாங்குவதற்கு மற்றும் தண்டிப்பதற்கு ஆற்றலிருந்தும் அதனை விட்டுவிடுவதே, சகிப்புத்தன்மையாகும். அவ்வாறில்லாவிட்டால், அது பலவீனமும், இழிவுமாகும். ஒரு மனிதன் தன்னை சகிப்புத்தன்மைக்கு பயிற்றுவிப்பதன் மூலமாகவும், அந்த உயர் பண்பை தான் கடைபிடித்தால் அல்லாஹ்விடம் தனக்குக் கிடைக்கும் பெரும் கூலியை ஆதாரவு வைப்பதன் மூலமாகவும் இந்தச் சகிப்புத்தன்மையை தனக்குள் உருவாக்கிக்கொள்ள முடியும். மிகக் குறைந்தவர்களே சுகிப்புத்தன்மையுடையவர்கள். ஒருவரிடம் சகிப்புத்தன்மை இருந்தால், அதனால் அவர் அல்லாஹ்வின் அன்பையும், அவனது பொருத்தத்தையும் பெற்றுக் கொள்வதோடு நிறைவான நற்கூலியையும், சுவர்க்கத்தில் உயர் அந்தஸ்துகளையும் அடைந்து கொள்கிறான். மேலும், சகிப்புத்தன்மை ஒரு மனிதனின் புத்தி நிறைவுக்கும், பரந்த மனப்பான்மைக்கும் மற்றும் தன்னடக்கம் போன்றவற்றுக்கும் ஒரு பெரும் எடுத்துக்காட்டாகும்.

## الْحَيَاءُ

## வெட்கம்

**வெட்கம் என்பது :** அருவருப்பான சொல், செயல்களை விட்டுவிடவும், நல்லவைகளைச் செய்யவும் தூண்டும் ஒரு பண்பாகும்.

இமாம் இப்னுல் கய்யிம் رَحِمَهُ اللهُ அவாகள் கூறுகிறார்கள் :

حَيَاء - ஹயா – வெட்கம் என்னும் அரபிச் சொல் حَيَاة - ஹயாத்-வாழ்வு – என்ற அரபிச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். ஏனெனில்,

அருவருக்கத்தக்க செயல்களைத் தடுக்கும் சக்திகொண்டு வெட்கம் இருப்பது, உயிரோட்டமுள்ள உள்ளமுடையவரின் உள்ளத்தில் மட்டும்தான். ஏனெனில், உள்ளத்தை சீர்கெடுக்கக் கூடிய அருவருக்கத்தக்கவைகளை விட்டும் தடுப்பது உள்ளத்தின் உயிரோட்டமாகும். எனவேதான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும் எனக் கூறியுள்ளார்கள்.

மேலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வெட்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்கள்.

عَنْ أَبِي سَعِيْدِ الْخُدْرِي رضي الله عنه قَالَ :( كَانَ رَسُوْلُ اللهِ ﷺ أَشَدَّ حَيَاءً مِنَ الْعَذْرَاءِ فِي خِدْرِهَا فَإِذَا رَأَى شَيْئًا يَكْرَهُهُ عَرَفْنَاهُ فِي وَجْهِهِ) متفق عليه.

கன்னிப் பெண் தன் அறையில் வெட்கப்படும் வெட்கத்தை விட மிக அதிகமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வெட்கப்படுபவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு வெறுப்பான ஏதாவதொரு விஷயத்தை அவர்கள் பார்த்தால், அதனை (அவர்களின் வெறுப்பை) அவர்களின் முகத்தில் நாங்கள் அறிந்து கொள்வோம் என அபூஸயீத் அல்குத்ரீ رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

வெட்கம் ஈமானுடன் இணைக்கப்பட்டு கூறப்படுவது, அதற்கு இஸ்லாமிய ஷரீஆவில் அளிக்கப்பட்டிருக்கும் மகத்துவத்தையும், உயர் அந்தஸ்தையும் எடுத்துக்காட்டுகிறது.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( الْحَيَاءُ وَالإِيْمَانُ قُرِنَا جَمِيْعًا، فَإِذَا رُفِعَ أَحَدُهُمَا رُفِعَ الآخَرُ )

வெட்கமும், ஈமானும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டே உள்ளன அவற்றில் ஒன்று நீக்கப்பட்டால், மற்றதும் நீக்கப்பட்டுவிடும் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மனிதனின் மனோயிச்சைகளை நிறைவேற்றுவதில் வெட்கம் அமைந் திருப்பது போன்று,அது ஈமானின் பண்புகளில் ஒன்றுமாகும். ஈமான் எந்தத் தீய குணங்களை விட்டுமெல்லாம் தடுக்கின்றதோ, வெட்க மும் அவற்றை விட்டும் தடுக்கும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( الإِيْمَانُ بِضْعٌ وسَبْعُوْنَ أَوْ بِضْعٌ وَسِتُّوْنَ شُعْبَةً فَأَفْضَلُهَا قَوْلُ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَدْنَاهَا إِمَاطَةُ الأَذَى عَنِ الطَّرِيْقِ وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الإِيْمَانِ ) متفق عليه.

ஈமான் எழுபதும அல்லது அறுபதும சில்லரைக் கிளைகளாகும்.

அவற்றில் மிக மேலானது ' லா இலாஹ இல்லல்லாஹ் ' எனும் திருக்கலிமாவாகும். அவற்றில் மிகத் தாழ்மையானது பாதையில் உள்ள இடையூறு அளிக்கும் பொருளை அகற்றுவதாகும். வெட்கம் ஈமானின் ஒரு கிளையாகும் என ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகுவதற்கான இரகசியம் என்னவெனில், ஈமான் மற்றும் வெட்கம் ஆகிய இரண்டும் நன்மையை செய்யத் தூண்டக் கூடியதாகவும், அதன் பால் நெருக்கி வைக்கக் கூடியதாகவும், தீமையை விட்டும் தடுக்கக் கூடியதாகவும் மேலும் அதனை விட்டும் தூரப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன. ஆகவே, ஈமான் நன்மைகளைச் செய்யவும், தீமைகளை செய்வதை விட்டு விடவும் தூண்டுகிறது. மேலும், வெட்கம் அல்லாஹ்வின் கடமைகளில் குறை செய்வதையும், அவனுக்கு நன்றி செலுத்துவதில் குறை செய்வதையும் தடுப்பதோடு, பழிப்பு மற்றும் குறைகூறுதலை அஞ்சி அருவருப்பான சொல் செயல்களை விட்டும் தடுக்கின்றது.

இக்காரணத்தினாயே, வெட்கம் நல்லதாகவும், நலவைத் தவிர வேறெதனையும் கொண்டு வராததாகவும் இருப்பதோடு, வெட்கமே எல்லா நலவுகளுக்கும் அடிப்படையாகவும் இருக்கிறது.

عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( الْحَيَاءُ لا يَأْتِي إِلاَّ بِخَيْرٍ ) متفق عليه.

வெட்கம், நலவைத் தவிர வேறெதனையும் கொண்டு வராது என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாக இம்ரான் இப்னு ஹுஸைன் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

உலமாக்கள் கூறுகிறார்கள் :

حَيَاء - ஹயா – வெட்கம் என்னும் அரபிச் சொல் حَيَاة - ஹயாத்- வாழ்வு – என்ற அரபிச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். எனவே, உள்ளத்தின் உயிரோட்டத்திற்கேற்ப வெட்கம் என்னும் பண்பின் பலமும் இருக்கும். வெட்கக் குறைவுக்குக் காரணம், உள்ளத்தின் மரணமாகும்.

வெட்கத்திலேயே மிகச் சிறந்த வெட்கம், அல்லாஹ்விடம் வெட்கப் படுவதாகும். அதாவது, அல்லாஹ் தடுத்த செய்லை அடியான் செய்வதை அவன் பார்க்கக் கூடாது. இந்நிலை உருவாகுவது அல்லாஹ்வைப் பற்றிய அறிவும், அல்லாஹ் எப்போதும் கண்காணி த்துக் கொண்டிருக்கிறான் என்ற சிந்தனையும் மூலமாகும். இதனை யே அல்இஹ்ஸான் எனக் கூறப்படும். அதனை ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் ஜிப்ரீல் عليه السلام அவர்களின் கேள்விக்கு பதிலா க பின்வருமாறு கூறினார்கள் :

( الإِحْسَانُ : أَنْ تَعْبُدَ اللهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ )

அல்இஹ்ஸான் என்பது அல்லாஹ்வை நீர் பார்ப்பது போல் வணங்க வேண்டும். நீர் அவனைப் பார்க்கவில்லையென்றாலும் அவன் உம்மைப் பார்க்கிறான் எனப் பகர்ந்தார்கள்.

இந்த வெட்கமே ஈமான் மற்றும் இஹ்ஸான் ஆகியவற்றின் உயர் படித்தரங்களாகும்.

வெட்கம் ஒரு முஃமினின் அடிப்படைக் கொள்கையில் ஒரு பகுதியா கும். எனவே, அது அவனின் நிழலைப் போன்று அவனுடன் ஒட் டியிருக்கும்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ مَرَّ عَلَى رَجُلٍ مِنَ الأَنْصَارِ وَهُوَ يَعِظُ أَخَاهُ فِي الْحَيَاءِ فَقَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( دَعْهُ فَإِنَّ الْحَيَاءَ مِنَ الإِيْمَانِ ) متفق عليه.

அப்துல்லாஹ் இப்னு உமர் رضي الله عنهما அவர்கள் அறிவிக்கிறார்க ள் : ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள், ஒரு அன்ஸாரி ஸஹாபியின் அருகில் நடந்து சென்றார்கள். அவர் தன் சகோதரருக்கு வெட்கத்

தின் விஷயத்தில் (வெட்கப்படவேண்டாம் என) உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் அவரை விட்டு விடுவீராக! நிச்சயமாக வெட்கம் ,ஈமானில் ஒரு பகுதியாகும் என கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

எனவே, மனிதர்களிடம் வெட்கப்படுபவன், குறைகூறப்படும் தீய பண்புகளை விட்டும், மோசமான சொல்செயல்களை விட்டும் நிச்சய மாக தூரமாகியிருப்பான். ஆகையால், அவன் ஏசுபவனாகவோ, கோள் சொல்பவனாகவோ, புறம் பேசுபவனாகவோ, தீய வார்த்தைகளை கதைப்பவனாகவோ, தீய குணம் கொண்டவனாகவோ, தவறுக ளை பகிரங்கமாக செய்பவனாகவோ மற்றும் தீய குணங்கள் தன்னி டம் இருப்பது போன்று காட்டிக் கொள்பவனாகவோ இருக்கமாட்டா ன். எனவே, அல்லாஹ்விடம் வெட்கப்படுவது, உள்ளச் சீர்கேட் டைவிட்டும் தடுக்கிறது, மனிதர்களிடம் வெட்கப்படுவது, தீய குணங்கொண்டவனாக இருப்பதையும், மோசமான காரியங்களை செய்வதை விட்டும் தடுக்கின்றது. வெட்கம் இல்லாதவன் கீழ்நிலை க்குத் தள்ளப்பட்டு, ஈமான் அற்றவனைப் போன்று ஆகிவிடுகின்றான்

## الصِّدْقُ

## உண்மை

உண்மை என்பது யதார்த்தத்திற்கு ஒத்தாக இருத்தல். இதன் எதிர் சொல் பொய் என்பதகும்.

இன்னுமோர் கருத்தின் படி : உண்மை என்பது வெளிரங்கமும், அந்தரங்கமும், உள்ளும், புறமும் சமமாக இருத்தல். அதாவது, ஒருவரின் நிலைமைகள் அவரது செயல்களைப் பொய்பிக்கக் கூடிய தாகவோ அல்லது அவரது செயல்கள் நிலைமைகளைப் பொய்பிக்க க் கூடியதாகவோ இல்லாதிருத் தலாகும்.

உண்மையின் யதார்த்த நிலை என்னவென்றால் ? சொல் செயல்களில் அல்லாஹ்வுடன் தொடர்புபட்டவைகளிலும், அவனின் பால் நெருக்கிவைக்கின்றவைகளிலும் உண்மையாக நடந்து கொள்ளல். அவைகளுக்குரிய கூலி இவ்வுலகிலும், மறுமையிலும் கிடைக்கும்

இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் :

(وَأَنْذِرْ عَشِيْرَتَكَ الأَقْرَبِيْنَ) الشعراء : ٢١٤

நபியே ! உமது நெருங்கிய உறவினர்களுக்கு நீர் எச்சரிக்கை செய்வீராக. 26 : 214.

என்ற அல்குர்ஆன் வசனம் இறங்கிய போது நபி ﷺ அவர்கள் ஸஃபா மலையின் மீது ஏறினார்கள். பின்னர் குரைஷி வம்சத்தினரின் ஃபிஹ்ர் மற்றும் அதிய் கோத்திரத்தினரை நோக்கி ஃபிஹ்ர் கோத்திரத்தினரே ! அதிய் கோத்திரத்தினரே ! என சப்தமிட்டு அழைத்தார்கள். அந்த அழைப்பைக் கேட்ட அனைவரும் ஒன்றுகூடினர். அவர்களில் ஒருவருக்கு அந்த இடத்துக்கு வர முடியாவிட்டால், என்ன விடயம் என்று பார்த்து வர ஒருவரை அனுப்பிவைப்பார். அவ்வழைப்பிற்கு அந்தளவு முக்கியத்துவம் செலுத்தினர். அப்போது அபூலஹபும் குரைஷி வம்சத்தினரைச் சேர்ந்தவர்களும் அங்கே வந்தனர். நபி ﷺ அவர்கள் ' உங்களைத் தாக்குவதற்காக இந்த பள்ளத்தாக்கில் குதிரைப் படையொன்று வந்துள்ளது என்று நான் உங்களுக்கு அறிவித்தால், நீங்கள் என்னை உண்மைப் படுத்துவீர்களா ? என்று கூறுங்கள் என அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு ஆம், நீங்கள் உண்மையைத் தவிர வேறு உரைத்ததே இல்லை என அவர்கள் கூறினார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் ' கடுமையான வேதனை உங்களுககு வருவதற்கு முன் நிச்சயமாக நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன் எனக் கூறினார்கள். இதனைக் செவியுற்ற அபூலஹப் ' இன்று நாள் முழுவதும் உனக்கு நாசம்

உண்டாகட்டும் !இதற்காக வேண்டியா எங்களை ஒன்று கூட்டினாய் எனக் கூறினான். இந்த விடயத்தில்

( تَبَّتْ يَدَا أَبِي لَهَبٍ وَتَبَّ ۞ مَا أَغْنَى عَنْهُ مَالُهُ وَمَا كَسَبَ ) المسد : ٢,١

அபூலஹபின் இரு கைகளும் நாசமாகட்டும் ! மேலும் அவனும் நாசமாகட்டும் ۞ அவனது செல்வமோ,அவன் சம்பாதித்தவையோ அவனுக்கு எந்த பயனையும் அளிக்கவில்லை. 111 : 1,2.

**உண்மையின் சிறப்பும் அதன் தாக்கமும்.**

ஈமானுடையவர்களை உண்மையாளர்களுடன் சேர்ந்து இருக்குமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான். மேலும், நபிமார்கள்,ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள் மற்றும் ஸாலிஹீன்கள் ஆகியோர்களுக்கே அல்லாஹ் அருள் செய்துள்ளான் என அல்லாஹ் இவர்களை மாத்திரம் குறிப்பிட்டுக் கூறுகின்றான்.

அல்லாஹுத ஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اتَّقُوا اللهَ وَكُوْنُوا مَعَ الصَّادِقِيْنَ ) التوبة : ١١٩.

நம்பிக்கை கொண்டோரே ! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள், மேலும், உண்மையாளர்களுடன் இருந்து கொள்ளுங்கள். 9 : 119.

மேலும், அல்லாஹுத ஆலா கூறுகின்றான் :

( وَمَنْ يُطِعِ اللهَ وَالرَّسُوْلَ فَأُولَئِكَ مَعَ الَّذِيْنَ أَنْعَمَ اللهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّيْنَ وَالصِّدِّيْقِيْنَ وَ الشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ ) النساء : ٦٩.

யார் அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் கட்டுப்படுகின்றார்களோ அவர்கள், அல்லாஹ் அருள் புரிந்த நபிமார்கள், உண்மையாளர்கள் உயிர்த்தியாகிகள், நல்லோர்கள் ஆகியோருடன் இருப்பார்கள். 4:69

உண்மை மனதில் அமைதியை ஏற்படுத்துகின்றது, பொய் மனதில் சந்தேகத்தையும், அமைதியற்ற நிலையையும் ஏற்படுத்துகின்றது.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( الصِّدْقُ طُمَأْنِيْنَةٌ وَالْكَذِبُ رِيْبَةٌ ) رواه الترمذي.

உண்மை நிம்மதியாகும், பொய் சந்தேகமாகும் என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி.

மேலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் :

(إِنَّ الصِّدْقَ يَهْدِي إِلَى الْبِرِّ وَإِنَّ الْبِرَّ يَهْدِي إِلَى الْجَنَّةِ وَإِنَّ الرَّجُلَ لَيَصْدُقُ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللهِ صِدِّيْقًا وَإِنَّ الْكَذِبَ يَهْدِي إِلَى الْفُجُوْرِ وَإِنَّ الْفُجُوْرَ يَهْدِي إِلَى النَّارِ وَإِنَّ الرَّجُلَ لَيَكْذِبُ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللهِ كَذَّابًا ) متفق عليه.

நிச்சயமாக உண்மை, நன்மையின் பக்கம் வழிகாட்டும், நிச்சயமாக நன்மை சுவனத்தின் பக்கம் வழிகாட்டும், நிச்சயமாக ஒருவர் உண்மை கூறுகின்றார் என்றால்,அவர் அல்லாஹ்விடம் உண்மையாளர் என எழுதப்படுகிறார். நிச்சயமாக பொய் பாவத்தின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக பாவம் நரகத்தின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக ஒருவர் பொய்யுரைக்கிறார் என்றால், அவர் அல்லாஹ்விடம் பொய்யர் என எழுதப்படுகிறார்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

ஹிரக்ல் மன்னர் அபூஸுஃப்யான் அவர்களிடம் நபி ﷺ அவர்கள் உங்களுக்கு எதனை ஏவுகிறார் ? என கேட்ட போது, அதற்கவர் நபி ﷺ அவர்களைப் பற்றி பின்வருமாறு கூறினார் :

அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனுக்கு எப்பொருளையும் இணைவைக்காதீர்கள், உங்கள் மூதாதையர் கூறிக்கொண்டிருந்த வைகள விட்டுவிடுங்கள் என்று அந்த நபி கூறுகின்றார். மேலும், தொழுகையை நிறைவேற்றுதல், உண்மை பேசுதல், பேணுதலை மேற்கொள்ளுதல், உறவினரை ஆதரித்தல் ஆகிய பண்புகளைக் கடைபிடிக்குமாறும் அவர் எங்களுக்கு ஏவுகிறார்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

இமாம் இப்னுல் கய்யிம் رَحِمَهُ اللهُ அவர்கள் கூறுகிறார்கள் :

உண்மையைக் கூறினால் தீமைதான் ஏற்படும் என்று நீ அஞ்சும் இடங்களில் கூட உண்மையைக் கூறுவதைக் கடைபிடி. அது உனக்குப் பயன்தரும். பொய் சொன்னால் உனக்கு பயனளிக்கும் என்று நீ நினைக்கும் இடங்களில் கூட பொய்யை விட்டுவிடு. ஏனெனில் பொய் சொன்னால் அது உனக்கு தீமையாகவே அமை யும். நூல் : மதாரிஜுஸ் ஸாலிகீன்.

## صِلَةُ الرَّحِم

## உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல்

உறவினர்கள் என்பவர்கள் தாய், தந்தை வழி வந்த சொந்தக்கார ர்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَأُولُوا الأَرْحَامِ بَعْضُهُمْ أَوْلَى بِبَعْضٍ فِي كِتَابِ اللهِ ) الأنفال : ٧٥. الأحزاب ٦.

மேலும், அல்லாஹ்வின் வேதத்தில் உள்ளபடி இரத்த உறவினர்கள் சிலர் மற்றும் சிலருக்கு மிக நெருக்கமுடையவராவர். 8:75, 33:6.

உறவினர்களில் மிக நெருங்கியவர்கள் : தந்தை, தாய், பாட்டன், குழந்தைகள், குழந்தைகளின் குழந்தைகள், அவர்களின் குழந்தை கள்..., சகோதர, சகோதரிகளில் அடுத்தடுத்துள்ளவர்கள், அவர்களின்

குழந்தைகள், தந்தையின் சகோதர், சகோதரி, அவர்களின் குழந் தைகள், தாயின் சகோதர, சகோதரி மற்றும் அவர்களின் குழந்தை கள்.

ஒருவர் நபி ﷺ அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் திருத்தூத ரே ! நான் மிகவும் நன்மை செய்வதற்கு உரிமை பெற்றவர் யார் ? என வினவினார். அதற்கு நபி ﷺ அவர்கள் ‘ உன் தாய் ‘ என்றார்கள். பின்னர் யார் ? என அவர் வினவினார். அப்பொழுதும் உன் தாய் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். பின்னர் யார்? என்றார். அப்பொழுதும் உன் தாய் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். பின்னர் யார் ? என்றார். அப்பொழுது உன் தந்தை, பின்னர் நெருங்கிய உறவினர்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

இது குறித்து அதிகமான ஹதீஸ்கள் வந்துள்ளது என்பது குறிப்பி டத்தக்கதாகும்.

உறவினர்களுடன் சேர்ந்து நடப்பது, அவர்களைச் சந்தித்தல், அவர்களுக்கு ஸதகாக்கள் கொடுத்தல், அவர்களுக்கு நன்மை செய்

தல், அவர்களை நோய்விசாரித்தல்,நன்மையை ஏவுதல்,தீமையைத் தடுத்தல் மற்றும் இது போன்ற காரியங்களால் அவர்களின் உறவை ப்பேணுவதாகும்.

இமாம் நவவீ رحمه الله அவர்கள் கூறுகிறார்கள் :

உறவினரைச் சேர்ந்து நடத்தல் என்பது,சேர்ந்து நடப்பவர்,சேர்ந் து நடக்கப்படுபவர் ஆகியோரின் நிலைக்கேற்ப வேறுபடுகிறது. அதா வது சிலவேளைகளில் பணத்தாலும், இன்னும் சில வேளைகளில்

சேவையாலும் மற்றும் சில வேளைகளில் சந்திப்பு, ஸலாம் கூறுவது மற்றும் அது போன்றவைகளாலும் உண்டாகிறது.

நூல் : ஷர்ஹு முஸ்லிம்.

ஷேக் இப்னு உதைமீன் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள் :

உறவினர்களை சேர்ந்து நடக்கும் விடயத்தில், இப்படித்தான் என் றோ, இந்த அளவுதான் என்றோ, இவ்வகைகள் மூலமாக என்றோ

குறிப்பிட்ட எந்த வரையறையையும் நபி ﷺ அவர்கள் ஏற்படுத்த வில்லை. மேலும், அப்படியேதும் அல்குர்ஆனிலோ, ஸு ன்னாவிலோ விளக்கப்படவுமில்லை. அதனால்,இது மனிதர்களின் வழமைக்கேற்ற தாகவே அமையும். எனவே, எந்த விடயங்கள் உறவை சேர்ந்து நடப்பவை எனவும், எந்த விடயங்கள் உறவை முறிப்பவை எனவும் வழமையில் கருதப்படுமோ, அவைகளுக்கேற்பவே, சேர்ந்து நடத் தலும், முறித்து நடத்தலும் அமையும்.

ஷர்ஹு ரியாளிஸ் ஸாலிஹீன் 5/ 215.

உறவினர்கள் பல வகைப்பட்டாலும் அவர்கள் அனைவருடனும் நல்ல முறையில் நடந்திட வேண்டும் என்றே அல்லாஹு வும் அவன து திருத்தூதரும் ஏவுகின்றனர். இது குறித்து வந்துள்ள அல்குர் ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ்கள் கீழே தரப்பட்டுள்ளன :

அல்லாஹுதஆலா கூறுகின்றான் :

( وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُوْنَ بِهِ وَالأَرْحَامَ ) النساء : ١.

எவனைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும், இரத்த (உறவு களை (த்துண்டித்து நடப்பதை)யும் அஞ்சிக் கொள்ளுங்கள். 4:1.

மேலும், அல்லாஹுதஆலா கூறுகின்றான் :

(وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَبِذِي الْقُرْبَى) النساء : ٣٦.

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணை யாக்காதீர்கள். இன்னும் பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். 4 : 36.

பெற்றோர் மற்றும் உறவினர்கள் காஃபிர்களாக இருந்தாலும் கூட அவர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுமாறு ஒவ்வொரு முஸ்லிமும் பணிக்கப்பட்டுள்ளான். இதனைப் பின்வரும் ஆதாரங்கள் விளக்குகின்றன.

அல்லாஹுதஆலா கூறுகின்றான் :

( وَوَصَّيْنَا الإِنْسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا وَإِنْ جَاهَدَاكَ لِتُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلاَ تُطِعْهُمَا إِلَيَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ) العنكبوت : ٨.

தனது பெற்றோருக்கு நல்லுபகாரம் செய்யுமாறு நாம் மனிதனுக்கு உபதேசம் செய்தோம். உனக்கு அறிவு இல்லாத ஒன்றின் மூலம், எனக்கு இணைவைக்குமாறு அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினா ல் அவ்விருவருக்கும் நீ கட்டுப்பட வேண்டாம். என்னிடமே உங்கள் மீளுதல் உள்ளது. அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு நான் அறிவிப்பேன். 29 : 8.

மேலும், அல்லாஹுதஆலா கூறுகின்றான் :

( وَوَصَّيْنَا الإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَى وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ ۞ وَإِنْ جَاهَدَاكَ عَلَى أَنْ تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلاَ تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا وَاتَّبِعْ سَبِيلَ مَنْ أَنَابَ إِلَيَّ ثُمَّ إِلَيَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ ) لقمان : ١٤، ١٥.

மனிதனுக்கு, அவனது பெற்றோர் பற்றி நாம் உபதேசித்தோம். அவனது தாய் அவனைப் பலவீனத்திற்கு மேல் பலவீனமாகச் சுமந்தாள். மேலும், அவனது பால்குடி மறத்தல் இரண்டு ஆண்டுகளிலாகும் நீ எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக ! என்னிடமே மீளுதல் உள்ளது ۞ உனக்கு அறிவில்லாத ஒன்றை எனக்கு இணைவைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால், அவ்விருவருக்கும் நீ கட்டுப்பட வேண்டாம். இவ்வுலகில் அவ்விருவருடனும் நல்லமுறையில் சேர்ந்து நடப்பாயாக! என் பக்கம் மீண்டவர்களின் வழியைப் பின்பற்றுவாயாக! பின்னர் உங்கள் மீளுதல் என்னிடமே உள்ளது. அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு நான் அறிவிப்பேன். 31 : 14،١٥

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( يَا مَعْشَرَ قُرَيْشٍ ! لاَأُغْنِي عَنْكُمْ مِنَ اللهِ شَيْئًا إِلاَّ أَنَّ لَكُمْ رَحِمًا سَأَبُلُّهَا بِبِلاَلِهَا ) رواه مسلم.

குரைஷியர்களே ! அல்லாஹ்விடமிருந்து எதனையும் நான் உங்களுக்கு பயனளிக்க மாட்டேன். எனினும் உங்களுடன் எனக்கு இரத்த பந்த உறவு உள்ளது. அந்த உறவைச் சேர்த்துக் கொள்ளுதல் என்ற நீரால் நான் நனைந்து கொள்வேன் (அந்த உறவைச் சேர்த்துக் கொள்வேன்) என ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்.

**உறவைப் பேணுதல் பின்வரும் காரியங்களால் உண்டாகும் :**

1- அவர்களைச் சந்தித்தல் அல்லது அவர்களுக்கு விருந்தளித்தல்.

2- அவர்களின் நலம் விசாரித்தல், அவர்களின் தேவைகளைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளல், அவர்களுக்கு ஸலாம் கூறுதல்.

3- உறவினர் தேவையுள்ளவராக இருப்பின், தனது பணத்தால் அவர்களுக்கு ஸதாகா கொடுத்தல். அவர் தேவையற்றவராக இருப்பின் அவருக்கு அன்பளிப்புச் செய்தல்.

قَالَ رَسُوْلُ الله ﷺ : ( الصَّدَقَةُ عَلَى الْمِسْكِيْنِ صَدَقَةٌ وَعَلَى ذِي الرَّحِمِ ثِنْتَانِ : صَدَقَةٌ وَصِلَةٌ ) رواه الترمذي.

ஏழை மிஸ்கீனுக்குத் தர்மம் செய்வது, தர்மம் (மட்டும்) தான். (ஆனால்) நெருங்கிய உறவினருக்குத் தர்மம் செய்வது (இரண்டு நன்மைகளுக்குரிய) விஷயங்களாகும் : ஒன்று தர்மம், மற்றொன்று உறவைச் சேர்த்தல் ஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி.

4- அவர்களின் மூத்தவரை கண்ணியப்படுத்தல், பலவீனமானவருக்கு கருணை காட்டுதல்.

5- அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவரவருக்குத் தகுதியான அந்தஸ்தைக் கொடுத்தல், அவர்களின் மதிப்பை உயர்த்திப் பேசுதல்.

6- அவர்களின் மகிழ்வான நிகழ்வுகளில் கலந்துகொண்டு அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லல், அவர்களின் துக்ககரமான

நிகழ்வுகளில் கலந்துகொண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறு தல்.

7- அவர்களின் நோயாளிகளை நலம் விசாரித்தல், மரணித்தவர் களின் ஜனாஸாவில் கலந்துகொள்ளல்.

8- அவர் விருந்துக்கு அழைத்தால், கட்டாயம் அதனை ஏற்றுச் செல்லல். தக்க காரணமின்றி செல்லாதிருத்தல்.

9- அவர்கள் விடயத்தில் உள்ளத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளல். அவர்கள் பற்றி எந்த குரோதத்தையும் மனதில் மறைத்து வைத்துக் கொள்ளாதிருத்தல்.

## الصَّبْرُ وَالْمُصَابَرَةُ

## பொறுமையும், சகிப்புத்தன்மையும்

பொறுமை என்பது தடுத்துக் கொள்ளல், கட்டுப்படுத்திக் கொள்ளல் என்பதாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் பொறுமை என்பது பதற்றத்தை விட்டு மனதையும், கோபம் மற்றும் அதிருப்தி போன்றவற்றை வெளிப்படு த்துவதை விட்டு நாவையும் மற்றும் அங்கவயங்களை மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை விட்டும் தடுத்துக் கொள்வதும், கட்டுப்படுத்திக் கொள்வதாகும்.

புதற்றம், முறைப்பாடு இல்லாத பொறுமைக்கு அழகான பொறுமை எனப்படும். இதனையே நபி யஃகூப் عَلَيْهِ السَّلَامُ அவர்கள் மூலம் அல்லாஹு தஆலா அல்குர்ஆனில் கூறியுள்ளான்.

( فَصَبْرٌ جَمِيلٌ ) يوسف : ١٨.

எனவே, அழகிய பொறுமையே இதற்கு வழி. 12 : 18.

இமாம் இப்னுல் கய்யிம் رَحمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

பொறுமை மூன்று வகைப்படும் :

1- அல்லாஹ்வின் கட்டளைகள், வழிபாடுகளை நிறைவேற்று வதற்காக அவைகளில் பொறுமையாக இருத்தல்.

2- தடுக்கப்பட்டவை, மார்க்கத்திற்கு முரணானவைகளை செய் யாதிருத்தலில் பொறுமையாக இருத்தல்.

3- அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட விதியின் கசப்பான முடி வுகளில் கோபத்தையோ அதிருப்தியையோ காட்டாது பொ றுமையாக இருத்தல்.

இமாம் இப்னு தய்மியா رَحمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

அல்லாஹ் பொறுமையை அல்குர்ஆனில் தொன்னூறுக்கும் மேற் பட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளான். மேலும், பொறுமையை தொழுகையுடன் இணைத்து பின்வரும் வசனத்தில் கூறியுள்ளா ன் :

( وَاسْتَعِيْنُوا بِالصَّبْرِ وَالصَّلاَةِ وَإِنَّهَا لَكَبِيْرَةٌ إِلاَّ عَلَى الْخَاشِعِيْنَ ) البقرة : ٤٥.

மேலும், பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக இது உள்ளச்ச முடையோர்களுக்கன்றி (ஏனையோருக்கு) பெரும் பாரமாக இருக்கும்

2 : 45.

மேலும், மார்க்கத்தில் தலைமைத்துவம் பெறுவதை, பொறுமை மற் றும் ஆழ்ந்த நம்பிக்கையில் அல்லாஹ் வைத்துள்ளான்.

( وَجَعَلْنَا مِنْهُمْ أَئِمَّةً يَهْدُوْنَ بِأَمْرِنَا لَمَّا صَبَرُوا وَكَانُوا بِآيَاتِنَا يُوْقِنُوْنَ ) السجدة : ٢٤.

அவர்கள் பொறுமையைக் கடைபிடித்து, எமது வசனங்களை உறுதியாக நம்பிக்கை கொள்பவர்களாக இருந்தபோது எமது கட்டளைப்பிரகாரம் நேர்வழி காட்டும் தலைவர்களை அவர்களிலிருந்து நாம் உருவாக்கினோம். 32 : 24.

அல்லாஹ் எமக்கு பொறுமையைக் கடைபிடிக்குமாறு கட்டளையிட்டது போன்றே, சகிப்புத்தன்மையையும் கடைபிடிக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ )

آل عمران : ٢٠٠.

நம்பிக்கை கொண்டோரே !நீங்கள் பொறுமையாக இருங்கள். (எதிரிகளை மிஞ்சும் வண்ணம்) சகிப்புத் தன்மையைக் கடைபிடியுங்கள் இன்னும் உறுதியாக இருங்கள். நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். 3 : 200.

இமாம் இப்னுல் கய்யிம் رَحِمَهُ اللهُ அவர்கள் இத்திருவசனத்தின் விளக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்கள் :

அல்லாஹ் அவர்களுக்கு பொறுமையைக் கடைபிடிக்குமாறு கட்டளையிட்டுள்ளான். பொறுமை என்பது பொறுமையாளிக்குள் இருக்கும் ஒரு நிலையாகும். சகிப்புத்தன்மை என்பது பொறுமையை கடைபிடிக்க வேண்டிய இடங்களில் தனது எதிர்தரப்பினருடன் போரிடுவதாகும். சகிப்புத்தன்மை என்பது ஏசிக்கொள்ளல், சண்டையிட்டுக் கொள்ளல் போன்று இரு தரப்பினரால் ஏற்படுவதாகும். எனவே, மற்றவரின் இன்னல்களைத் தாங்குவது சகிப்புத்தன்மையாகும்.

عَنْ مَحْمُوْدِ بْنِ لَبِيْدٍ أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : ( إِذَا أَحَبَّ اللهُ قَوْمًا ابْتَلَاهُمْ فَمَنْ صَبَرَ فَلَهُ الصَّبْرُ وَمَنْ جَزِعَ فَلَهُ الْجَزَعُ)

அல்லாஹ் ஒரு கூட்டத்தினரை நேசித்தால், அவர்களை சோதிப்பான் எவர் அதனைப் பொறுத்துக் கொள்கிறாரோ அவருக்கு பொறுமையி ன் பலன் உண்டு. எவர் பொறுமையை இழந்து நடந்து கொள்கிறா ரோ அவருக்கு அதன் விளைவு உண்டு என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் என மஹ்மூத் பின் லபீத் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

உமர் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் :

எமது வாழ்க்கையின் சிறப்பை பொறுமையைக் கொண்டு அடைந்து கொண்டோம்.

**பொறுமையின் சிறப்பு :**

- அல்லாஹ் பொறுமையாளர்களை பல சிறப்புப் பண்புகள் கொண்டு வர்ணித்துள்ளான், மற்றவர்களிடம் இல்லாத பல பிரத்தியேக தன்மைகள் கொண்டு சிறப்பித்துள்ளான், அதிக மான அந்தஸ்துகள் மற்றும் நலவுகளை பொறுமையுடன் இணைத்து வைத்துள்ளதுடன், அவைகளை பொறுமையின் பலனாகவும் ஆக்கியுள்ளான்.

பொறுமையாளர்களுக்கு அல்லாஹ்வின் உதவியிருக்கிறது. அதனால் அவர்கள் ஈருலக நலவுகளை அடைந்து கொள்வதுடன், அல்லாஹ்வின் வெளிப்படையான மற்றும் மறைவான நல்லருள் களையும் பெற்றுக் கொள்கின்றனர். மேலும், மார்க்கத்தில் தலைமை த்துவம் பெறுவதை, பொறுமை மற்றும் ஆழ்ந்த இறைநம்பிக்கையில் அல்லாஹ் வைத்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَجَعَلْنَا مِنْهُمْ أَئِمَّةً يَهْدُوْنَ بِأَمْرِنَا لَمَّا صَبَرُوا وَكَانُوا بِآيَاتِنَا يُوْقِنُوْنَ ) السجدة :
٢٤.

அவர்கள் பொறுமையைக் கடைபிடித்து, எமது வசனங்களை உறு தியாக நம்பிக்கை கொள்பவர்களாக இருந்தபோது எமது கட்ட ளைப்பிரகாரம் நேர்வழி காட்டும் தலைவர்களை அவர்களிலிருந்து நாம் உருவாக்கினோம். 32 : 24.

இமாம் இப்னு தய்மியா رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

மார்க்கத்தில் தலைமைத்துவம் கிடைப்பது பொறுமை மற்றும் உறு தியான நம்பிக்கையின் மூலமாகும்.

- பொறுமையை வெற்றியின் அடிப்படையாக அல்லாஹ் குர் ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا الله لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ )

آل عمران : ٢٠٠.

நம்பிக்கை கொண்டோரே !நீங்கள் பொறுமையாக இருங்கள். (எதி ரிகளை மிஞ்சும் வண்ணம்)சகிப்புத் தன்மையைக் கடைபிடியு ங்கள் இன்னும் உறுதியாக இருங்கள். நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். 3 : 200.

இவைகள் அனைத்துடனும் இணைத்தே வெற்றியை வைத் துள்ளான்.

பொறுமைக்கு முரணாக அவசரப்பட்டு செயல்படுவதை அல்லாஹ் தடுத்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( فَاصْبِرْ كَمَا صَبَرَ أُولُوا الْعَزْمِ مِنَ الرُّسُلِ وَلاَ تَسْتَعْجِلْ لَهُمْ ) محمد : ٣٥.

(நமது) தூதர்களில் உறுதிமிக்கோர் பொறுமையாக இருந்தது போல் (நபியே!) நீரும் பொறுமையாக இருப்பீராக! அவர்களுக்காக நீர் அவசரப்பட வேண்டாம். 47 : 35.

- பொறுமையாளர்களின் கூலி இரட்டிப்பாக வளங்கப்படும்.

  பொறுமையைத் தவிர ஏனைய எல்லா அமல்களுக்கும் கூலி வரையறுக்கப்பட்டுள்ளது. கூலி வரையறுக்கப்படாத ஒரே அமல் பொறுமையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( أُولَئِكَ الَّذِيْنَ يُؤْتَوْنَ أَجْرَهُمْ مَرَّتَيْنِ بِمَا صَبَرُوا ) القصص : ٥٤.

அவர்கள் பொறுமையாக இருந்த காரணத்தினால் அவர்களுக்குரிய கூலி இரு தடவை அவர்களுக்கு வழங்கப்படும். 28 : 54.

ஸு லைமான் பின் காஸிம் رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

எல்லா அமலுடைய கூலியும் அறியப்பட்டதாகும். பொறுமையின் கூலியைத் தவிர.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّمَا يُوَفَّى الصَّابِرُوْنَ أَجْرَهُمْ بِغَيْرِ حِسَابٍ ) الزمر : ١٠.

பொறுமையாளர்களுக்கு அவர்களது கூலி கணக்கின்றி வழங்கப்படு ம். 39 : 10.

கொட்டும் நீரைப் போன்று என ஸுலைமான் பின் காஸிம் رَحمَهُ الله அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.

- பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ اللهَ مَعَ الصَّابِرِيْنَ ) البقرة : ١٥٣.

நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

2 :1 53.

- அல்லாஹ் எவருக்கும் வழங்காத மூன்று விடயங்களை பொறுமையாளர்களுக்கு வழங்கியுள்ளான். அவை :

  அல்லாஹ்வின் அருள், கருணை மற்றும் நேர்வழி.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَبَشِّرِ الصَّابِرِيْنَ ۞ الَّذِيْنَ إِذَا أَصَابَتْهُمْ مُصِيْبَةٌ قَالُوا إِنَّا لِلهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ ۞ أُولَئِكَ عَلَيْهِمْ صَلَوَاتٌ مِنْ رَبِّهِمْ وَرَحْمَةٌ وَأُولَئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ ) البقرة : ١٥٥, ١٥٦, ١٥٧

பொறுமையாளர்களுக்கு (நபியே!) நீர் நன்மாராயம் கூறுவீராக!۞

அவர்கள் யாரெனில் தமக்கு ஏதேனும் துன்பம் நேரிடும் போது இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும் நாம் அவனிடமே திரு

ம்பிச் செல்பவர்கள்) என்று கூறுவார்கள் ❁ அத்தகையோருக்கே அவர்களின் இரட்சகனிடமிருந்து அருள்களும், கருணையும் உண்டாகும். அவர்களே நேர்வழி பெற்றவர்கள். 2 : 155, 156, 157.

## اَلْعَدْلُ

## நீதம்

எங்களில் எவர்தான் தன்னுடன் நீதமாக நடப்பதை விரும்பாது இருப்பார் ? ஒவ்வொருவரும் விரும்புவது தன்னுடன் நீதமாக நடந்து கொள்வதையே. மனிதன் இயல்பிலேயே நீதத்தை விரும்புபவனாகவே படைக்கப்பட்டுள்ளான்.

**நீதம் என்பது** அநியாயமின்றி, உண்மையான முறையில் தீர்ப்பளிப்பதாகும் என இமாம் இப்னு மந்ஹூர் رَحِمَهُ الله அவர்கள் வரையறைப் படுத்துகிறார்கள்.

பார்க்க : லிஸானுல் அரப்.

எல்லோருடனும் நீதமாகவே நடந்து கொள்ள வேண்டும். தனக்கு மிகவும் நெருக்கமானவருக்கோ அல்லது மிகவும் நேசத்திற்குரியவருக்கோ எதிராக இருந்தாலும்கூட ஏன் தனக்கே எதிராக இருந்தாலும்கூட நீதமாகவே நடந்து கொள்ள வேண்டும். மனிதர்களில் எல்லோரும் நீதத்தையே விரும்புகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالإِحْسَانِ وَإِيْتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ) النحل : 90.

நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், உபகாரம் செய்வதையும், நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குவதையும் ஏவுகிறான். மேலும், மானக்கேடானவற்றை விட்டும், தீமையை விட்டும், வரம்பு மீறுவதை விட்டும் அவன் தடுக்கின்றான். நீங்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டு உங்களுக்கு உபதேசம் செய்கின்றான். 16 : 90.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا كُونُوا قَوَّامِيْنَ بِالْقِسْطِ شُهَدَاءَ لِلّٰهِ وَلَوْ عَلَى أَنْفُسِكُمْ أَوِ الْوَالِدَيْنِ
وَالأَقْرَبِيْنَ إِنْ يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيْرًا فَاللهُ أَوْلَى بِهِمَا فَلاَ تَتَّبِعُوا الْهَوَى أَنْ تَعْدِلُوا وَإِنْ
تَلْوُوا أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ) النساء : ١٣٥.

நம்பிக்கை கொண்டோரே ! நீங்கள் நீதியை நிலைநாட்டுபவர்களாகவும், அல்லாஹ்வுக்காக சாட்சிகூறுபவர்களாகவும் ஆகிவிடுங்கள். (அது) உங்களுக்கோ அல்லது பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்களுக்கோ பாதகமாக இருப்பினும் சரியே! (குற்றவாளி) செல்வந்தனாகவோ, ஏழையாகவோ இருப்பினும் அவ்விருவருக்கும் அல்லாஹ்வே பொறுப்பாளனாவான். எனவே, நீதி செலுத்துவதில் மனோ இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். நீங்கள் (சாட்சியத்தை) மாற்றிக் கூறினாலோ அல்லது புறக்கணித்தாலோ நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான். 4 : 135.

பதவி, பொறுப்பு, அதிகாரம் போன்றவற்றில் இருப்பவர் தனக்குக் கீழிருப்பர்களின் விடயத்தில் நீதியாக நடப்பது மிகமிக கட்டாயமாகும். ஏனெனில் இவரது நீதி அவர்களில் பெரும் பிரதிபலிப்பை ஏற்படுத்துவதோடு, அதன் பயனும் இவரை வந்து சேரும். எனவே, தலைவர்கள் தங்களுக்குக் கீழுள்ள மக்கள் மத்தியலும், நீதி அரசர்கள் தங்களிடம் நீதி கேட்டு வருபவர்களுக்கு மத்தியிலும், பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மத்தியிலும், ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு மத்தியிலும் மற்றும் இது போன்ற அதிகாரம் உள்ளவர்கள் தங்களுக்கு கீழுள்ளவர்களுக்கு மத்தியிலும் நீதியுடன் நடந்து கொள்வது கட்டாயக் கடமையாகும்.

இதனாலேயே, அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத அந்த கியாமத்துடைய நாளில் அல்லாஹ் நிழல் வங்குபவர்களின் பட்டியலில் முதலிடத்தில் நீதியுள்ள தலைவரை வைத்துகள்ளான்.

ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் :

( سَبْعَةٌ يُظِلُّهُمُ اللهُ فِي ظِلِّهِ يَوْمَ لاَ ظِلَّ إِلاَّ ظِلُّهُ : إِمَامٌ عَادِلٌ ... ) متفق عليه.

தன் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத (கியாமத் நாளில்) ஏழு பேர்களுக்கு அல்லாஹ் தன் (அர்ஷின்) நிழலை வழங்குவான். அவர்களில் ஒருவர் : நீதமான தலைவர்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

மேலும், ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் :

( إِنَّ الْمُقْسِطِيْنَ عِنْدَ اللهِ عَلَى مَنَابِرَ مِنْ نُوْرٍ : الَّذِيْنَ يَعْدِلُوْنَ فِي حُكْمِهِمْ وَأَهْلِيْهِمْ وَمَا وَلُوا ) رواه مسلم.

நிச்சயமாக தங்கள் அதிகாரத்திலும், தங்கள் குடும்பத்தினரிலும்,

தாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டவைகளிலும் நீதத்தைக் கடைபி டித்த நீதவான்கள் அல்லாஹ்விடம் (கியாமத் நாளில்) ஒளியால் ஆன மேடைகளில் இருப்பார்கள்.

நூல் : முஸ்லிம்.

**நீதியின் பிரதிபலன்கள் :**

நீதி நிலைநாட்டப்பட்டால், சமுதாயத்தில் பாதுகாப்பு மற்றும் அச்ச மின்மையின் கொடி பறக்கத்துவங்கும். அநியாயக்காரர்கள் அஞ்சி தங்களது அநியாயத்தை விட்டுவிடுவார்கள். மக்களுக்கிடையில் அன்பு மற்றும் பிறர் நலன் விரும்புதல் போன்ற உயிரோட்டமான பண்புகள் மிகையாகக் காணப்படும். அதேவேளை, நீதி இழக்கப்பட் டால், மக்கள் பீதியடைந்த நிலையிலும், பாதுகாப்பை உணராத நிலையிலுமே இருப்பார்கள். மேலும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர் களுக்கு எல்லாவிதமான வழிகளும் இலகுவாக இருப்ப தனால் சமுதாயத்தில் அநியாயக்காரர்கள் குற்றங்களை செய்யத் துணிவா ர்கள். மேலும், அவர்களை கட்டுப்படுத்துவதற்கு எந்தச் சட்டமும் இல்லாததினால், மக்களுக்கு மத்தியில் அச்சமும், பீதியும் பரந்து காணப்படும்.

ஆனால், நீதமான ஆட்சியாளர், தனது நீதத்தின் காரணமாக அல்லாஹ்வின் அன்பு மற்றும் திருப்தியை அடைந்து கொள்வதோடு, மனிதர்களின் அன்பையும், ஆதரவையும் சம்பாதித்துக் கொள்கிறார். அதனால், அவர் அச்சமின்றி இருப்பதோடு, தனது பிரஜைகளால் எவ்விதமான தீங்கும் ஏற்படாது என்றும் பயப்படாது இருப்பார்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு உமர் ﷺ அவர்களின் பின்வரும்

சரித்திரம். அதாவது, உமர் ﷺ அவர்கள் தங்களது ஆட்சி காலத்தில் மக்களுக்கு மத்தியில் நீதமாக ஆட்சி செய்தார். அவ் வேளை கிஸ்ரா மன்னரின் தூதுவரின் தூதுவர் மதீனாவுக்கு வந்

தார். அப்போது கலீபாவான உமர் ﷺ அவர்கள் ஒரு மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், நீங்கள் நீதமான

முறையில் ஆட்சி செய்கிறீர்கள். அதனால்தான் அச்சமின்றி உறங்கி க் கொண்டிருக்கிறீர்கள் எனக் கூறினார்.

ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக் கேற்ப அதில் நீதியாக நடப்ப து கட்டாயக் கடமையாகும். அதில் ஒருவரை விட்டுவிட்டு மற்றவருக் கு பக்கசார்பாக நடந்து கொள்ளக்கூடாது. அல்லாஹ் அநியாயத்

தை தன்மீது ஹராமாக்கியுள்ளான். மேலும், நாம் எமக்கு மத்தியில் அநியாயம் செய்து கொள்வதையும் ஹராமாக்கியுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறியதாக ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள் :

( يَا عِبَادِي إِنِّي حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِي وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا ... ) رواه مسلم.

என்னுடைய அடியார்களே! அநியாயத்தை என்மீது நான் ஹராமாக்கியுள்ளேன். மேலும், உங்களுக்கு மத்தியிலும் அதனை ஹராமாக்கியுள்ளேன்.

அநியாயத்தின் முடிவுகள் இவ்வுலகிலும், மறுமையிலும் மிக மோசமானவையாகவே இருக்கும். ஒருவன் இவ்வுலகில் அநியாயத்தின் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொண்டாலும், மறுமை நாளில் அல்லாஹ்வின் கேள்வி கணக்கிலிருந்து அவன் தப்பித்துக் கொள்ள மாட்டான். அல்லாஹு தஆலா குற்றச் செயல்களை செய்வதில் விட்டு வைப்பான். ஆனால், தண்டிப்பதில் விட்டு வைக்க மாட்டான். மனிதர்கள் தாம் செய்த சிறிய, பெரிய நன்மை, தீமைகள் எல்லாவற்றிற்குரிய கூலிகளையும் மறுமை நாளில் பெற்றுக் கொள்வார்கள். அல்லாஹ் எவருக்கும் அநியாயம் செய்ய மாட்டான். மாறாக, மிருகங்களுக்கு மத்தியிலும் கூட நீதத்தை நிலைநாட்டுவான்.

நூல் : முஸ்லிம்.

ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள் :

( لَتُؤَدُّنَّ الْحُقُوقَ إِلَى أَهْلِهَا يَوْمَ الْقِيَامَةِ حَتَّى يُقَادَ لِلشَّاةِ الْجَلْحَاءِ مِنَ الشَّاةِ الْقَرْنَاءِ )

رواه مسلم.

கியாமத் நாளில் உரிமைகளை, உரிமை உடையவர்களுக்கு நீங்கள் நிறைவேற்றுவீர்கள். எதுவரையெனில் கொம்பு இல்லாத ஆட்டுக்

காக கொம்புள்ள ஆட்டிடம் (அதனை அது முட்டியிருந்தால்) பழி வாங்கப்படும்.

நூல் : முஸ்லிம்.

அநியாயம் செய்யப்பட்டவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட அநியாயத்தின் காரணமாக எப்படி கவலையும்,கைசேதமும் படுகிறார்கள் என்பதை மனிதர்கள் நினைத்துப் பார்த்தாலே போதும், தங்களது வாழ்வில் நீதியை நிலைநாட்டுவதற்கு அது மிகவும் உதவியாக இருக்கும்.

## الْقَنَاعَةُ

## போதுமென்ற தன்மை

பொதுமென்ற மனப்பான்மை என்பது : ஒருவருக்கு அல்லாஹ் அளித்துள்ளவை கொஞ்சமாக இருப்பினும், அவற்றை திருப்தியாக மனமார்ந்து ஏற்றுக் கொள்வதும், மற்றவர்களின் கைகளில் இருப்ப வைகளில் ஆசைவைக்காதிருப்பதுமாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ إِلَى مَا مَتَّعْنَا بِهِ أَزْوَاجًا مِنْهُمْ زَهْرَةَ الْحَيَاةِ الدُّنْيَا لِنَفْتِنَهُمْ فِيهِ وَرِزْقُ رَبِّكَ خَيْرٌ وَأَبْقَى ) طه : ١٣١.

(நபியே !) இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரமாக,நாம் அவர்களில் பல தரப்பினருக்கு, அதில் அவர்களைச் சோதிப்பதற்காக வழங்கிய வசதிகளின்பால், உமது இருகண்களையும் செலுத்தாதீர். உமது இரட்சகன் வழங்கவிருப்பதோ மிகச் சிறந்ததும், நிலையானதுமாகும். 20 : 131.

மற்றவர்களின் கைகளில் இருப்பவைகளில் ஆசைவைப்பது, சில வேளை பொறாமை போன்ற பண்புகளில் சீர்கேட்டை ஏற்படுத்தல் மற்றும் திருட்டுத்தனம், இலஞ்சம் போன்ற தடுக்கப் பட்ட வழிகளில் பணம் சமபர்தித்தலில் ஈடுபாட்டை ஏற்படுத்தல் போன்ற வழிகளுக்கு எம்மை இட்டுச் செல்லும். அத்தோடு இந்த வழியில் சென்றால் தான் வாழ்க்கையில் சுபீட்சத்தை அடைந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையையும் வளர்த்துவிடும். இதனை விடவும் பயங்கர மான விடயம் என்னவெனில், அல்லாஹ் எமக்கு அளித்துள்ளவைகளை நாம் திருப்தியாக ஏற்றுக் கொள்ளாவிட்டால், அல்லாஹ்வை நிராகரிப்பவர்களும், அவனைவிட்டும் தூரமானவர்களும் டாம்பீகமாகவும், உலக இன்பங்களை தாராளமாகவும் அனுபவிப்பதை நாம் காணும் போது, அது எம்மையும் எமது மார்க்கத்திலிருந்து தூரமாக்கிவிடும். அந்தளவுக்கு பயங்கரமானதுதான் எமக்கு வழங்கப்பட்டதை மனமார ஏற்றுக் கொள்ளாதிருத்தல். எனவே, அல்லாஹ்வை நிராகரிக்கும் ஒரு கா∴பிர், அவனுக்கு மாறுபாடு செய்யும் ஒரு பாவி மற்றும் அவனை உண்மையாக அறிந்து கொள்ளாவதன் போன்றவர்கள் உலக இன்பங்களில் புரண்டுகொண்டிருப்பதை நாம் கண்டால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. மாறாக, இவை அல்லாஹ்விடம் கொசுவின் ஒரு இறக்கைக்குக்கூட பெறுமதியற்றதும் மேலும் மறுமை நாளில் இவை அதனை அனுபவிப்பவர்களுக்கு மிடுமையாக மாறிவிடும் என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ﷺ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( لَوْ كَانَتِ الدُّنْيَا تَعْدِلُ عِنْدَ اللهِ جَنَاحَ بَعُوْضَةٍ مَا سَقَى كَافِرًا مِنْهَا شَرْبَةَ مَاءٍ ) رواه مسلم.

இவ்வுலகம் அல்லாஹ்விடம் கொசுவின் ஒரு இறக்கைக்குக்கூட பெறுமதியாக இருப்பின், அதிலிருந்து அவனை நிராகரிக்கும் கா∴பிரு க்கு ஒரு மிடர் தண்ணீர்கூட அளித்திருக்க மாட்டான் என ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸ∴த் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல் : முஸ்லிம்.

இவ்வுலகம் அல்லாஹ்விடம் இவ்வளவு அற்பமாக இருப்பதினால்தான், அதனை அவனது நேசர்களுக்கு அவன் கொடுப்பதில்லை.

( إنَّ الله يَحْمِي عَبْدَهُ الْمُؤْمِنَ عَنِ الدُّنْيَا كَمَا يَحْمِي أَحَدُكُمُ الْمَرِيْضَ عَنِ الْمَاءِ )

رواه أحمد.

உங்களில் ஒருவர் நோயாளியை தண்ணீரை விட்டும் எவ்வாறு பாதுகாப்பீர்களோ, அவ்வாறே, அல்லாஹ் தனது மு.்.மினான அடியானை உலகை விட்டும் பாதுகாக்கின்றான் என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : அஹ்மத்.

**போதுமென்ற மனப்பான்மையின் பயன்கள் :**

- பரகத்திற்குக் காரணம். எனவே,அது தீர்ந்துவிடாத பொக்கிசம்.

قَالَ رَسُوْلُ الله ﷺ : ( لَيْسَ الْغِنَى عَنْ كَثْرَةِ الْعَرَضِ ولَكِنَّ الْغِنَى غِنَى النَّفْسِ )

متفق عليه.

அதிகமான பொருள்கள் உள்ளதால் செல்வ நிலை என்பதல்ல. (உண்மையான) செல்வநிலை மனதின் செல்வ நிலையாகும் (மன நிறைவாகும்) என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

قَالَ رَسُوْلُ الله ﷺ : ( مَنْ أَصْبَحَ مِنْكُمْ آمِنًا فِي سِرْبِهِ مُعَافًى فِي جَسَدِهِ عِنْدَهُ قُوْتُ يَوْمِهِ كَأَنَّمَا حِيْزَتْ لَهُ الدُّنْيَا ) رواه الترمذي وابن ماجه.

உங்களில் எவர், தனது இருப்பிடத்தில் அச்சமற்றவராகவும், உடலாரோக்கியம் பெற்றவராகவும் மற்றும் அவரிடம் அவரது அன்றைய நாளின் உணவைப் பெற்றவராகவும் இருக்கின்றாரோ, அவர் உலகமே ஒன்று திரட்டிக் கொடுக்கப்பட்டவர் போன்றாவார் என

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் : திர்மிதி, இப்னுமாஜா.

எவவே, ஒரு முஸ்லிம் தனக்கு அல்லாஹ் அளித்துள்ளதை திருப்தியாக ஏற்று, போதுமென்ற மனப்பான்மையை உணரும் போது, மக்களிடம் இருப்பவற்றை விட்டும் தேவையற்றவனாகவும், அவர்களுக்கு மத்தியில் கண்ணியமானவனாகவும், அவர்களில் எவரிடமும் தன்னை இழிவுபடுத்திக் கொள்ளாதும் இருப்பான்.

ஒரு ஞானி பின்வருமாறு கூறுகின்றார் :

எவர் தனது வாழ்நாள் பூராவும் சுதந்திரவாதியாக வாழ விரும்புகின்றாரோ, அவரது உள்ளத்தில் பேராசை குடி கொள்ளாதிருக்கட்டும்.

போதுமென்ற மனப்பான்மையுடையவர்கள் கண்ணியத்தை அடைந்து கொண்டனர். பேராசையுடையவர்கள் இழிவடைந்து விட்டனர் என ஒரு பழமொழி கூறுகிறது.

அடிமைகள் மூன்று வகையினர்கள் : எஜமானனுக்கு அடிமைப்பட்டவன், மனோயிச்சைக்கு அடிமைப்பட்டவன் மற்றும் பேராசைக்கு அடிமைப்பட்டவன் என ஒரு கூற்று மொழிகிறது.

# தீயபண்புகள் – الصفات السيئة

## أَكْلُ الْحَرَامِ

## தடுக்கப்பட்டதை உண்ணுதல்

தடுக்கப்பட்டதை உண்ணுதல் என்பது : உணவு போன்றவைகளில் எவற்றையெல்லாம் உண்பது தடையென தெளிவான ஆதாரங்களின் மூலம் மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளதோ, அவற்றை அல்லாஹ்விடம் நெருங்கும் நோக்கத்தோடு உண்ணாது விட்டுவிட்டால் அதற்கு நன்மை கிடைக்கும். அதனை உண்டால், அதுவே தடைசெய்யப்பட்டதை உண்பதாகும்.

மனிதனின் உள்ளத்தின் சீர்திருத்தத்திற்கும், அதன் சீர்கேட்டிற்கும் இடையிலும் அவனது உணவுக்கும், உழைப்பிற்கும் இடையிலும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. மனிதனின் உழைப்பு ஹராமாகவும், அவன் ஹராமை உண் ணுவதில் துணிவுகொண்டவனாகவும் இருந்தால், அவனது உள்ளம் சீர்கெட்டுவிடும். ஹராமான பொருள் சொத்துகளாகவோ, மற்றவர்களின் உரிமைகளாகவோ அல்லது உணவுகளாகவோ எதுவாக இருப்பினும் இஸ்லாம் அதனை உண்ணுவதைவிட்டும் முஸ்லிம்களை தடுக்கிறது.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَلَا تَأْكُلُوا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوا بِهَا إِلَى الْحُكَّامِ لِتَأْكُلُوا فَرِيقًا مِنْ أَمْوَالِ النَّاسِ بِالْإِثْمِ وَأَنْتُمْ تَعْلَمُونَ ) البقرة : ١٨٨.

உங்கள் பொருட்களை உங்களுக்கிடையில் (ஒருவருக்கொருவர்) தவறான வழியில் உண்ணாதீர்கள். மேலும், நீங்கள் தெரிந்து கொண்டே (பிற) மனிதர்களின் பொருட்களின் ஒரு பகுதியை பாவமான முறையில் உண்பதற்காக அதிகாரிகளிடம் உங்கள் பொருட்க

ளை (லஞ்சமாக) க் கொண்டு செல்லாதீர்கள். 2 : 188.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا لاَ تَأْكُلُوا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ إِلاَّ أَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِنْكُمْ وَلاَ تَقْتُلُوا أَنْفُسَكُمْ إِنَّ اللهَ كَانَ بِكُمْ رَحِيْمًا ) النساء : ٢٩.

நம்பிக்கை கொண்டோரே ! உங்களுக்கு மத்தியில் பொருத்தத்தின் அடிப்படையில் நடைபெறும் வியாபாரத்தைத் தவிர, உங்கள் சொத்துக்களை உங்களுக்கிடையில் தவறான முறையில் உண்ணாதீர்கள். மேலும், உங்களை நீங்களே கொன்று விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடன் நிகரற்ற அன்புடையவனாக இருக்கின்றான். 4 : 29.

ஹராமான விதத்தில் உண்ணும் வழிகள் பலவுள்ளன. அவற்றில் மிக கடினமானதும், கொடூரமானதுமானது அநியாயமான முறையில் அநாதைகளின் சொத்துக்களை உண்பதாகும். அநாதைகளின் சொத்துக்களை உண்ணுவதை அல்லாஹு தஆலா எச்சரித்துள்ளான் மேலும் அவற்றில் ஈடுபடுவோருக்கு நோவினை தரும் வேதனையைக் கொண்டும் வாக்களித்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ الَّذِيْنَ يَأْكُلُوْنَ أَمْوَالَ الْيَتَامَى ظُلْمًا إِنَّمَا يَأْكُلُوْنَ فِي بُطُوْنِهِمْ نَارًا وَسَيَصْلَوْنَ سَعِيْرًا ) النساء : ١٠.

நிச்சயமாக எவர்கள் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக உண்ணுகிறார்களோ, அவர்கள் தமது வயிறுகளில் நெருப்பையே உண்கின்றனர். அவர்கள் சுட்டெரிக்கும் நரகத்தில் நுழைவார்கள்.

4 : 10.

ஹராமான வழியில் உண்ணுவதின் வகைகளில் ஒன்றுதான், அதிகமான மனிதர்கள் சாதரணமாக நினைத்து, துணிவுகொண்டிருக்கும்

வட்டி உண்ணுதலாகும். இதனை அல்லாஹ்வும் அவனது தூதரும் தடுத்துள்ளனர்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَأَحَلَّ اللهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبَا ) البقرة : ٢٧٥.

அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வட்டியைத் தடைசெய்து விட்டான். 2 : 275.

மேலும், அல்லாஹு தஆலா வட்டியைத் தடுத்து, அதன் தண்டனையை எச்சரித்தும் பின்வருமாறு கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اتَّقُوا اللهَ وَذَرُوا مَا بَقِيَ مِنَ الرِّبَا إِنْ كُنْتُمْ مُؤْمِنِيْنَ ۞ فَإِنْ لَمْ تَفْعَلُوا فَأْذَنُوا بِحَرْبٍ مِنَ اللهِ وَرَسُوْلِهِ ) البقرة : 278 ,279.

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், வட்டியில் எஞ்சியுள்ளதை விட்டுவிடுங்கள் ۞ (அவ்வாறு) நீங்கள் செய்யவில்லையானால், அல்லாஹ்விடமிருந்தும், அவனது தூதரிடமிருந்தும் போர்ப் பிரகடனம் செய்யப்பட்டுவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள். 2 : 278, 279.

எவர்கள்தான் அல்லாஹ்வுடன் போர்செய்வதற்கு சக்தி பெறுவார்கள் !.

திருட்டு, லஞ்சம், சூதாட்டம், கொள்ளையடிப்பு, இருட்டடிப்பு, மோசடி, கொடுக்கல் வாங்கலில் படுமோசமான ஏமாற்றம் போன்றவை ஹராமான வழிகளில் உண்பதின் வழிகளில் சிலவையாகும்.

ஹராமானவற்றை உண்ணுவதை தடுத்து பல ஹதீஸ்கள் வந்துள்ளன. அவற்றில் ஒன்று பின்வருமாறு :

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( إِنَّ اللهَ طَيِّبٌ لاَ يَقْبَلُ إِلاَّ طَيِّبًا وَإِنَّ اللهَ أَمَرَ الْمُؤْمِنِيْنَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِيْنَ. فَقَالَ : ( يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنَ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا ) المؤمنون : 51. وَقَالَ : ( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ ) البقرة : ١٢٧. ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيْلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ : يَا رَبِّ ! يَا رَبِّ ! وَمَطْعَمُهُ حَرَامٌ وَمَشْرَبُهُ حَرَامٌ وَمَلْبَسُهُ حَرَامٌ وَغُذِّيَ بِالْحَرَامِ فَأَنَّى يُسْتَجَابُ لِذَالِكَ ؟ ) رواه مسلم.

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள் :

அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்தமானதைத் தவிர வேறெதையும் அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் இறைத் தூதர்களுக்கு எதனை கட்டளையிட்டானோ அதனையே இறைவிசுவாசிகளுக்கும் கட்டளையிட்டுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

தூதர்களே ! தூய்மையானவற்றை நீங்கள் உண்டு, நல்லறமும் புரியுங்கள். 23 : 51.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

நம்பிக்கை கொண்டோரே ! நாம் உங்களுக்கு வழங்கியதில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள். 2 : 172.

பின்னர், ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிட்டார்கள். அந்த மனிதர் நீண்ட பயணத்தில் இருக்கின்றார், அவரது முடிகள் பரட்டையடைந்த நிலையிலும், ஆடைகள் புழுதியடைந்த நிலையிலும் அவரது இரு கரங்களையும் வானத்தின் பக்கம் நீட்டி, என் இறைவனே ! என் இறைவனே ! என்று அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றார். ஆனால், அவரது உணவு ஹராமானது, அவனது குடிப்பு ஹராமானது, அவனது ஆடை ஹராமானது மேலும், அவன் ஹராமானதினாலே வளர்க்

கப்பட்டுள்ளான் ! அப்படியாயின் எவ்வாறு அவனது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் !.

நூல் : முஸ்லிம்.

உணவு ஹலாலாகவோ அல்லது ஹராமாகவோ இருப்பதற்கும், துஆ அங்கீகரிக்கப்படுவதற்கும் நேரடித் தொடர்ப்பு இருப்பதை மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். ஒருவர் சுத்தமான, ஹலாலானதையே உண்ணுவதில் பேணுதல் உடையவராக இருந்தால், அவரது துஆ அங்கீகரிக்கப்படுவதற்கு மிக நெருக்கமாக இருக்கும். இதற்கு மாறாக ஒருவர் ஹராமானதை உண்ணுவதில் துணிச்சலுடையவராக இருந்தால், அவரது துஆ அங்கீகரிக்கப்படுவதற்கு அவர் தடைகளை ஏற்படுத்திக் கொண்டவ ராவார்.

இவ்வுலகம் தான் எல்லாமே என்ற நம்பிக்கையை மனிதன் கைவிட வேண்டும். அவன் இவ்வுலகில் ஹராமான ஒன்றை அடைந்து கொ ண்டால், அதற்காக அவன் மறுவுலகில் விசாரணைக்காக நிறுத்தப் படுவான் என்பதை மறந்து விடக்கூடாது. அவ்வுலகில் தீனார் திரு கங்கள் என காசுபணம் ஒன்றும் கிடையாது. மாறாக, நன்மை தீமைகள்தான். எனவே, எங்களில் ஒவ்வொருவரும் அல்லாஹ்வை பயந்து, எங்களது உணவை சுத்தமானதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## الْبُخْلُ

## கஞ்சத்தன்மை

இமாம் குர்துபீ رَحِمَهُ اللهُ அவர்கள் கூறுகிறார்கள் : மார்க்கத்தில் பழித்துக் கூறப்பட்டுள்ள கஞ்சத்தன்மையானது : ஒருவர் மீது அல்லாஹ் கடமையாக்கியதை நிறைவேற்றாதிருப்பதாகும்.

பார்க்க : தஃப்ஸீருல் குர்துபீ.

எனவே, கஞ்சத்தன்மை என்பது பணத்தில் கட்டாயம் செலவு செய்ய வேண்டியதை,தேவையின் போது செலவு செய்யாது தடுத்து க் கொள்வதாகும். கஞ்சத்தன்மை ஒரு கொல்லை நோயாகும். அது எத்தனை நண்பர்களுக்கு மத்தியில் பிரிவை ஏற்படுத்தியுள்ள து,எத்தனை வீடுகளை அடைத்து விட்டது, எத்தனை குடும்பங் களை நாசப்படுத்தி விட்டது, எத்தனை சமூகங்களை அழித்து விட்டது, உள்ளங்களில் எவ்வளவு குரோதங்கள், வஞ்சகங்களை விளைத்து விட்டது. அதனால், உறவுகள் அறுந்து, தொடர்புகள் இல்லாது போய்விட்டது. மேலும்,பொறாமை மற்றும் கோபம் ஆகியவ ற்றிற்கு அடிப்படையாகவும் அதுவே திகழ்கிறது. எனவே, அது நோய் களில் மிகக் கொடியதும், மோசமானதுமாகும். அதனுடையவன் அல்லாஹ்வில் நம்பிக்கை குறைந்தவனாவான். அவன் எப்போதும் தன்னைப் படைத்தவனிலேயே தீய எண்ணம் கொண்டவனாகவே இக்கின்றான். அல்லாஹ் அவனுக்கு எதையும் அளிக்கவில்லை என வும்,அவனை கண்ணியமாக வாழச் செய்யவில்லை எனவும் நினை ப்பான். மேலும், அவனுக்கு முன்னால் இருக்கும் இந்தச் நல்லவை கள், சொத்துக்கள் மற்றும் அருட்கொடைகள் தீர்ந்துவிட்டால், அதன்பின் எந்த நல்லவையும் அவனை வந்தடையாது என்றும் இவைகளுக்குப் பகரமாக வேறு எதையும் அல்லாஹ் அவனுக்கு அளிக்கமாட்டான் என்றே கருதுவான். மேலும், அவனது சொத்தி லிருந்து ஏதேனும் ஒரு பகுதியை செலவு செய்தால், அதனால், அவன் ஒன்றுமில்லாத ஏழையாக மாறிவிடுவான் என்றும் நினைக்கி ன்றான். இவ்வாறு அல்லாஹ்வின் மீது தப்பபிப்ராயம் கொண்டுள்ள இவர்கள்,செலவிடுவதனால் பணம் குறைந்து விடாது. மாறாக, அது அதிகரிப்பதோடு மேலும் அதில் பரகத் செய்யப்படும் என்பதை நம்பவில்லை.

கஞ்சத்தன்மையையும், அதனுடையவர்களையும் அல்லாஹ் பழித்து ள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَأَمَّا مَنْ بَخِلَ وَاسْتَغْنَى وَكَذَّبَ بِالْحُسْنَى فَسَنُيَسِّرُهُ لِلْعُسْرَى وَمَا يُغْنِي عَنْهُ مَالُهُ إِذَا تَرَدَّى ) الليل :8 - 10.

மேலும், எவன் உலோபித்தனம் செய்து, (அல்லாஹ்வை விட்டும்) தன்னைத் தேவையற்றவனாகக் கருதி, நல்லவற்றைப் பொய்பிக்கின்றானோ அவனுக்கு சிரமத்திற்குரியதை நாம் இலகுபடுத்துவோம்.

92 : 8 – 10.

கஞ்சத்தன்மையுடையவர்களின் இறுதி முடிவை சிரமமானதாகவே ஆக்குவதாக அல்லாஹு தஆலா அவர்களைப் பழித்துக் கூறுகின்றான். எனவே, இலகு என்பது அவர்களை வந்தடையாது. கஞ்சத்தன்மையுடையவன் சிரமப்பட்டு பணத்தை சேகரிப்பான். பின்பு அதனை அவன் அனுபவிக்கவும் மாட்டான், நல்லவழிகளில் செலவிடவும் மாட்டான், அதில் அல்லாஹ்வின் உரிமைகளைப் பேணவும் மாட்டான் எனவே, கியாமத் நாளன்று அது அவனுக்கு பெரும் சிரமமாக மாறிவிடுவதோடு, ஒவ்வொரு தீனார், திர்ஹத்திற்கும் அவன் விசாரிக் கப்படுவான். மொத்தத்தில் அவன் சிரமப்பட்டு சம்பாதித்த பணத்தால் அவன் எந்த நிம்மதியையும் அடைந்து கொள்ள மாட்டான். எனவே, கஞ்சத்தன்மை கொண்டவர்களின் வாழ்வு எவ்வளவு கேடுகெட்டது! ஏழைகள் போன்று வாழ்கின்றனர், பணக்காரர்கள் போன்று விசாரிக் கப்படுகின்றனர்.

அல்லாஹு தஆலா தனது நபியவர்களை கஞ்சத்தன்மையை விட்டும் தடுத்துள்ளான் :

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَلاَ تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَى عُنُقِكَ وَلاَ تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ فَتَقْعُدَ مَلُومًا مَحْسُورًا ) الإسراء : ٢٩.

(நீர் செலவு செய்யாது) உமது கையை உமது கழுத்தில் கட்டப் பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர். மேலும், (அனைத்தையும் செலவு

செய்து) அதனை முழுமையாக விரித்து விடவும் வேண்டாம். அவ்வா றாயின், நீர் இழிவுபடுத்தப்பட்டவராகவும், கைசேதப்பட்டவராகவும் ஆகிவிடுவீர். 17 : 29.

கஞ்சத்தன்மை ரஸூ லுல்லாஹி ﷺ அவர்களிடம் செல்வதற்கு எந்த ஒரு வழியையும் அறிந்திருக்கவில்லை. அவர்களின் கையில் எது இருந்தாலும் அதனை செலவிடும் அளவுக்கு அதிகமாக செல விடுபவராக இருந்தார்கள்.

அல்லாஹு தஆலா தன்னுடைய முஃமினான அடியார்களைத் தன் னோடு இணைத்து அர்ரஹ்மானின் அடியார்கள் என்று அவர்களுக்கு ப் பெயர் சூட்டி, அவர்களிடம் கஞ்சத்தன்மை கிடையாது என்றும் கூறியுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَالَّذِيْنَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذَلِكَ قَوَامًا ) الفرقان : ٦٧.

மேலும், அவர்கள் செலவு செய்தால் வீண்விரயம் செய்ய மாட்டார்கள் (கஞ்சத்தனமாக) குறைக்கவும் மாட்டார்கள். இவற்றுக்கிடையே நடு நிலையானதாக அது இருக்கும். 25 : 67.

கஞ்சத்தன்மையைக் குறைகூறி பல ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ள ன. அவற்றில் சில :

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் பனூஸலமா கோத்திரத்தாரிடம் உங்கள் தலைவர் யார் எனக் கேட்டார்கள். அதற்கவர்கள் : அல் ஜத்து இப்னு கைஸ் என்று கூறியபின் இருந்தாலும், அவரை நாம் கஞ்சத்தன்மையுடையவராக கருதுகிறோம் என்றார்கள். இதனை செவியுற்ற ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் : கஞ்சத்தன்மையை விடவும் கடினமான வேறு எந்த நோய்தான் உண்டு எனக்கூறிவிட் டு, (இப்போதிலிருந்து) உங்கள் தலைவர் அம்ரு இப்னுல் ஜமூஹ்

ஆவார் எனக் கூறினார்கள்.

கஞ்சத்தன்மை என்பது ஒரு மனிதன் தனது கூட்டத்தாருக்கு தலைமை வகிப்பதையே தடுக்கும் ஒரு நோய் என்பதாக ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் எப்படி கணக்கிட்டுள்ளார்கள் என்பதை யும், மேலும்,அவர்களில் அதிகம் செலவிடும் தன்மை கொண்டவரை அவர்களுக்குத் தவைராகவும் நியமித்ததையும் நன்று சிந்தித்துப் பார்!மேலும், கஞ்சத்தன்மை ஒரு மோசமான தன்மை என்பதினால் ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் அதனைவிட்டும் அல்லாஹ்விடம் அதிகம் பாதுகாப்புத் தேடுபவர்களாக இருந்தார்கள்.

அனஸ் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் : ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் அபூதல்ஹா رضي الله عنه அவர்களிடம், நான் கைபர் செல்வதற்காக எனக்குப் பணிவிடை செய்யும் ஒரு சிறுவனை உங் கள் சிறார்களிலிருந்து தேடிக் கொண்டு வருமாறு கூறினார்கள்.

அப்போது அபூதல்ஹா رضي الله عنه அவர்கள் என்னை அவர்களின் ஒட்டக த்தில் பின்னே ஏற்றிச் சென்றார்கள். அவ்வேளை, நான் பருவவயதை அடைய அண்மித்தவனாக இருந்தேன். ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் ஏதேனும் ஓர் இடத்தில் இறங்கிவிட்டால் நான் அவர்களுக்குப் பணிவிடை செய்பவனாக இருந்தேன். அப்போ து அவர்கள் பின்வருமாறு அதிகமாக சொல்வதைக் கேட்டேன்.

أَللّٰهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ وَ الْعَجْزِ وَالْكَسَلِ وَالْبُخْلِ وَالْجُبْنِ وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ ... رواه البخاري.

அல்லாஹு ம்ம இன்னீ அஊது பிக மினல் ஹம்மி வல்ஹஸன் வல்

அஜ்ஸி வல்கஸல், வல்புக்லி அல்ஜு ப்ன், வளலஇத் தய்னி, வகலபதிர் ரிஜால்.

பொருள் :

யா அல்லாஹ் ! கவலை, சஞ்சலத்தை விட்டும், இயலாமையை விட்டும், சோம்பேறித்தனத்தை விட்டும், கஞ்சத்தனத்தை விட்டும், கோழைத்தனத்தை விட்டும், கடனின் தீங்குகளை விட்டும், மனிதர்களின் ஆதிக்கத்தை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

நூல் : புகாரி.

கஞ்சத்தன்மை இவ்வுலகில் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவிக்காது ஆக்கிவிடுவதோடு, இழிவையும் ஈட்டுக் கொடுக்கும். மேலும், மறுமையில் கைசேதத்தையும் ஏற்படுத்தும்.

الاحتقارُ

## கேவலமாக எண்ணுதல்

கேவலமாக எண்ணுதல் என்பது : ஒரு மனிதரை அல்லது அவர் செய்யும் ஒரு நன்மையான காரியத்தை அல்லது அவர் அன்பளிப்புச் செய்யும் ஒரு பொருளை அற்பமானதாக நினைப்பதாகும்.

பார்க்க : ஃபத்ஹு ல் பாரீ.

ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிம் சகோரதனாவான். எனவே, அவனுக்கு உதவி செய்யாதிருப்பதோ அல்லது அவனை பரிகாசம் செய்வதோ அல்லது அவனைக் கேவலமாக எண்ணுவதோ ஆகுமான செயலல்ல. ஒரு முஸ்லிமின் மானம், பொருள் மற்றும் உயிர் ஆகியவை மற்ற முஸ்லிமின் மீது ஹராமாகும். அரபியர் அல்லாதவரை விடவும் அரபியரோ அல்லது அரபியரை விடவும் அரபியர் அல்லாதவரோ சிறந்தவர் கிடையாது. ஒருவருக்கு சிறப்பு கிடைப்பதெல்லாம் அவரது தக்வா என்னும் இறையச்சத்தைக் கொண்டேயாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا لاَ يَسْخَرْ قَوْمٌ مِنْ قَوْمٍ عَسَى أَنْ يَكُوْنُوا خَيْرًا مِنْهُمْ وَلاَ نِسَاءٌ مِنْ نِسَاءٍ عَسَى أَنْ يَكُنَّ خَيْرًا مِنْهُنَّ وَلاَ تَلْمِزُوا أَنْفُسَكُمْ وَلاَ تَنَابَزُوا بِالأَلْقَابِ بِئْسَ الاسْمُ الْفُسُوْقُ بَعْدَ الإِيْمَانِ وَمَنْ لَمْ يَتُبْ فَأُولَئِكَ هُمُ الظَّالِمُوْنَ ) الحجرات : ١١.

நம்பிக்கை கொண்டோரே ! ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்). இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். உங்களுக்கிடையே நீங்கள் குறைகூற வேண்டாம். மேலும், பட்டப் பெயர்களால் அழைக்கவும் வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் தீய பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் (இவற்றை விட்டும்) மீளவில்லையோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள். 49 : 11.

இமாம் இப்னு கஸீர் رَحِمَهُ الله அவர்கள் இத்திரு வசனத்தின் விளக்கவுரையில் பின்வருமாறு கூறுகிறார்கள் :

மனிதர்களைப் பரிகாசம் செய்வதை விட்டும்,அவர்களைக் கேவலமாக எண்ணுவதை விட்டும் அல்லாஹு தஆலா தடுக்கின்றான்.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் :

பெருமையடிப்பது என்பது, சத்தியத்தை நிராகரிப்பதும், பிற மக்களைக் கேவலமாக நினைப்பதுமாகும்.

நூல் : முஸ்லிம்.

இதன் பொருள் என்னவென்றால், மற்றவர்களைக் கேவலமாகவும், அற்பமானவர்களாகவும் நினைப்பதாகும். இது ஹராமாகும். ஏனெனில், சிலவேளை கேவலமாக நினைப்பவரை விடவும், கேவலமாக

நினைக்கப்படுபவர் அல்லாஹ்விடத்தில் மிக உயர் மதிப்புக்குரியவரா கவும், அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராகவும் இருக்கலாம்.

மற்றவர்களைக் கேவலமாக நினைப்பதைப் பழித்து பல ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில :

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( لاَ تَحَاسَدُوا وَلاَ تَنَاجَشُوا وَلاَ تَبَاغَضُوا وَلاَ تَدَابَرُوا وَلاَ يَبِعْ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ وَكُوْنُوا عِبَادَ اللهِ إِخْوَانًا. الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ لاَيَظْلِمُهُ وَلاَ يَخْذُلُهُ وَلاَ يَحْقِرُهُ التَّقْوَى هَاهُنَا ) وَيُشِيْرُ إِلَى صَدْرِهِ ثَلاَثَ مَرَّاتٍ ( بِحَسْبِ امْرِىءٍ مِنَ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ حَرَامٌ دَمُهُ وَمَالُهُ وَعِرْضُهُ ) رواه مسلم.

அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள் :

ஒருவர் மற்றவரைப் பொறாமை படாதீர்கள், ஒருவர் மற்றவரின் வியா பாரத்தில் தலையிட்டு விலையை உயர்த்தி விடாதீர்கள், ஒருவர் மற் றவரிடம் விரோதம் கொள்ளாதீர்கள், ஒருவர் மற்றவரை புறக்கணிக் காதீர்கள், சிலர் வேறு சிலரின் வியாபாரத்தில் குறுக்கிட்டு வியாபாரம் செய்யாதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே! ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரராவார். அவர் அவருக்கு அநீதி இழைக்கமாட்டார், அவர் அவருக்கு உதவி செய்யாதிருக்கமாட்டார், அவர் அவரை கேவலமா எண்ணமாட்டார். இறையச்சம் இதோ இங்கு இருக்கிறது, (இறையச் சம் இதோ இங்கு இருக்கிறது, இறையச்சம் இதோ இங்கு இருக் கிறது) என்று கூறும் போது ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் தங்கள் நெஞ்சின் பக்கம் சுட்டிக் காட்டினார்கள். மேலும், ரஸூலு

ல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள் : ஒருவர் தம் முஸ்லிமான சகோதரரை இழிவாக எண்ணுவது தீங்கானதாகும். ஒரு முஸ்லிம் அவரின் இரத்தம், கண்ணியம், பொருள் ஆகியவை மற்றொரு முஸ்

லிமின் மீது ஹராமாகும். (அவைகளைச் சேதப்படுத்துவது விலக்கப் பட்டதாகும்).

நூல் : முஸ்லிம்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : قَالَ رَسُولُ اللهِ ﷺ : ( يَا نِسَاءَ الْمُسْلِمَاتِ لاَ تَحْقِرَنَّ جَارَةٌ لِجَارَتِهَا وَلَوْ فِرْسِنَ شَاةٍ ) متفق عليه.

முஸ்லிம் பெண்களே ! எந்தவோர் அண்டை வீட்டுக்காரப் பெண்ணும் மற்றோர் அண்டை வீட்டுக்காரப் பெண்ணை இழிவாகக் கருத வேண்டாம். ஓர் ஆட்டின் குளம்பை கொண்டாயினும் சரியே (ஆட்டுக் காலின் குளம்பை வழங்குவது கொண்டாவது ஒரு பெண் தன் அண்டை வீட்டுக்காரப் பெண்ணைக் கண்ணியப்படுத்தவும்) என

ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா

رضي الله عنه அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

ஒரு முஸ்லிமைக் கேவலமாக எண்ணுவது கூடாது, மேலும், மற்றவர்களுடன் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும், அவர்களை கண்ணியப்படுத்தி செயல்பட வேண்டும் மற்றும் தனது பொருள், வம்சம், பதவி, பலம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மற்ற முஸ்லிமான சகோதரனுடன் பெருமையாக நடந்து கொள்ளக் கூடாது. அல்லாஹ் பெருமையடிப்பவர்களை விரும்பமாட்டான் என்ற பாடங்களை மேற்கூறப்பட்டுள்ள ஹதீஸ் போதிக்கின்றன என்பதை அவதானிக்கலாம்.

## الْحَسَدُ

## பொறாமை

முஸ்லிம்களுக்கு மத்தியில் பரிசுத்தமான அன்பு,நேசத்தை இஸ்லாத்தின் உறுதியான உறவாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். அல்லாஹ்வுக்காக அன்பு கொண்டவர்களை அவனது அர்ஷின் நிழலின் கீழ் ஒன்று சேர்ப்பான். எந்த ஒரு முஸ்லிமுக்கும் எந்த ஒரு நோவினையும் ஏற்படக் கூடாது என்பதற்காக அவனது பொருள், கண்ணியம், உயிர் ஆகியவைகளை பாதுகாத்து நடப்பதை இஸ்லாம் கட்டாயப் படுத்துவது கொண்டு இந்த உறவை இஸ்லாம் இன்னும் உரமூட்டி வலுப்படுத்தியுள்ளது.

இருப்பினும், அல்லாஹு தஆலா நல்லவற்றைக் கொண்டு அருள் புரிந்தவர்கள் மீது குரோதம்,பொறாமை கொண்டுள்ள தீய உள்ளம் படைத்தவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். இதன் விளைவாக புறம், கோள்,ஏளனம் செய்தல் போன்ற பல தீயகுணங்கள் பரவின இவை போன்ற கீழ்த்தரமான குணங்களுடைய உள்ளம் படைத்தவர்கள் இல்லாத எந்த ஒரு சமூகமும் கிடையாது.

எனவே, இஸ்லாமிய சமூகத்தில் பரவியிருக்கும் இந்தப் பொறாமையின் கொடூரத்தை நாம் அறிந்திருப்பது மிகக் கடமையாகும்.

பொறாமை என்பது : எவர் மீது பொறாமை கொள்ளப்படுகிறதோ அவரிடமிருக்கும் அருட்கொடைகள் அவரை விட்டும் நீங்கிவிட வேண்டும் என்று ஆதரவுவைப்பதாகும்.

பொறாமையைப் பழித்து வந்திருக்கும் அல்குர்ஆன் வசனங்களில் சில :

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ كَانَ مِنَ الْجِنِّ فَفَسَقَ عَنْ أَمْرِ رَبِّهِ ) الكهف : ٥٠.

நாம் வானவர்களிடம் ஆதமுக்கு (சிரம்பணிந்து) சுஜூது செய்யுங்கள் என்று கூறிய போது, இப்லீஸைத் தவிர (மற்ற அனைவரும்) சுஜூது செய்தனர். அவன் ஜின்களைச் சேர்ந்தவனாக இருந்தான். அதனால் தனது இரட்சகனின் கட்டளைக்கு மாறு செய்தான். 18 : 50.

அல்லாஹ் ஆதம் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கு சுஜூது செய்யுமாறு மலக்குகளுக்கு கட்டளையிட்ட போது, இப்லீஸைத் தவிர மற்ற எல்லா மலக்குகளும் அவருக்கு சுஜூது செய்தனர். இப்லீஸ் பொறாமையின் காரணமாக சுஜூது செய்யாது தவிர்ந்து கொண்டான். எனவே, அல்லாஹ்வுக்கு வானுலகில் மாறுபாடு செய்வதற்குக் காரணமாக இருந்த முதல் குற்றம் பொறாமையாகும்.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَاتْلُ عَلَيْهِمْ نَبَأَ ابْنَيْ آدَمَ بِالْحَقِّ إِذْ قَرَّبَا قُرْبَانًا فَتُقُبِّلَ مِنْ أَحَدِهِمَا وَلَمْ يُتَقَبَّلْ مِنَ الآخَرِ قَالَ لأَقْتُلَنَّكَ قَالَ إِنَّمَا يَتَقَبَّلُ اللهُ مِنَ الْمُتَّقِيْنَ ) المائدة : ٢٧.

(நபியே!) ஆதமின் இரு புதல்வர்களின் செய்தியை உண்மையாக அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! அவ்விருவரும் காணிக்கை நிறைவேற்றிய போது அவ்விருவரில் ஒருவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மற்றவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நிச்சயமாக நான் உன்னைக் கொலை செய்வேன் என (காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படாதவன்) கூறினான். அதற்கு (மற்றவர்) பயபக்தியாளர்களிடமிருந்துதான் அல்லாஹ் ஏற்றுக் கொள்வான் எனக் கூறினார். 5 : 27.

காபீல் என்பவன் ஹாபீல் என்னும் தனது சகோதரனைக் கொலை செய்தான். காரணம் பொறாமை. எனவே, அல்லாஹ்வுக்கு பூமியில் மாறுபாடு செய்வதற்குக் காரணமாக இருந்த முதல் குற்றமும் பொறாமையாகும். மேலும், பொறாமை யஹூதிகள் மற்றும் நஸாராக்களின் பண்புகளில் உள்ளதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَدَّ كَثِيْرٌ مِنْ أَهْلِ الْكِتَابِ لَوْ يَرُدُّوْنَكُمْ مِنْ بَعْدِ إِيْمَانِكُمْ كُفَّارًا حَسَدًا مِنْ عِنْدِ أَنْفُسِكُمْ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ ) البقرة : ١٠٩.

வேதத்தையுடையோரில் அதிகமானோர் சத்தியம் தங்களுக்குத் தெளிவான பின்னரும் தங்கள் மனதில் உள்ள பொறாமை காரணமாக நீங்கள் நம்பிக்கை கொண்ட பின்னரும் உங்களை நிராகரிப்பாளர்களாக மாற்ற வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். 2 : 109.

பொறாமையைப் பழித்து அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களில் சில :

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( لاَ يَجْتَمِعُ فِي جَوْفِ عَبْدٍ غُبَارٌ فِي سَبِيْلِ اللهِ وَفَيْحُ جَهَنَّمَ وَلاَ يَجْتَمِعُ فِي جَوْفِ عَبْدٍ الإِيْمَانُ وَالْحَسَدُ ) رواه النسائي وصححه الألباني.

அல்லாஹ்வின் பாதையில் ஏற்பட்ட புழுதியும், நரகத்தின் சீழும் ஒரு அடியானுக்குள் ஒன்று சேராது. மேலும் இறைநம்பிக்கையும்,பொறாமையும் ஒரு அடியானுக்குள் ஒன்று சேராது என ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : நஸாஈ.

قَالَ رَسُوْلُ اللهِ ﷺ : ( دَبَّ إِلَيْكُمْ دَاءُ الأُمَمِ قَبْلَكُمْ : الْحَسَدُ وَالْبَغْضَاءُ هِيَ الْحَالِقَةُ لاَ أَقُوْلُ تَحْلِقُ الشَّعْرَ وَلَكِنْ تَحْلِقُ الدِّيْنَ ) رواه الترمذي وحسنه الألباني.

உங்களுக்கு முன்னிருந்து சமூகங்களிடமிருந்த நோய் உங்களையும் வந்தடைந்துள்ளது. அதுதான் பொறாமை மற்றும் குரோதம். அது சிரைத்துவிடக்கூடியது. முடியை சிரைக்கும் என்ற நான் சொல்ல மாட்டேன். மாறாக, மார்க்கத்தை சிரைத்துவிடும் என ரஸூ லு ல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள். நூல் : திர்மிதி.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا عَنْ رَسُوْلِ اللهِ ﷺ قَالَ : ( مَا حَسَدَتْكُمُ الْيَهُوْدُ عَلَى شَيْءٍ مَا حَسَدَتْكُمْ عَلَى الإِسْلَامِ وَالتَّأْمِيْنِ ) رواه ابن ماجه وحسنه الألباني.

நீங்கள் முஸ்லிம்களாக இருப்பது மற்றும் ஆன்மீ சொல்வது ஆகிய வற்றின் மீது யூதர்கள் உங்களுடன் பொறமை கொள்ளும் அளவு வேறு எந்த ஒன்றின் மீதும் அவர்கள் உங்களுடன் பொறாமை கொள்ளவில்லை என ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல் : இப்னுமாஜா.

பொறாமை என்பது ஒரு மோசமான பண்பு,மார்க்கத்தையே சிரைத் துவிடுமளவுக்கு தீயகுணம் கொண்டது. பொறாமை படைத்தவன் தன்னை விடவும் பணத்தால், அந்தஸ்தால் அல்லது ஏதேனும் பண்பால் உயர்ந்தவர்களைக் காணும் போதெல்லாம், அவனது உள்ளம் உடைந்து நொருங்கிப்போய் விடுகிறது. எனவே, அந்தப் பொறாமை அதனுடையவனின் உள்ளத்தை சுட்டெரிப்பதோடு அவன து நன்மைகளையும் சுட்டெரிக்கிறது. எனவே, முஸ்லிமானவன் எப்போதும் இந்தப் பொறாமையை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், அதைவிட்டும் தனது உள்ளத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், அல்லாஹ்விடம் போதும் என்ற மனப்பான்மையை வேண்டிக் கொண்டேயிருக்க வேண்டும். அது அழிந்திடா செல்வமாகும்.

## التَّسَوُّل

## பிறரிடம் கையேந்துதல்

ஒரு முஸ்லிமை உயர் உள்ளத்திடகாத்திரம், தன்மானம் மற்றும் அற்ப செயல்களை விட்டும் நீங்கியிருத்தல் போன்றவற்றின் மீது பயிற்றுவிப்பதற்காக இஸ்லாம் அவனது உள்ளத்தில் பிறரிடம் கையேந்தும் செயலை வெறுப்பானதாக ஆக்கியுள்ளது.

ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் ஸஹாபாக்களிடம் பைஅத் எடுக்கும் போது, அதன் அடிப்படைகளில் ஒன்றாக பிறரிம் கையேந் தக்கூடாது என்பதையும் உள்ளடக்கியுள்ளார்கள்.

அபூமுஸ்லிம் அல்கவ்லானீ என்பர் கூறுகின்றார் : அவ்ஃப் இப்னு மாலிக் رضي الله عنه அவர்கள் என்னிடம் கூறினார்கள் : நாம் ஏழு அல்லது எட்டு அல்லது ஒன்பது பேர்கள் ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்களுடனிருந்தோம். அப்போது அவர்கள் ' நீங்கள் அல்லாஹ்வின் தூதருக்கு பைஅத் செய்ய மாட்டீர்களா ? எனக் கேட்டார்கள். - நாம் அவ்வேளை புதிதாகத்தாம் அவர்களுக்கு பைஅத் செய்திருந்தோம் எனவே, — நாம் உங்களுக்கு பைஅத் செய்துவிட்டோமே என்று கூறினோம். அவர்களோ மூன்று முறைகள் அவ்வாறு கூறிக்கொண்டே இருந்தார்கள். அப்போது நாம் எமது கரங்களை நீட்டி, அவர்களுக்கு பைஅத் செய்தோம். அப்போது ஒருவர் அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! நாம் உங்களுக்கு பைஅத் செய்து விட்டோம். மீண்டும் எதன் மீது உங்களுக்கு பைஅத் செய்ய வேண்டும் என்றார். அதற்கு நீங்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும், அவனுக்கு எதனையும் இணைவைக்கக் கூடாது ஐந்து நேரங்கள் தொழ வேண்டும், (அல்லாஹ்வின், அவனது தூத ரின் கட்டளைகளை) செவியுற்று, வழிப்பட்டு நடக்க வேண்டும் (என்பவை மீதாகும்) என்று ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள். (மாலிக் இப்னு அவ்ஃப் அவர்கள்) இரகசியமாக ஒன்றைக் கூறினார்கள். அதாவது ரஸூ லுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் :( நீங்கள் மனிதர்களிடம் எதையும் கேட்காதீர்கள்). இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் கூறுகின்றார் : இவர்களில் சிலர் அவரது சாட்டை கீழே விழுந் த போதுகூட எவரிடமும் அதனை எடுத்துத்தருமாறு கேட்காதவரா கவே இருந்தார்.

நூல்கள் : முஸ்லிம், அபூதாவூத், நஸாஈ, இப்னு மாஜா.

அந்த ஸஹாபாக்கள் இவ்வாறு ரஸுூ லுல்லாஹ் ﷺ அவர்களி ன் பைஅத்தில் கூறப்பட்டவைகளை அப்படியே செயல்படுத்தினார்க ள் மற்றவர்கள் சொற்பப் பணம் அல்லது அற்ப சிரமம் கூட செலவிடாது செய்ய முடிந்த காரியங்களைக் கூட அவர்களிடம் கேட்காதிருந் தார்கள். அல்லாஹ் அந்த ஸஹாபாக்களை பொருந் திக் கொள்ள வேண்டும். அவர்கள் மனிதர்களை வெற்றி கொள்ள முன் தங்களது ஆதமாக்களை வெற்றிகொண்டனர். மேலும் அந்த ஆத்மாக்களை மார்க்கத்தின் நேரான வழியில் நடாத்தினார்கள்.

عَنْ ثَوْبَانَ مَوْلَى رَسُوْلِ اللهِ ﷺ قَالَ : ( مَنْ يَتَكَفَّلُ لِي أَنْ لاَ يَسْأَلَ النَّاسَ شَيْئًا وَأَتَكَفَّلُ لَهُ الْجَنَّةَ ؟) فَقَالَ ثَوْبَانُ : أَنَا يَا رَسُوْلَ اللهِ ! فَقَالَ :( لاَ تَسْأَلِ النَّاسَ شَيْئًا ) فَكَانَ لاَ يَسْأَلُ أَحَدًا شَيْئًا. رواه أبو داود والبيهقي في السنن الكبرى.

ஸவ்பான் ؓ அவர்கள் கூறுகிறார்கள் : மக்களிடம் நான் எத னையும் கேட்கமாட்டேன் என்று யார் என்னிடம் உறுதி மொழி கொடுக்கிறாரோ அவருக்கு நான் சுவர்க்கத்துக்குப் பொறுப்பேற்றுக் கொள்வேன் என ரஸுூ லு ல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் அதற்கு " நான் " (தங்களிடம் உறுதிமொழி தருகிறேன்) எனக் கூறினேன். அதற்கு ரஸுூ லுல்லாஹ் ﷺ அவர்கள் : நீர் மக்களிடம் எதனையும் கேட்கக்கூடாது எனக் கூறினார்கள். இதன் பின் ஸவ்பான் ؓ அவர்கள் : மக்களிடம் எதனையும் கேட்கா தவராக இருந்தார்கள்.

நூல்கள் : அபூதாவூத், பைஹகீ.

எடுக்கும் கரம் தாழ்ந்த கரம் எனவும், செலவிடும் அல்லது கொடு க்கும் கரம் உயர்ந்த கரம் எனவும் ரஸுூ லுல்லாஹ்

ﷺ அவர்கள் ஸஹாபாக்களுக்கு வர்ணித்துள்ளார்கள். மேலும், அவர்களின் உள்ளங்களைப் பேணுதல் மற்றும் பிறரிடம் தேவையற்ற தன்மை போன்றவற்றின் மீது பயிற்றுவிக்க அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அபூ ஸயீத் அல்குத்ரீ رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள் :

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்களிடம் சில மனிதர்கள் வந்து உதவி கேட்டார்கள். தங்களிடமுள்ளவை தீரும் வரை அவர்களுக்கு வழங் கினார்கள். தங்களின் கரத்திலுள்ளவை அனைத்தையும் செலவழித் து முடிந்தபின் கூறினார்கள் : என் கையில் என்ன செல்வங்கள் உள்ளனவோ அவைகளை உங்களுக்கு வழங்காது நான் சேமித்து வைக்கமாட்டேன். (எனினும்) உங்களில் எவர் பேணுதலை மேற் கொள்கிறாரோ, அவரை அல்லாஹ் பேணுதல் உள்ளவராக ஆக்கி வைப்பான். யார் (பிறரிடம்) தேவையுறாது இருக்க விரும்புகிறாரோ அவரை அல்லாஹ் பிறரிடம் தேவையற்றவராக ஆக்கி வைப்பான். யார் பொறுமையைக் கடைபிடிக்க முயல்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் பொறுமைக்கு நல்லுதவி செய்கிறான். பொறுமையை விட ச் சிறந்ததும், மிக விஸ்தீரணமானதுமான நன்கொடை எவருக் கும் வழங்கப்படவில்லை.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

ரஸூ லுல்லாஹி ﷺ அவர்கள் தங்களது தோழர்களுக்கு இஸ் லாத்தின் அடிப்படைகளில் இருபெரும் அடிப்படைகளை கற்றுக்கொ டுத்தார்கள் :

1- தொழில் புரிதல்.

சம்பாத்தியத்தின் அடிப்படையே தொழிலாகும். பூமியின் நாலாக் கோணத்திலும் சுற்றித்திரிந்து, அல்லாஹ்வின் பேரருளிலிருந்து தனது தேடிச் சம்பாதிப்பது ஒரு முஸ்லிமின் கடமையாகும். ஒரு

சில மனி தர்கள் தொழில் செய்வதை ஏளனக்கண் கொண்டு பார்த்தாலும், அது பிறரிடம் கையேந்துவது மற்றும் அவர்களிடம் கேட்பது கொண்டு முகப்பொழிவை இல்லாமலாக்கிக் கொள்வதை விடவும் மிகச் சிறந்ததாகும்.

(உங்களில் ஒருவர் கயிற்றை தனது முதுகில் சுமந்து சென்று,விற கு ஒரு கட்டை எடுத்து வந்து விற்பதினால், அவரது முகத்தை அல்லாஹ் பாதுகாப்பதானது,மனிதர்களிடம் அவர் கேட்டு, அவர்கள் அவருக்குக் கொடுத்தாலும் அல்லது கொடுக்காவிட்டாலும்,அதனை விடவும் மிகச் சிறந்ததாகும்.)

நூல் : புகாரி.

2- மனிதர்களிடம் கேட்பது,அவர்களிடம் கையேந்துவது ஹராமாகும் ஏனெனில், அதனால்,கேட்பவன் அல்லது கையேந்துபவன் தன்னை இழிவுக்கும், கேவலத்துக்கு ஆளாக்குகின்றான். எனவே, ஒரு முஸ்லிம் பிறரிடம் கேட்பதாயின், அவனுக்கு கேட்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற அளவுக்கு நிர்ப்பந்தத் தேவையிருந்தால் மாத்திரமே அவனுக்கு கேட்பதற்கு அனுமதியுண்டு. இதனையும் மீறி அவனுடைய தேவைகளுக்குப் போதுமானளவு அவனிடமிருந்தும், அவன் கேட்டால், அது கியாமத்துடைய நாளில் அவனுடைய முகத் தை விராண்டிக்ட்டிக் கீறக்கூடியதாக மாறிவிடும்.

எனவே, உள்ளம் வெடிக்குமளவுக்கு பயங்கரமான எச்சரிக்கை கொண்டு பல ஹதீஸ்கள் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் சில :

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ : ( لَا تَزَالُ الْمَسْأَلَةُ بِأَحَدِكُمْ حَتَّى يَلْقَى اللهَ تَعَالَى وَلَيْسَ فِي وَجْهِهِ مُزْعَةُ لَحْمٍ ) متفق عليه.

உங்களில் ஒருவர் பிறரிடம் கேட்பது தொடர்ந்து கொண்டிருந்தால் கியாமத் நாளில் தன் முகத்தில் எந்தவொரு சதைத்துண்டும் இல் லாதவராக (இழிவான நிலையில்) அவர் அல்லாஹ்வைச் சந்திப்பார்

என நபி ﷺ அவர்கள் கூறியதாக இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

எவர் தனது தேவைக்குப் போதுமானளவு தன்னிடமிருந்தும் பிறரிடம் கேட்கின்றாரோ, அதனால், கியாமத்துடைய நாளில் அவரது முகத்தில் கீறல்கள், காயங்கள் இருக்கும் நிலையில் அவர் வருவார் அப்போது அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! போதுமான அளவு என்றால் எவ்வளவு என கேட்கப்பட்டது ? அதற்கு ஐம்பது திர்ஹம்கள் அல்லது அதன் பெருமதியளவு தங்கமாகும் என அவர்கள் பதில் கூறினார்கள்.

நூல்கள் : அபூதாவூத், திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா.

எனவே, பிறரிடம் கேட்பதானது ஒரு மனிதனுடைய கண்ணியம் மற்றும் மனிதநேயத்தை எடுத்துக் காட்டும் மிக முக்கியமான உறுப் பாகிய அவனது முகத்திலேயே பாதிப்பை எற்படுத்துகிறது.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

எவரிடம் ஒரு ஊகிய்யா இருந்தும், அவர் பிறரிடம் கேட்கின்றாரோ, நிச்சயமாக அவர் மனிதர்களிடம் வருந்தி கேட்டவராவார்.

நூல்கள் : அபூதாவூத், நஸாஈ.

ஊகிய்யா என்பது நாற்பது திர்ஹம்களின் பெருமதியாகக் கணிக்கப் படும் நாணயமொன்றாகும்.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

எவரிடம் தனக்குப் போதுமானளவு இருந்தும், அவர் பிறரிடம் கேட்கின்றாரோ, அவர் நரக நெருப்பிலிருந்து அல்லது நரக நெருப்புக் கங்கிலிருந்து அதிகத்தைப் பெற்றுக் கொள்கின்றார். அப்போது, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! ஒருவருக்குப் போதுமானளவு என்றால் எவ்வளவு ? என ஸஹாபாக்கள் வினவினார்கள். அதற்கு, அவருக்கு வாழ்வதற்குப் போதுமானளவு

என நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்.

நூல் : அபூதாவூத்.

அல்லாஹ் எங்கள் அனைவருக்கும் அவனின் பேரருளிலிருந்து வழங்கி, அவன் அல்லாதவர்களை விட்டும் எம்மைத் தேவையற்றவர்களாக ஆக்குவானாக !.

## قَطِيْعَةُ الرَّحِم

## உறவினர்களைத் துண்டித்து நடத்தல்

முஸ்லிம்களுக்கு மத்தியில் சமூக இணைப்பு, தொடர் ஒத்துழைப்பு மற்றும் அன்பு,நேசம் போன்றவற்றை ஏற்படுத்துவதில் உறவுகளைச் சேர்ந்து நடத்தல் பெரும் பங்களிப்பு வகிக்கிறது. எனவேதான், இஸ்லாம் உறவினரைச் சேர்ந்து நடப்பதின் பக்கம் அழைப்பு விடுத்துள்ளதுடன் அதனை கடமையாக்கியும் உள்ளது.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُوْنَ بِهِ وَالْأَرْحَامَ ) النساء : ١.

எவனைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும் மேலும், இரத்த உறவுகளை(த் துண்டித்து நடப்பதை)யும் அஞ்சிக் கொள்ளுங்கள்.

4 : 1.

உறவினர்களைத் துண்டித்து நடப்பதை அல்லாஹு தஆலா எச்சரித்துக் கூறுகின்றான் :

( وَالَّذِيْنَ يَنْقُضُوْنَ عَهْدَ اللهِ مِنْ بَعْدِ مِيْثَاقِهِ وَيَقْطَعُوْنَ مَا أَمَرَ اللهُ بِهِ أَنْ يُوْصَلَ وَ
يُفْسِدُوْنَ فِي الأَرْضِ أُولَئِكَ لَهُمُ اللَّعْنَةُ وَلَهُمْ سُوءُ الدَّارِ ) الرعد : ٢٥.

எவர்கள் அல்லாஹ்விடம் உடன்படிக்கையை உறுதிப்படுத்திய பின்னரும் அதை முறித்து, இணைக்கப்பட வேண்டும் என அல்லாஹ் கட்டளையிட்ட (இரத்த பந்தத்)தைத் துண்டித்து, பூமியில் குழப்பம் விளைவிக்கின்றார்களோ அவர்களுக்கு சாபம்தான். மேலும், அவர்களுக்கு மோசமான வீடு உண்டு. 13 : 25.

உறவுகளைத் துண்டித்து நடப்பவர்களை காத்திருக்கும் சாபம் மற்றும் மோசமான வீடு ஆகியவைகளை விடவும் மிக அதிகமான தண்டனை வேறு எதுவாக இருக்க முடியும். இதனால், உறவுகளைச் சேர்ந்து நடந்திருந்தால் மறுமை நாளில் அவர்களுக்குக் கிடைக்க இருந்த நன்மைகளை அவர்கள் இல்லாதாக்கிக் கொண்டதோடு, நீண்ட ஆயுள், இரணத்தில் விஸ்தீரனம் போன்ற இவ்வுலகில் கிடைக்கவிருந்த பெரும் நன்மைகளையும் இல்லாதாக்கிக் கொண்டனர்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

( مَنْ أَحَبَّ أَنْ يُبْسَطَ لَهُ فِي رِزْقِهِ وَأَنْ يُنْسَأَ لَهُ فِي أَثَرِهِ فَلْيَصِلْ رَحِمَهُ ) متفق عليه.

யார் தம் இரணத்திலும் ஆயுளிலும் அதிகரிக்கப்பட விரும்புகிறாரோ அவர் தம் உறவினரைச் சேர்ந்து கொள்ளட்டும்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

அல்லாஹு தஆலா படைப்புகளைப் படைத்து முடித்ததும் இரத்த பந்த உறவு எழுந்தது. அல்லாஹு தஆலாவிடம் (யா அல்லாஹ்) இது இரத்த பந்தத்தை துண்டிப்பதை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடக்கூடிய இடமாகும் எனக் கூறியது. அதற்கு அல்லாஹு தஆலா, ஆம்! உன்னைச் சேர்த்துக் கொள்பவரை நான் சேர்த்துக் கொள்வதும், உன்னைத் துண்டிப்பவரை நான் துண்டித்து விடுவதும் உனக்கு திருப்திதானே ! எனக் கேட்டான். அதற்கு இரத்த பந்தம் ' ஆம் " என பதிலுரைத்தது. அதற்கு அல்லாஹு தஆலா அது உனக்கு உண்டு எனக் கூறினான். பின்னர் நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் : நீங்கள் விரும்பினால் பின்வரும் வசனத்தை ஓதுங்கள்.

( فَهَلْ عَسَيْتُمْ إِنْ تَوَلَّيْتُمْ أَنْ تُفْسِدُوا فِي الأَرْضِ وَتُقَطِّعُوا أَرْحَامَكُمْ أُولَئِكَ الَّذِيْنَ لَعَنَهُمُ اللهُ فَأَصَمَّهُمْ وَأَعْمَى أَبْصَارَهُمْ ) محمد : ٢٢,٢٣.

ஆகவே, நீங்கள் அதிகாரப் பொறுப்புக்கு வந்து விட்டால் பூமியில் குழப்பம் செய்வதையும், உங்கள் உறவு பந்தங்களை துண்டித்து விடுவதையும் எதிர்பார்க்கிறீர்களா ?அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ் அவர்களை சபித்து, அவர்களை (சத்தியத்தை செவியேற்பதை விட்டும்) செவிடாக்கி,அவர்களுடைய பார்வைகளை குருடாகவும் ஆக்கிவிட்டான். 47 : 22, 23.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

உறவினர்களை வெறுத்து நடத்தல், அவர்களைச் சந்திப்பதற்கு வாயிப்பிருந்தும் அதனைப் புறக்கணித்தல், அவர்களின் இன்பகாரியங்களில் பங்கு கொள்ளாதிருத்தல், அவர்களின் துன்பங்களில் ஒத்தாசை செய்யாதிருத்தல் மேலும் அவர்களுக்குத் தேவைகள் இருந்தும், அவர்களை விட்டுவிட்டு அவைகளை மற்றவர்களுக்கு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் உறவினர்களைத் துண்டித்து நடப்பதாகவே கருதப்படும் செயல்பாடுகளாகும்.

**உறவினர்களைத் துண்டித்து நடப்பவனுக்குரிய தண்டனை :**

- உறவினர்களை துண்டித்து நடப்பவன் அல்குர்ஆனில் சபிக் கப்பட்டுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( فَهَلْ عَسَيْتُمْ إِنْ تَوَلَّيْتُمْ أَنْ تُفْسِدُوا فِي الأَرْضِ وَتُقَطِّعُوا أَرْحَامَكُمْ أُولَئِكَ الَّذِيْنَ لَعَنَهُمُ

اللهُ فَأَصَمَّهُمْ وَأَعْمَى أَبْصَارَهُمْ ) محمد : ٢٢,٢٣.

ஆகவே, நீங்கள் அதிகாரப் பொறுப்புக்கு வந்து விட்டால் பூமியில் குழப்பம் செய்வதையும், உங்கள் உறவு பந்தங்களை துண்டித்து விடுவதையும் எதிர்பார்க்கிறீர்களா ?அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ் அவர்களை சபித்து, அவர்களை (சத்தியத்தை செவியே ற்பதை விட்டும்) செவிடாக்கி,அவர்களுடைய பார்வைகளை குருடா கவும் ஆக்கிவிட்டான். 47 : 22, 23.

இமாம் அலீ இப்னுல் ஹுஸைன் رَحِمَهُ الله அவர்கள் தம் மகனுக்கு பின்வருமாறு புத்திமதி கூறுனார் :

என்னருமை மகனே ! உறவினர்களைத் துண்டித்து நடப்பவனுடன் சகவாசம் வைத்துக் கொள்ளாதீர். ஏனெனறால், அல்குர்ஆனில் மூன்று இடங்களில் அவன் சபிக்கப்பட்டுள்ளதை நான் பார்த்தேன்.

- உறவினர்களை துண்டித்து நடப்பவன் பவிகள் மற்றும் நஷ் டவாளிகளில் இருந்துமுள்ளவனாவான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَمَا يُضِلُّ بِهِ إِلاَّ الْفَاسِقِيْنَ الَّذِيْنَ يَنْقُضُوْنَ عَهْدَ اللهِ مِنْ بَعْدِ مِيْثَاقِهِ وَيَقْطَعُوْنَ مَا أَمَرَ اللهُ بِهِ أَنْ يُوْصَلَ وَيُفْسِدُوْنَ فِي الأَرْضِ أُولَئِكَ هُمُ الْخَاسِرُوْنَ ) البقرة : ٢٧,٢٦

இதன் மூலம் பாவிகளைத் தவிர வேறு எவரையும் அவன் வழிகேட்டில் விடுவதில்லை. இவர்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கையை உறுதிப்படுத்திய பின்னரும் அதை முறித்து, இணைக்கப்பட வேண்டும் என அல்லாஹ் கட்டளை இட்ட (இரத்த பந்தத்)தை துண்டித்து, பூமியில் குழப்பம் விளைவிக்கின்றனர். இவர்களே நஷ்டவாளர்கள். 2 : 26, 27.

வழிகெட்டவர்கள்,நஷ்டவாளிகள் மற்றும் பாவிகளானவர்களின் பண்புகளில் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என அல்லாஹ் கட்டளை இட்டதை துண்டித்து நடப்பதை அல்லாஹ் உள்ளடக்கியுள்ளான். அவற்றில் உறவுகளை இணைக்காது துண்டித்து நடப்பதும் அடங்கும்.

- உறவினர்களைத் துண்டித்து நடப்பவனுக்கு இவ்வுலகில் தண்டனை அவசரமாகக் கிடைப்பதோடு, மறுமை நாளின்

  தண்டனையும் மிகக் கடுமையாகவும் நிரந்தமானதாகவும் இருக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

அல்லாஹ் மறுமை நாளில் தண்டனையை சேமித்து வைப்பதோடு, குற்றவாளிக்கு இவ்வுலகிலேயே தண்டனையை மிகவும் அவசரமாக கொடுப்பதற்கு மிகவும் தகுதியான் குற்றமானது அநியாயம் மற்றும் உறவினர்களைத் துண்டித்து நடப்பதை விடவும் வேறு எதுவுமில்லை.

நூல்கள் : அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜா.

இந்த ஹதீஸின் அர்த்தத்தை இன்று நடைமுறையில் கண்கூடாகக் காணக்கூடியதாகவே உள்ளன. உறவைத் துண்டித்து நடப்பவ ன் தனது வாழ்வில் பதற்றநிலையிலும், கலக்கமான நிலையிலும் இருக்கின்றான், அவனது இரணத்தில் அல்லாஹ் பரகத் செய்ய மாட்டான், மேலும் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவனாகவும், மனிதர்க ளுக்கு மத்தியில் நிலையற்றவனாகவும், மனநிம்மதியை இழந்தவ னாகவுமே அவன் காணப்படுகின்றான்.

- உறவினர்களைத் துண்டித்து நடப்பவனுக்கு சுவர்க்கம் கிடையாது.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

உறவினர்களைத் துண்டித்து நடப்பவன் சுவர்க்கத்தில் நுழைய மாட்டான்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

உறவுகளைத் துண்டித்து நடப்பதை விட்டும் அல்லாஹ் நம் எல்லோரையும் பாதுகாப்பானாக !

عُقُوْقُ الْوَالِدَيْنِ

## பெற்றோரை வேதனைப்படுத்தல்

பெற்றோரை வேதனைப்படுத்துவது பெரும் பாவங்களில் ஒன்றாகும் இதனை குர்ஆனும், ஹதீஸு ம் எச்சரித்துள்ளது. எனவே, ஒவ்வொ ரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் தங்களது பெற்றோருக்கு நன்மை மற்றும் உபகாரம் செய்வதும், அவர்களை மகிழவைப்பதில் மிக ஆர்வம் செலுத்துவதும் மேலும் அவர்களை வேதனைப்படுத்து தை விட்டும் எச்சரிக்கையாக இருப்பதும் கட்டாயக் கடமையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَقَضَى رَبُّكَ أَنْ لاَ تَعْبُدُوا إِلاَّ إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا إِمَّا يَبْلُغَنَّ عِنْدَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلاَهُمَا فَلاَ تَقُلْ لَهُمَا أُفٍّ وَلاَ تَنْهَرْهُمَا وَقُلْ لَهُمَا قَوْلاً كَرِيمًا ۞ وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُلْ رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيْرًا )

الإسراء : ٢٣. ٢٤.

உமது இரட்சகன் தன்னையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ உம்மிடம் முதுமையை அடைந்து விட்டால், அவர்களை நோக்கி உஃப் (சீ) எனக் கூறவோ அவ்விருவரையும் விரட்டவோ வேண்டாம் அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக! ۞ கருணையுடன் பணிவு எனும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக! என் இரட்சகனே ! சிறுவனாக இருந்த போது அவ்விருவரும் என்னைப் பராமரித்தது போன்று அவ்விருவருக்கும் நீ கருணை புரிவாயாக ! எனக் கூறுவீராக! 17 : 23,24.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ) النساء : ٣٦.

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். இன்னும் பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். 4 : 36.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيْرُ ) لقمان : ١٤.

நீ எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக ! என்னிடமே மீளுதல் உள்ளது. 31 : 14.

பெற்றோருடன் நன்றியுடன் நடப்பதும், அவர்களுக்கு நன்மை செய் வதும் கடமையாகும்.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَوَصَّيْنَا الإنْسَانَ بِوَالِدَيْهِ إِحْسَانًا ) الأحقاف : ١٥.

மனிதன் தனது பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென நாம் உபதேசித்தோம். 46 : 15.

செயல்களில் மிகச் சிறந்தது எது ? என நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவதாகும் எனக் கூறினார்கள். பின்னர் எது ? எனக் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் பெற்றோருக்கு நன்மை செய்வதாகும் எனக் கூறினார்கள். பின்னர் எது ? எனக் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதாகும் எனக் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

பேற்றோருக்கு நன்மை செய்வது மிக முக்கியமான கடமையாகும்

என்பதை நபி ﷺ அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

அபூபக்ரா நுஃபைவு பின் ஹாரிஸ் رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள் : பாவங்களில் மிகப் பெரும் பாவம் எது என நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா என நபி ﷺ அவர்கள் மும்முறை கேட்டார்கள். நாங்கள் 'ஆம்' (அறிவித்துத் தாருங்கள்) இறைத்தூதர் அவர்களே ! என்று கூறினோம். இறைவனுக்கு இணைவைப்பதும், பெற்றோரை வேதனை செய்வதும் (பாவங்களில் மிகப் பெரும் பாவமாகு

ம்) எனக் கூறினார்கள். அப்போது நபி ﷺ அவர்கள் சாய்ந்
து உட்கார்ந்து இருந்தார்கள். பிறகு எழுந்து அமர்ந்து கூறினார்க
ள் : அறிந்து கொள்ளுங்கள். பொய் உரைப்பதும், பொய் சாட்சி
கூறுவதும் கூட (பாவங்களில் பெரும் பாவமாகும்).

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

பெற்றோரை வேதனை செய்வதை இந்த ஹதீஸில் அல்லாஹ்வுக்கு
இணைவைப்பதுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளதை அவதானிக்க
லாம். எனவே, பெற்றோரை வேதனை செய்வதின் குற்றத்தின்
கொடூரம் மற்றும் அது பெரும் பாவங்களில் ஒன்றாகும் என்பதையும்
இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

ஒரு மனிதர் தன் பெற்றோரைத் திட்டுவது பெரும் பாவங்களில்
அடங்கியதாகும். அப்போது ஒரு மனிதன் தன் பெற்றோரைத் திட்டு
வானா ? இறைத்தூதர் அவர்களே ! எனக் கேட்கப்பட்டது. அதற்
கவர்கள் ஆம், ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் தந்தையைத்
திட்டுகிறான். அவன் இவன் தந்தையைத் திட்டுகிறான். ஒருவன்
மற்றொருவனின் தாயைத் திட்டுகிறான். அவன் இவன் தாயைத்
திட்டுகிறான். (இது தன் தாய், தந்தையைத் திட்டுவது போன்றாகு

ம்). எனக் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

எனவே, பெற்றோருக்கு நன்மை செய்தல் மற்றும் அவர்களுக்கு
உபகாரம் புரிதல் போன்றவற்றில் கரிசனை காட்டுவதும், சொல்லி
னாலோ அல்லது செயலினாலோ அவர்களை வேதனை செய்வதை
விட்டும் மிகமிக எச்சரிக்கையாக இருப்பது அனைத்து முஸ்லிம்கள்
மீதும் கடமையாகும்.

**பெற்றோர் உயிருடன் இருக்கும் போதும் அவர்கள் மரணித்த பின்ன ரும் அவர்களுக்கு நன்மை செய்யும் வழிகளில் சில :**

அவர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களுக்கு உபகாரம் செய்தல், அவர்கள் தேவையுள்ளவர்களாக இருப்பின் அவர்களுக்கு செலவு செய்தல், அல்லாஹ்வுக்கு மாறுபாடு இல்லாத நன்மையான காரியங்களில் அவர்கள் சொல்வதைக் கேட்டு, அவர்களுக்கு கட்டு ப்பட்டு நடத்தல்,அவர்களுடன் பணிவாக நடந்து கொள்ளல், அவர் களின் சத்தத்திற்கு மேல் சத்தத்தை உயர்த்தாதிருத்தல்,அவர்களு க்கு தீங்கு ஏற்படும் காரியங்களை விட்டும் அவர்களைப் பாதுகா த்தல் மற்றும் இவை போன்ற நன்மையின் வழிகளால் அவர்களுக்கு நன்மை செய்தல்.

அவர்கள் மரணித்ததன் பின் அவர்களுக்கு நன்மை செய்வது எவ் வாறு என்பதை பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

ஒருவர் நபி ﷺ அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் திருத்தூ தர் அவர்களே ! எனது பெற்றோரின் மரணத்தின் பின் நான் அவர் களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகள் ஏதும் உண்டா ? எனக் கேட்டார். அதற்கு ஆம், அவர்களுக்காக அல்லாஹ்விடம் துஆச் செய்தல், அவர்களின் குற்றங்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன் னிப்புத் தேடல், அவர்களின் உடன்படிக்கைகளை நிறைவேற்றி வைத்தல், அவர்களின் நண்பர்களை கண்ணியப்படுத்தல் மற்றும் அவர்கள் வழிவந்த நெருங்கிய உறவுகளைச் சேர்ந்து நடத்தல்

என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்

நூல் : இப்னு மாஜா.

## سُوْءُ الظَّنِّ

## சந்தேக எண்ணம்

ஒரு சில மனிதர்களிடம் மிக மோசமான ஒரு குணம் காணப்படுகிறது. அதுதான் சந்தேக எண்ணம். சிலவேளை அவர்கள் இதனை புத்திசாலித்தன்மை மற்றும் விவேகத்தின் ஒரு வகை எனவும் எண்ணுகின்றனர். அப்படியேதும் அதில் கிடையாது. மாறாக, அது முழுமையாகத் தீமையாகும். இதனைவிடவும் மோசமானது என்னவென்றால், மற்றவர்களைப் பற்றி சந்தேக எண்ணம் கொள்ளாதவர்களைக் குறை கூறுவதோடு மாத்திரம் நின்றுவிடாது மற்றவர்களில் நல்லெண்ணம் வைப்பதை ஒரு வகையான மடமையாக கருதுமளவுக்கு அவர்களின் சிலரது நிலையுள்ளது. ஆனால், இஸ்லாமாகிய எமது தூய மார்க்கம் நாம் மற்றவர்கள் பற்றி நல்லெண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என எமக்கு அழைப்பு விடுக்கிறது. எனவே, தீய மனிதன்தான் மற்றவர்கள் பற்றியும் சந்தேகமாக எண்ணுகின்றான். ஒரு முஃமினான நல்ல மனிதர் எப்போதும் மற்றவர்களைப் பற்றி நல்லதாகவே எண்ணுகின்றான். மேலும் அவர்களின் வெளிப்படை குணங்களுக்கு ஏற்றாற் போல் அவர்களுடன் நடந்து கொள்கின்றான். அவர்களின் அந்தரங்கத்தை அல்லாஹ்விடமே ஒப்படைத்து விடுகின்றான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَمَا لَهُمْ بِهِ مِنْ عِلْمٍ إِنْ يَتَّبِعُونَ إِلاَّ الظَّنَّ وَإِنَّ الظَّنَّ لاَ يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا )
النجم : ٢٨.

அவர்களுக்கு இதுகுறித்து எவ்வித அறிவும் இல்லை. அவர்கள் வெறும் யூகத்தையே பின்பற்றுகின்றனர். நிச்சயமாக வெறும் யூகம் உண்மைக்கு எந்தப் பயனும் தராது. 53 : 28.

எனவே, வெறும் சந்தேகத்தின் பேரிலோ அல்லது ஒரு நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டோ மற்றவர்களின் மீது சந்தேக எண்ணம் கொள்வது எந்தொருவருக்கும் கூடாது. ஏனெனில், அதுவே பொய்யாகும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

( إِيَّاكُمْ وَالظَّنَّ فَإِنَّ الظَّنَّ أَكْذَبُ الْحَدِيْثِ ) متفق عليه.

சந்தேக எண்ணம் கொள்வதை உங்களுக்கு நான் எச்சரிக்கிறேன் நிச்சயமாக சந்தேகமாகிறது மிகப் பெரும் பொய்யான பேச்சாகும்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

மு∴மின்கள் தங்களது சகோதர மு∴மின்களைப் பற்றி சந்தேக எண்ணம் கொள்ளக் கூடாது என அல்லாஹு தஆலா அவர்களை தடுத்துள்ளான்.

( يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيْرًا مِنَ الظَّنِّ إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ ) الحجرات : ١٢.

நம்பிக்கை கொண்டோரே ! எண்ணங்களில் அதிகமானதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக எண்ணங்களில் சில பாவமாகும். 49 : 12.

**சந்தேக எண்ணம் பற்றி சில கருத்துக்கள் :**

1-ஸு ∴ப்யானுஸ்ஸவ்ரீ رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

சந்தேகமான எண்ணத்தை வாயினால் மொழிந்தால், குற்றம் கிடைக்கும். அதனை வாயினால் மொழியாவிட்டால் குற்றம் ஏதும் கிடையாது. நூல் : திர்மிதி.

2-இமாம் இப்னுல் ஜவ்ஸீ رَحِمَهُ الله அவர்கள் ஸு ∴ப்யானுஸ்ஸவ்ரீ அவர்களின் இந்தக் கூற்றை த∴ப்ஸீர்கலை அறிஞர்களின் வழியாக எடுத்துக் கூறியபின் இவ்வாறு கூறுகின்றார் :

வாயினால் மொழியாவிட்டாலும், வெறும் சந்தேக எண்ணத்திற்காக குற்றம் எதுவும் கிடைக்காது என்பது சில அறிஞர்களின் கருத்தாகும்.

3-அதிகமான உலமாக்களின் கருத்தை இமாம் குர்துபீ رَحِمَهُ الله அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :

எவரது வெளிப்படை நல்லதாகத் தோன்றுகிறதோ அவர் பற்றி சந்தேக எண்ணம் கொள்வது கூடாது. எவரது வெளிப்படை மோசமானதாக உள்ளதோ அவர் பற்றி சந்தேக எண்ணம் கொள்வதில் தப்பேதும் கிடையாது.

4-நல்லெண்ணம் உள்ளத்திற்கு அமைதியும்,மனதிற்கு நிம்மதியுமாகும்.

5-உமர் رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள் :

உனது மு.்.மினான சகோதரனின் வாயிலிருந்து வெளியான வார்த்தைக்கு நல்ல, சாதகமான விளக்கம் ஏதும் கொடுக்க முடியுமாக இருப்பின், அந்த வார்த்தை பற்றி சந்தேக எண்ணம் கொண்டு விடாதீர்.

6-இமாம் இப்னு ஸீரீன் رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள் :

உனது (முஸ்லிமான)சகோதரன் பற்றி ஏதும் தகவல் கிடைத்தால்

அதற்கு ஒரு சாதகமான காரணத்தை தேடிக்கொள். அவ்வாறு ஏதும் காரணம் கிடைக்காவிட்டால்,அவனுக்கு ஏதும் தக்க காரணமிருக்கலாம். ஆனால், எனக்கு அது தெரியாது என உனக்குள் கூறிக்கொள்.

7-இமாம் ஷா.்.பிஈ رَحِمَهُ الله அவர்கள் ஒரு முறை நோயுற்றிருந்தார்கள். அப்போது அவரை நலம் விசாரிக்க வந்த ஒருவர் அல்லாஹ் உங்கள் பலவீனத்தை இன்னும் உறுதிப்படுத்துவானாக! எனக் கூறினார். இதனைச் செவியுற்ற இமாம் அவர்கள் எனது பலவீனத்தை இன்னும் அவன் அதிகரித்து விட்டால், நான் மரணமடைந்து விடுவேன் என்றார்கள். இதனைச் செவியுற்ற அவர் அல்லாஹ்வின் மீது ஆணையாக இதனை நான் நல்ல நோக்கத்

திலேயே கூறினேன் என்றார். அதற்கு இமாம் அவர்கள், நீங்கள் என்னைத் திட்டியிருந்தால் கூட நல்ல நோக்கத்திலேயே அதனை செய்திருப்பீர்கள் என நான் நன்கு அறிவேன் என்றார்கள்.

உண்மையிலேயே நல்லெண்ணம் என்பது இவ்வாறுதான் இருக்க வேண்டும். மேலோட்டமாக நல்லெண்ணம் கொள்வதற்கு காரணமே தோன்றாத சந்தர்ப்பத்திலும் இமாம் அவர்கள் நல்லெண்ணம் கொண்டார்களே இது பெரும் எடுத்துக்காட்டாகும்.

8-ஸஈத் இப்னு ஜுபைர் رَحِمَهُ اللهُ அவர்கள் பின்வருமாறு பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள் :

யா அல்லாஹ்! உண்மையாக உன் மீது காரியங்களை பரைசாட்டும் தன்மையையும், உன்னைப் பற்றிய நல்லெண்ணத்தையும் நான் உன்னிடம் வேண்டுகிறேன்!

கைஸமா அவர்கள் கூறியதாக ஸுலைமான் அவர்களைத் தொட்டும் ஃபுழைல் இப்னு இயாழ் அவர்கள் கூறுகிறார்கள் :

வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் அவனைத் தவிர வேறு எவனும் கிடையாதோ அவன் மீது ஆணையாக, அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் கொள்வதைவிடவும் முஃமினான ஒரு அடியானுக்கு வேறு சிறந்த கொடையேதும் கொடுக்கப்படவில்லை.

ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் ஓடுமிடமெல்லாம் ஓடிக் கொண்டிருக்கின்றான். முஃமின்களுக்கு மத்தியில் பிளவையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதில் அயராது ஈடுபட்டுள்ளான். எனவே, மனிதர்களைப் பற்றிய நல்ெண்ணம் கொள்ளும் பண்பை மனிதுக்குள் ஏற்படுத்துவதற்கு மனதை பக்குவப்படுத்த பெரும் பயிற்சியும், போராட்டமும் மனதோடு செய்தல் அவசியமாகும்.

ஷைத்தான் தீய எண்ணத்தை ஏற்படுத்துவதை தடுக்கும் பெரும் மிகப்பெரும் காரணி என்னவென்றால், முஸ்லிம்களைப் பற்றி எப்போதும் நல்லெண்ணம் கொள்வதாகும்.

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : நல்லெண்ணம் கொள்வது நல்வணக்கத்தில் நின்றுமுள்ளதாகும்.

நூல்கள் : ஹாகிம், அபூதாவூத், அஹ்மத்.

## الْغُلُوْلُ

## மோசடி செய்தல்

அல்லாஹு தஆலா சொத்துசெல்வங்களைத் தனது அடியார்களுக்கு சோதனையாக வைத்துள்ளான். அவைகளை சம்பாதிக்கும் வழிகளை அவர்களுக்கு ஆகுமாக்கியுள்ளான். அவைகளில் எது அனுமதிக்கப்பட்டது, எது அனுமதிக்கப்படாதது என்பவற்றை தெளிவுபடுத்தியுள்ளான். சொத்துக்களை சம்பாதிப்பதை அடிப்படையிலேயே ஆகு மானதாக ஆக்கியுள்ளான். அவற்றில் அனுமதிக்கப்படாதவைகளில் ஈடுபடுவோருக்கு மறுமை நாளில் தண்டனையையும், இழிவையும் சித்தப்படுத்தி வைத்துள்ளான்.

மோசடி என்பது : மற்றவர்களின் பொருள் மற்றும் உரிமைகளை முறையின்றி எடுப்பதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَمَنْ يَغْلُلْ يَأْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيَامَةِ ) آل عمران : ١٦١.

யார் மோசடி செய்கின்றாரோ, அவர் செய்த மோசடிப் பொருளுடன் மறுமையில் வருவார். 3 : 161.

உரிமையின்றி எடுக்கப்பட்ட பொருட்கள் ஒட்டகமாக, மாடாக, பணம், சொத்துகளாக மற்றும் வேறு எவையாக இருந்தாலும், மேலும்,எவ்வளவு அதிமாகவும், பல்வேறுபட்டதாகவும் இருந்தாலும், அவற்றை எடுத்தவன் தனது கழுத்தில் சுமந்துகொண்டு எல்லாப் படைப்புகளுக்கு மத்தியிலும் மறுமை நாளில் வருவான். அதனால், அவனுக்கு அந்நாளில் இழிவும் கேவலமும் ஏற்படும்.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு நாள் எமக்கு மத்தியில் எழுந்திருந்து மோசடியைப் பற்றியும்,அதன் கொடூரத்தைப் பற்றியும் உபதேசம் செய்தார்கள். அதன் பின்னர் கூறினார்கள் : மறுமை நாளில் ஒட்ட கம் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உங்களில் ஒருவர் அதனை தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது. மேலும், மறுமை நாளில் குதிரை சத்தமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உங்களில் ஒருவர் அதனை தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது. மேலும், மறுமை நாளில் ஆடு சத்தமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உங்களில் ஒருவர் அதனை தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது. மேலும், மறுமை நாளில் ஒரு மனிதர் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உங்களில் ஒருவர் அவனை தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்

கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது. மேலும், மறுமை நாளில் பிடவைத் துண்டு அசைந்து கொண்டிருக்கும் நிலையில் உங்களில் ஒருவர் அதனை தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்து விட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது. மேலும், மறுமை நாளில் தங்கம் வெள்ளியை உங்களில் ஒருவர் தனது கழுத்தில் சுமந்து கொண்டு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பார், அதற்கு நான் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது, நானோ உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன் என்று கூறும் நிலையை நான் காணக்கூடாது.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

நபி ﷺ அவர்கள் விளங்கப்படுத்துவது, உபதேசம் செய்வது மற்றும் எச்சரிப்பது கொண்டும் மனிதர்கள் மீது ஆதாரம் நிலைநாட்டப்பட்டுவிட்டது. எனவே, அற்பமாக இருந்தாலும் கூட மோசடி செய்வதை அலட்சியமாக எண்ணிவிடக் கூடாது. மறுமை நாளின் இழிவு, கேவலம் ஆகியவற்றை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அப்துல்லாஹ் பின் அம்ர் رضي الله عنهما அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபி ﷺ அவர்களின் சாமான்களின் மீது (அவைகளைப் பாதுகாக்கும் பணியில்) ஒரு மனிதர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு கிர்கிரா என்று சொல்லப்படும். அவர் மரணமடைந்தார். அப்பொழுது அவர் நரகத்தில் உள்ளார் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

உடனே மக்கள் அவரிடம் சென்று பார்த்தார்கள். அப்பொழுது அவர் திருடி வைத்திருந்த ஒரு நீண்ட மேலங்கி அவரிடமிருப்பதைப் பெற்றுக் கொண்டார்கள்.

நூல் : புகாரி.

எனவே, மோசடி செய்வதை விட்டும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**மோசடியின் வகைகளில் சில :**

- கனீமத் பொருட்களிலிருந்து எடுப்பது. இது மாபெரும் மோசடியாகும்.
- தொழிலுக்காக நியமிக்கப்பட்டவர்கள் அவர்களிடம் வரும் பொது மக்களிடமிருந்து அன்பளிப்புகளை எடுத்தல்.
- பொதுச் சொத்துக்களை அபகரித்தல்.
- அசையும்பொருள் மற்றும் அசையாப் பொருள் போன்றவற்றை முறையற்ற விதத்தில் சூரையாடல்.

## الشَّمَاتَةُ

## <u>மற்றவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைக் கண்டு மகிழ்ச்சியடைதல்</u>

சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமை போன்ற உயர் அர்த்தங்களின் மீது முஸ்லிம்களை பயிற்றுவித்து,பண்படுத்துவதில் இஸ்லாம் பேரா வால் கொள்கிறது. இந்த உறவுக்கு முரண்படுகின்ற அல்லது அதில் குறையை ஏற்படுத்துகின்ற அனைத்தையும் விட்டும் முஸ்லிம்களை இஸ்லாம் எச்சரிக்கிறது.

இந்தப் புனித உறவைக் கெடுக்கும் தீய குணங்களில் ஒன்றுதான் ஒரு முஸ்லிமுக்கு உலகரீதியாகவோ அல்லது மார்க்கரீதியாகவோ ஏதேனும் சோதனை ஏற்படும் போது அதனைப் பார்த்து மற்ற முஸ்லிம் மகிழ்ச்சியடைவது. இது ஒருபோதும் ஒரு முஸ்லிமுக்கு உகந்த பண்பு கிடையாது. மாறாக, இது இஸ்லாத்தின் எதிரிகளின் பண்பு. இதனை அல்லாஹு தஆலா எச்சரித்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَإِنْ تَمْسَسْكُمْ حَسَنَةٌ تَسُؤْهُمْ وَإِنْ تُصِبْكُمْ سَيِّئَةٌ يَفْرَحُوا بِهَا وَإِنْ تَصْبِرُوا وَتَتَّقُوا لاَ يَضُرُّكُمْ كَيْدُهُمْ شَيْئًا إِنَّ اللهَ بِمَا يَعْمَلُونَ مُحِيطٌ ) آل عمران : ١٢٠.

உங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அவர்களை வருந்தச் செய்கின்றது. உங்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அது குறித்து அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். நீங்கள் பொறுமையாக இருந்து, (அல்லாஹ்வை) அஞ்சி நடந்தால் அவர்களின் சூழ்ச்சி உங்களுக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்காது, நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை சூழ்ந்தறிபவனாவான். 3 : 120.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنْ تُصِبْكَ حَسَنَةٌ تَسُؤْهُمْ وَإِنْ تُصِبْكَ مُصِيبَةٌ يَقُولُوا قَدْ أَخَذْنَا أَمْرَنَا مِنْ قَبْلُ وَيَتَوَلَّوا وَهُمْ فَرِحُونَ ) التوبة : ٥٠.

உமக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அவர்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றது. உமக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால், நிச்சயமாக நாம் இதற்கு முன்னரே எமது விடயத்தில் எச்சரிக்கையாக இருந்து கொண்டோம் என்று கூறி மகிழ்ச்சியடைந்தவர்களாகத் திரும்பிச் செல்கின்றனர். 9 : 50.

நபி ﷺ அவர்கள் தனக்குக் கஷ்டம் ஏற்பட்டால், அதனையிட்டு விரோதிகள் மகிழ்ச்சியடைவதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுபவர்களாக இருந்தார்கள்.

சோதனைகளின் கஷ்டங்களை விட்டும், துர்ப்பாக்கியத்தை அடைந்து கொள்வதை விட்டும், தீய விதியை விட்டும், எதிரிகளின் மகிழ்ச்சியை விட்டும் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுபவர்களாக இருந்தார்கள் என அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : புகாரி.

முஸ்லிம்களின் சிலரது மகிழ்ச்சியினால் மற்ற சிலர் மகிழ்ச்சியடையக் கூடியவர்களாகவும், அவர்களின் சிலரது துன்பத்தினால் மற்றசிலர் துன்பத்தை உணர்பவர்களாகவும் இருக்கும் நிலையைப் பயிற்றுவிப்பது ஒரு முஸ்லிம் சமூகத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

ஒரு முஸ்லிமானவன் தனது சகோதர முஸ்லிமுக்கு நேர்ந்த துன்பத்தினால் மகிழ்ச்சி அடையக்கூடியவனாக இருந்தால், அதே போன்றொரு சோதனையின் மூலம் அல்லாஹ் அவனைச் சோதனைக்குட்படுத்துவான்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

உன் சகோதரரின் கஷ்டத்தைக் கண்டு, உன்னுடைய மகிழ்ச்சியை

வெளிப்படுத்தாதீர். அப்படிச் செய்தால், அல்லாஹ் அவர் மீது கிருபை புரிவான், உன்னைச் சோதித்து விடுவான்.

நூல் : திர்மிதி.

ஒருவர் தான் செய்த குற்றத்துக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடி, அவன் பக்கம் திரும்பிய பின்பு, அவன் செய்த குற்றத்தை கூறிக்காட்டி அவனை குறைகூறுவதும் இத்தீய குணத்தில் அடங்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

எவர் தனது சகோதரன் செய்த குற்றத்தை கொண்டு அவரை குறைகூறுகின்றாரோ, அதே குற்றத்தை இவர் செய்யும் வரை மரணிக்க மாட்டார்.

நூல் : திர்மிதி.

அல்லாஹு தஆலா அவனது மார்க்கத்தை பற்றிப்பிடித்து ஒற்றுமையுடன் இருக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

( وَاعْتَصِمُوا بِحَبْلِ اللهِ جَمِيْعًا وَلاَ تَفَرَّقُوا ) آل عمران : ١٠٣.

நீங்கள் அனைவரும் (குர்ஆன் எனும்) அல்லாஹ்வின் கயிற்றைப் பலமாக பற்றிப்பிடியுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள். 3 : 103.

மற்றவருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைக் கண்டு, மகிழ்ச்சியடைவது இஸ்லாமிய சகோதரத்துவத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, அதனை மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## الْخِيَانَةُ

## நம்பிக்கைத் துரோகம்

ஒருவரை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளை பேணிப் பாதுகாக்குமாறு இஸ்லாம் தூண்டுவதோடு,அதனை வீணாக்குவதை தடுக்கிறது மேலும், அதனை உரியவர்களுக்கு ஒப்படைக்குமாறும் கட்டளையிடுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( إِنَّ اللهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الأَمَانَاتِ إِلَى أَهْلِهَا ) النساء : ٥٨.

அமானிதங்களை அதற்குரியோரிடம் ஒப்படைத்து விடுமாறு நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான். 4 : 58.

இமாம் இப்னு கஸீர் رَحِمَهُ الله அவர்கள் கூறுகிறார்கள்:

நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்ட பொருட்களை அதனுடையவர்களுக்கு திருப்பிக் கொடுக்குமாறு அல்லாஹு தஆலா கட்டளையிடுகின்றான்.

பார்க்க : தஃப்ஸீர் இப்னு கஸீர்.

அல் ஹஸன் இப்னு ஸமுரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

உன்னை நம்பியவருக்கு நம்பகத் தன்மையை நிறைவேற்றுவாயாக, உனக்கு மோசம் செய்தவருக்கு நீர் மோசம் செய்யாதீர்.

நூல்கள் : அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, நாஸாஈ, இப்னு மாஜா.

அமானிதங்கள் எனும் போது அடியார்கள் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய, தொழுகை, நோன்பு, ஸகாத், குற்றப்பரிகாரங்கள், நேர்ச்சை மற்றும் இவையல்லாத கடமைகளும் மற்றும் அடியார்களில் சிலர் அடியார்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் இதில் அடங்கும். எனவே, அல்லாஹு தஆலா இவையனைத்தையும் நிறை வேற்றுமாறு கட்டளையிடுகின்றான். எவர் இவற்றை இவ்வுலகில் நிறைவேற்றவில்லையோ, அதனை கியாமத் நாளில் அவரிடமிருந்து எடுக்கப்படும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

கியாமத் நாளில் உரிமைகளை, உரிமை உடையவர்களுக்கு நிறைவேற்றப்படும். எதுவரையெனில் கொம்பு இல்லாத ஆட்டுக்காக கொம்புள்ள ஆட்டிடம் (அதனை அது முட்டியிருந்தால்)பழி வாங்கப் படும்.

நூல்கள் : முஸ்லிம், அஹ்மத்.

எனவே, அமானிதத்தை வீணாக்குவது பெரும் குற்றமாகும். மேலும் அதனை பாதுகாத்து, உரிய முறையில் நிறைவேற்றுமாறு மார்க்கம் ஏவியுள்ள கட்டளைக்கு மாற்றமுமாகும். நம்பிக்கைத் துரோகம் என்பது நம்பப்பட்ட ஒருவர் உண்மையாக நடந்து கொள்ளாதிருத்தலாகும். அதாவது, தன்மை நம்பி பொருளை ஒப்படைத்த ஒருவருக்கு நம்பகமற்றதாகவும், அந்தப் பொருளை வீணாக்கியும் மற்றும் அதனுடையவருக்கு மோசடி செய்தும் நடந்து கொள்வதாகும்.

இமாம் குர்துபீ رحمه الله அவர்கள் கூறுகிறார்கள் :

துரோகம் என்பது மோசடி செய்தல் மற்றும் ஒன்றை மறைத்துக் கொள்ளலாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( يَعْلَمُ خَائِنَةَ الأَعْيُنِ وَمَا تُخْفِي الصُّدُوْرُ ) غافر : ١٩.

கண்களின் மோசடியையும், உள்ளங்கள் மறைத்து வைத்திருப்பவற்றையும் அவன் நன்கறிவான். 40 : 19.

அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள் நபி ﷺ அவர்கள் பின்வருமாறு துஆச் செய்பவர்களக இருந்தார்கள்

اللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْجُوْعِ فَإِنَّهُ بِئْسَ الضَّجِيْعُ وَمِنَ الْخِيَانَةِ فَإِنَّهَا بِئْسَتِ الْبِطَانَةُ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஜூ இ ∴பஇன்னஹு பி∴ஸல்ழஜீஉ, வமினல் கியானதி ∴பஇன்னஹா பி∴ஸதில் பிதானது

யா அல்லாஹ்! பசியின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நிச்சயமாக அது கெட்ட தோழனாகும். மேலும் மோசடி செய்வதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நிச்சயமாக அது மறைந்திருக்கும் கெட்ட பண்பாகும்.

நூல் : நஸாஈ.

யாராவது ஒருவர் நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தால், அவர் உண்மையான முறையில் அல்லாஹ்விடம் தௌபாச் செய்து மீண்டு கொள்ள வேண்டும். உண்மையான முறையில் தௌபாச் செய்பவர் மற்றவர்களுடைய பொருட்களை அவர்களிடம் ஒப்படைத்து விடுவார்

( وَمَنْ يُشَاقِقِ الرَّسُوْلَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّه مَا تَوَلَّى وَنُصْلِه جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيْرًا ) النساء : ١١٥.

யார் தனக்கு நேர்வழி தெளிவான பின்னரும் இத்தூதருடன் முரண்பட்டு, நம்பிக்கை கொண்டோரின் வழி அல்லாததைப் பின்பற்றுகின்றானோ அவன் செல்லும் வழியிலேயே அவனைச் செல்லவிட்டு அவனை நாம் நரகத்தில் நுழைவிப்போம். செல்லுமிடத்தில் அது மிகக் கெட் டதாகும். 4 : 115.

மேற்கூறப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனத்தின் விரிவுரையின் கீழ் இமாம் இப்னு ஜரீர் அத்தபரீ அவர்கள் தனது த.ஃப்ஸீரில் பின்வருமாறு கூறுகிறார்கள் :

( وَلاَ تَكُنْ لِلْخَائِنِيْنَ خَصِيْمًا ) النساء : ١٠٥.

மோசடிக்காரர்களுக்காக வாதிடுபவராக நீர் ஆகிவிட வேண்டாம்.

4 : 105.

இத்திருவசனத்தில் கூறப்பட்டிருக்கும் மோசடிக்காரர்களின் விஷயத்திலேயே அந்தத் திருவசனம் இறங்கியது. அதாவது து:.மா இப்னுல் உபய்ரிக் என்பவன் தெளபாச் செய்து மீள மறுத்து, ரஸூ லுல்லாஹி ﷺ அவர்களையும் அவர்களது மார்க்கத்தையும் விட்டும் பிரிந்து, இஸ்லாத்திலிருந்து மதம்மாறி, மக்காவில் இருக்கும் சிலைவணங்கிகளான முஷ்ரிகீன்களுடன் சென்று இணைந்து கொண்ட போதே இத் திருவசனம் இறங்கியது.

நம்பிக்கையாக நடந்து கொள்வது மு:.மின்களின் மிக முக்கியப் பண்புகளில் ஒன்றாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

( وَالَّذِيْنَ هُمْ لأَمَانَاتِهِمْ وَعَهْدِهِمْ رَاعُوْنَ ) المؤمنون : ٨.

மேலும், அவர்கள் தமது அமானிதங்களையும், தனது வாக்குறுதியையும் பேணுவார்கள். 22 : 8.

துரோகம் செய்வது முனா:.பிக்கள் எனப்படும் நயவஞ்சகர்களின் மிக முக்கியப் பண்பாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ : ( آيَةُ الْمُنَافِقِ ثَلاَثٌ : إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ ) رواه البخاري ومسلم

நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும் : அவன் பேசினால் பொய்யுரைப்பான். அவன் வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். அவனை நம்பினால் மோசம் செய்வான் என ரஸூ லுல்லாஹி

ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்.

## الرِّيَاءُ

## முகஸ்துதி

முகஸ்துதி கொல்லை நோய்கள் மற்றும் அழிவின் வியாதிகளில் ஒன்றாகும். இம்மை, மறுமை ஈருலக நஷ்டமும் இதில் உள்ளது. எனவேதான், இதன் அபாயத்தை நபிமார்களும் ரஸூல்மார்களும் உணர்த்தினார்கள். அல்லாஹ்வை அஞ்சிநடக்கும் முத்தகீன்கள் இதனை விட்டும் எச்சரித்தார்கள். நல்லவர்களான ஸாலிஹீன்கள் இதனைப் பயப்பட்டார்கள். இயலாதவர்கள், அறிவிலிகள் மற்றும் அல்லாஹ்வை மறந்து நடப்பவர்களே இதனைப் பயப்படாமல் இருந்தார்கள். இதுவே மறைவான இணைவைத்தலாகும். மிகமோசமான செயற்பாடாகும். இது ஒரு தீய அடியானிடமிருந்தே வெளிப்படும்.

முகஸ்துதி பல்வேறுப்பட படித்தரங்களைக் கொண்டதாகும். அவற்றில் சில மற்றும் சிலதை விடவும் மோசமானதாகும். அது பல இருள்களுடையதாகும். அவற்றில் சில மற்றும் சிலதை விடவும் அதிக இருளுடையதாகும். அது பல வகைகளாகும். அவற்றில் சில மற்றும் சிலதை விடவும் கடினமானதாகும்.

அல்லாஹ் அல்லாதவருக்காக ஒரு நல்ல அமலைச் செய்வது, பல வகைகளும், பிரிவுகளும் கொண்டதாகும். அவையனைத்துமே நிராகரிக்கப்பட்டவையாகும். அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா இணைவைப்பாளர்களின் இணையை விட்டும் மிகவும் தேவையற்றவனாகும்.

عَنْ أَبي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ : سَمِعْتُ رَسُوْلَ اللهِ ﷺ يَقُوْلُ : ( قَالَ اللهُ تَعَالَى : أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيْهِ مَعِي غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ) رواه مسلم.

அபூஹுரைரா رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன் : ( அல்லாஹுதஆலா கூறுகிறான் : நான் கூட்டாளிகளின் கூட்டை விட்டு மிகத் தேவையற்றவன். யார் ஒரு அமலைச் செய்து, அதில் என்னுடன், மற்றவரையும் கூட்டாக்கிக் கொள்வானேயானால், அவனையும் அவனின் இணைவைக்கும் செயலையும் விட்டு விடுவேன்).

நூல் : முஸ்லிம்.

**முகஸ்துதியின் வகைகள் :**

1- சுத்தமான முகஸ்துதி.

அதாவது,ஒரு நல்லமலை அறவே அல்லாஹ்வின் திரு முகத்தை எதிர்பாராது உலக நோக்கங்களுக்காவோ அல்லது சுயநலன்களுக்காகவோ செய்யப்படுவதாகும். இது சுத்தமா ன முனாஃபிக்களின் நிலையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

(وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا كُسَالَى يُرَاؤُوْنَ النَّاسَ وَلَا يَذْكُرُوْنَ اللهَ إِلاَّ قَلِيْلاً) النساء : ١٤٢.

அவர்கள் தொழுகைக்காக நின்றால் சோம்பேறிகளாகவும் மக்களுக்கு காட்டுவோராகவுமே நிற்கின்றனர். மேலும், அவர்கள் அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூறுகின்றனர். 4 : 142.

இமாம் இப்னு ரஜப் அல்ஹம்பலீ رَحِمَهُ اللهُ அவர்கள் கூறுகிறார்கள் :

இந்தவகை முகஸ்துதியானது, ஹஜ், ஸதகா, ஜிஹாத் மற்றும் இவை போன்ற பிறரையும் தாவக்கூடியதான அமல்களிலேயே ஏற்படு கின்றன. இது ஒரு முஃமினிடமிருந்து வெளிப்படுவது என்பது இல்லையென்ற அளவுக்கு மிகக் குறைவானதாகும்.

2- ஒரு நல்லமலைச் செய்வது கொண்டு அல்லாஹு தஆலா வின் திருமுகம் நாடப்படுவதோடு மற்ற மனிதர்களுக்கு காண்பிப்பதும் நாடப்படுவதாகும்.

இது இரு வகைப்படுகின்றன :

- ஒரு நல்லமலைச் செய்யத் துவங்கும் போதே முகஸ்து தி கலந்திருப்பது. இந்த சந்தர்ப்பத்தில் அந்த அமல் அறவே பயனற்றதாகும். இதனையே மேற்கூறப்பட்டுள்ள அபூஹுரைரா رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் ஹதீஸ் எடுத்துக் கூறுகிறது.
- ஒரு நல்லமலைச் செய்ய ஆரம்பித்த பின்னர் இடையில் முகஸ்துதி ஏற்படல். அப்போது இடையில் ஏற்பட்ட அந் த முகஸ்துதியை உடனே மனதை விட்டும் நீக்கிவிட்டா ல் அது அந்த அமலில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தா து. ஆனால், அந்த எண்ணத்தை அப்படியே பொருட்படு த்தாது விட்டு வைத்தால், அந்த அமல் அறவே பயனற் றதாக ஆகிவிடும் நிலை ஏற்படுமோ என்ற அச்ச நிலைக்கு உள்ளாகும்.

3- ஒரு நல்லமலை அல்லாஹ்வின் திருமுகத்துக்காக செய்ய ப்படுவதோடு, நற்கூலி மற்றும் நற்பயன்களை எதிர்பார்த்து

செய்தல். ஹஜ் செய்வதுடன் வேறு பல பயன்களை எதிர் பார்த்தல், ஜிஹாத் செய்வதுடன் கனீமத் பொருள்களை எதிர்பார்த்தல் மற்றும் இவை போன்றவைகள்.

இதனால் அந்த அமல் முற்றிலும் பயனற்றதாக மாறிவிடாது. மாறாக, இவரது நன்மையில் குறையேற்படும். ஹஜ்ஜை மாத்திரம் அல்லது ஜிஹாதை மாத்திரம் நாடியவருக்கு கிடைக்கும் நன்மையை விடவும் குறைவாகவே கிடைக்கும்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ قَالَ : ( إِنَّ الْغُزَاةَ إِذَا غَنِمُوا غَنِيمَةً تَعَجَّلُوا ثُلُثَيْ أَجْرِهِمْ فَإِنْ لَمْ يَغْنَمُوا شَيْئًا تَمَّ لَهُمْ أَجْرُهُمْ )

رواه مسلم

யுத்தவீரர்கள் கனீமத்களைப் பெற்றுக் கொண்டால், அவசரமாக அவர்களது நன்மையில் மூன்றில் இரண்டை அவர்கள் அடைந்து கொள்கின்றனர். அவர்கள் கனீமத் எதுவும் பெற்றுக் கொள்ளாவிட் டால், அவர்களது நன்மை அவர்களுக்கு பூர்த்தியாக கிடைக்கும் என நபி ﷺ அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : முஸ்லிம்.

ஆகையால் பொதுவாகவே, ஒரு முஸ்லிம் எப்போதும் தன்னையும் தனது அமல்களையும் சோதனை செய்து கொண்டே இருக்க வேண்டும். மேலும், தனது அந்தரங்கத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும், தனது நிய்யத்தை புதுப்பித்து தூய்மைப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இல்லாவிட்டால், ஷைத்தான் நிய்யத்திலும் அவனது விளையாட்டைக் காட்டி விடுவான்.

நபி ﷺ அவர்கள் பின்வரும் துஆவைச் செய்பவர்களாக இருந்துள்ளார்கள் :

اللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوْءًا أَوْ أَجُرَّهُ عَلَى مُسْلِمٍ ) رواه الترمذي

அல்லாஹு ம்ம இன்னீ அஊது பிக மின் ஷர்ரி நஃப்ஸீ வஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி, வஅன் அக்தரிஃப அலா நஃப்ஸீ ஸு அன் அவ் அஜு ர்ரஹு அலா முஸ்லிமின்.

யா அல்லாஹ் ! எனது ஆத்மாவின் தீமையை விட்டும், ஷைத்தானின் தீமையை விட்டும்,அவனது இணைவைத்தலை விட்டும் மேலும், என் மீது நானே தீமையை செய்து கொள்வதை விட்டும் அல்லது ஒரு முஸ்லிமுக்கு நான் தீமையை ஏற்படுத்துவதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

நூல் : திர்மிதி.

## பொருளடக்கம்


| | நற்குணங்கள் | |
|---|---|---|
| 1. | தூய எண்ணம் | 2 |
| 2. | அழகிய முன்மாதிரி | 5 |
| 3. | ஸலாமைப் பரத்துதல் | 7 |
| 4. | நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் | 11 |
| 5. | நம்பிக்கை | 17 |
| 6. | புன்முறுவல் | 27 |
| 7. | நற்சகுனம் | 31 |
| 8. | பணிவுத்தன்மை | 35 |
| 9. | கோபத்தை அடக்குதல் | 38 |
| 10. | நோயாளியை நலம் விசாரித்தல் | 44 |
| 11. | வாக்குறுதியை நிறைவேற்றுதல் | 50 |

| | | |
|---|---|---|
| 12. | பெற்றோர் நலன் பேணுதல் | 54 |
| 13. | அண்டை வீட்டாரின் உரிமைகள் | 62 |
| 14. | சகிப்புத்தன்மை | 67 |
| 15. | வெட்கம் | 71 |
| 16. | உண்மை | 76 |
| 17. | உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல் | 80 |
| 18. | பொறுமையும், சகிப்புத்தன்மையும் | 85 |
| 19. | நீதம் | 92 |
| 20. | போதுமென்ற தன்மை | 97 |
| | **தீயபண்புகள்** | |
| 21. | தடுக்கப்பட்டதை உண்ணுதல் | 101 |
| 22. | கஞ்சத்தன்மை | 105 |
| 23. | கேவலமாக எண்ணுதல் | 110 |
| 24. | பொறாமை | 114 |
| 25. | பிறரிடம் கையேந்துதல் | 117 |
| 26. | உறவினர்களை துண்டித்து நடத்தல் | 123 |
| 27. | பெற்றோரை வேதனைப்படுத்தல் | 128 |
| 28. | சந்தேக எண்ணம் | 132 |
| 29. | மோசடி செய்தல் | 137 |
| 30. | மற்றவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைக் கண்டு மகிழ்ச்சியடைதல் | 140 |
| 31. | நம்பிக்கைத் துரோகம் | 143 |
| 32. | முகஸ்துதி | 147 |
| 33. | பொருளடக்கம் | 152 |

كتب الجاليات
١٢
١٨٥

مكتب الدعوة بالسلي
هاتف ٠١١٢٤١٠٦١٥ تحويلة ٥٥٥ - ٠١١٢٤١٤٤٨٨ ناسوخ ٢٣٢

# الصفات الحسنة و السيئة



إعداد
قسم الجاليات بالمكتب

0501015

حساب التبرعات بمصرف الراجحي : SA2280000296608010070509
حساب التبرعات بمصرف الإنماء : SA5305000068200517913000
حساب التبرعات بنك البلاد : SA5615000999115390770007

تاميلي